# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 26 புதன்கிழமை (09.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 195


# மஹிந்தவின் விஜயத்துக்கு எதிராக தமிழகத்தில் ஆர்ப்பாட்டம், மறியல்!

## வைகோ, சீமான், திருமா, நெடுமாறன் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் கைதாகினர்!!

சென்னை, ஜூன் 09

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டங்களும், ரயில் மறியலும், கொடும்பாவி எரிப்புகளும் இடம்பெற்றன.**

**இதன்போது வைகோ,சீமான், திருமாவளவன், பழ. நெடுமாறன் உட்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர்.**

சென்னையில் நடந்த போராட்டத்தின் போது இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த பழ.நெடுமாறன், வைகோ, நல்லகண்ணு, இயக்குநர்கள் சீமான், டி.ராஜேந்தர் உள்ளிட்டோர் கைதாகினார்கள்.

ஜனாதிபதி மஹிந்த நேற்று புதுடில்லி சென்றடைந்தார். அதற்கு முன்னதாக. அவரது விஜயத்தைக் கண்டித்தும், அவரை வரவேற்கும் இந்திய அரசைக் கண்டித்தும் தமிழகத்தில் பல்வேறு கட்சிகள், தமிழர் அமைப்புகள் போராட்டத்தில் குதித்தன.

இலங்கை துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறிவித்திருந்தது. இந்தப் போராட்டத்திற்குப் பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

இருப்பினும், தடையை மீறி பேரணியும்,

(24ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்த இன்று பிரதமர் மன்மோகனுடன் முக்கிய பேச்சு; நேர்மையான அதிகாரப் பகிர்வுக்கு வலியுறுத்தப்படும்

## மேல் சபை உருவாக்கம் தீர்வுக்கு உதவாது என்று அபிப்பிராயம்



புதுடில்லி, ஜூன் 9

இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் மன்மோகன்சிங்குடன் பிரதிநிதிகள் மட்டத்திலான முக்கிய பேச்சுக்களை இன்று நடத்துவார்.

ஜனாதிபதி மஹிந்த இங்கு வந்து சேர்ந்தவுடன், அவருடன் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேச்சு நடத்தினார். இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அந்நாட்டு அரசு மாகாணங்களுக்கு உண்மையான - நேர்மையான - அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும் என்று இந்திய அரசு இம்முறை மீண்டும் உத்தரவாதம் கோரும் என்று அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த இந்து'' பத்திரிகை தெரிவித்துள்ளது. (23 ஆம் பக்கம் பார்க்க)

## சீபா வர்த்தக உடன்படிக்கையால் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 09

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் செய்யப்பட்ட 'சீபா' வர்த்தக உடன்படிக்கை இந்நாட்டின் இறைமைக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்த உடன்படிக்கையின் ஊடாக இலங்கையின் வர்த்தகத்தை வீழ்ச்சி அடையச் செய்வதற்கு இந்தியா முயற்சிக்கின்றது என்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் குற்றம்சாட்டினார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக அவர் நேற்று நாடாளுமன்றில் விசேட கூற்று ஒன்றை நிகழ்த்தியபோதே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. தூதுவர் இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா வியூடெனிஸ் அம்மையார் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். ஆயர் அதிவண தோமஸ்

(24ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதம்; ஆயுதக் குழுக்களுக்கு கவசமாக அரசியல் பலம்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு எம்.பி. சரவணபவன்

கொழும்பு, ஜூன் 9

குடாநாட்டில் தொடரும் குற்றச் செயல்களின் பின்னால் சட்ட விரோத ஆயுதக் குழுக்களும் அவர்களுக்கு கவசமாக அரசியல் பலமும் இருப்பது புலப்படுகின்றன.

ஜனநாயக நீரோட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டு விட்டதாகக் கூறிக் கொள்ளும் முன்னாள் ஆயுதக் குழுக்களே இக்குற்றங்களின் பின்னால் நிற்கின்றன என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது.



மக்கள் தமக்கு இழைக்கப்படும் குற்றங்களை நேரடியாக பொலிஸில் முறையிட முடியாத அளவுக்கு கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதம் யாழ்.குடாநாட்டில் வளர்ந்து வருவது மேலும் ஆபத்தானதாகும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# எஸ்.எஸ்.பி. மறு தவணையில் சமுகம் தராவிடின் கடும் நடவடிக்கை எடுக்கும் நிலை ஏற்படும்

## சாவகச்சேரி நீதிவான் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் படுகொலைச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு நேற்று சமுகமளிக்காத யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை (எஸ்.எஸ்.பி.) அடுத்த தவணைக்குத் தவறாமல் சமுகமளிக்க வேண்டும் என்று சாவகச்சேரி நீதிமன்றம் கண்டிப்பான உத்தரவை விடுத்தது.

அடுத்த தவணையில் எதிர்வரும் 18 ஆம் திகதி - சமுகமளிக்கத் தவறினால், நீதிமன்றத்தை அவமதித்தமைக்காகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

இந்த வழக்கின் முந்திய தவணையின் போது ஜூன் 8ஆம் திகதிக்கு (நேற்றைய தினத்துக்கு) ஒத்திவைத்து அன்றைய தினம் விசாரணைக்கு சாட்சிகளுடன் சமுகமளிக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி இந்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எனினும் விசாரணைக்கு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமுகமளிக்கவில்லை எனப் பொலிஸார் பிரஸ்தாபித்த போதே நீதிவான், அடுத்த தவணை

(23ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடு றெட்பானாவில் 2 வாரங்களுக்கு முன்னர்

# மீள்குடியமர்ந்த 2 பிள்ளைகளின் தாய் மீது பாலியல் வல்லுறவுக் கொடூரம்!

## 6 படையினர் கைதாகி விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஜூன் 9

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான விசுவமடு றெட்பானா குடியேற்றக் கிராமத்தில் மீள்குடியேறிய 2 பிள்ளைகளின் தாயான 25 வயதுப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கொடூரச் சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட இராணுவப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்த ஆறு படையினர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

றெட்பானா பகுதியில் 2 வாரங்களுக்கு முன்னர் மீளக்குடியமர்ந்த 2 பிள்ளைகளின் தாயான இளம் பெண் தமது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த சிலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பதவிக்காலத்தை பத்துத் தடவைகள் கூட நீடிக்கலாம்

## அதற்கு மக்கள் ஆணை உண்டு என்கிறார் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 09

ஒருமுறை அல்ல, பத்துத் தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கக்கூடிய வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்காகத்தான் மக்கள் எமக்கு கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி உள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகத்தான் எமக்கு தேர்தல்களில் மக்கள் அதிகாரத்தை வழங்கி உள்ளனர்.

நாட்டில் சட்டம், நீதி சீர்குலைந்துள்ளது எனக் குற்றம் சாட்டுபவர்கள் சட்டத்தை மதிக்கின்றார்களா? ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை பொலிஸார் கண்டுபிக்கவில்லை எனக் குற்றம் சாட்டுபவரின் மருமகனையும் பொலிஸாரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

யுத்தத்தை வெற்றி கொண்டது ஜனாதிபதியின் தலைமைத்துவமே. அதை வேறு யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. சிலர் தமது தலைமைத்துவமே யுத்த வெற்றிக்குக் காரணம் என தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்து விட்டபோதும் யுத்தத்தின் காரணகர்த்தாக்களை ஒடுக்கும் வரை அவசரகாலச்சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்தவேண்டியுள்ளது.

ஆயுதக் கொள்முதல் சர்ச்சையில் சிக்கியுள்ள மருமகன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சட்டம், நீதி குறித்து இச்சபையில் பேசுபவர்கள் தமது மருமகன் சட்டத்தை மதிக்கின்றாரா எனவும் பார்க்க வேண்டும்.

சிலர் ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.க. தலைமைப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு சரத் பொன்சேகாவை ஐ.தே.கட்சித் தலைவராக்குவதற்கு முயற்சி செய்கின்றனர் - என்றார். (ஒ-சி)

# 9 மாகாணங்களின் போட்டியாளர்கள் பங்குபற்றும் தமிழ்மொழித் தினப்போட்டி

## யாழ். வேம்படியில் 19, 20 ஆம் திகதிகளில்

அச்சுவேலி, ஜூன் 9

தேசிய மட்டத்திலான தமிழ் மொழித்தினப்போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. போட்டிகளில் கலந்துகொள்வதற்கு ஒன்பது மாகாணங்களிலிருந்து மாகாணமட்டத்தில் முதலாம், 2ஆம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப்போட்டிகள் 2010இல் கலந்துகொள்ளவிருக்கும் போட்டியாளர்களை 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பதிவு செய்துகொள்ளுமாறு கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு கல்விப்பணிப்பாளர் எஸ். இதயராசா அறிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் 19ஆம் திகதி சனிக்கிழமை தனி நிகழ்ச்சிகள், எழுத்தாக்கப் போட்டிகளும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குழு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-11)

## சேவைநலன் பாராட்டு



ஆசிரியை

**திருமதி பாக்கியம் சிவஞானம்**

**B.A. Dip. in Edu. SLTS - I**

அவர்கள் எமது பாடசாலையில் 6 வருடங்கள் சமூகக்கல்வி ஆசிரியையாகப் பணி புரிந்து கடந்த 22.04.2010 அன்று ஓய்வுபெற்றுள்ளார். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(99271)

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



07.06.2010 அன்று அகாலமரணமடைந்த

**சுப்பிரமணியம் பொன்சேகரா**

(பரிசாரகர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரும்,
உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி அவர்களின் அன்புக் கணவரும், எமது பாடசாலையின் ஆசிரியைகளான திருமதி நந்தரூபி - நித்தியானந்தன், திருமதி நாகநந்தினி - நந்தகுமரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய

**அமரர் சுந்தரம் விநாயகமூர்த்தி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்,
மீசாலை. (சி/568182)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள்.

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன் 9

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2245ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'L' என்ற ஆங்கில எழுத்தும் 3/5/9/0/6/9 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 3/5/9/0/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டை வைத்திருக் கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/9/0/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/0/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 116 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,231 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,397 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,22,685 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

இடமிருந்து வலமான அமைப்பில் 3/5/9/0/6என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/5/9/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 131 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/5/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,246 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3/5என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,257 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'L' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 49,013 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தருமலிங்கம் மரியகொறற்றி (தீபம்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் குருசோ வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தருமலிங்கம் மரியகொறற்றி நேற்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தருமலிங்கத்தின் (தறுமு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - திரேசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகராசா - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் வோல்ட்டர் ஸ்கொட் (கனடா), வெஸ்லின் சிம்சன் (பிரான்ஸ்), றொஷான் டேமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றெஜினா ரூபியின் அன்புச் சகோதரியும் ஜீவரட்ணம், கமலாதேவி (நோர்வே), கணேசலிங்கம், லீலாவதி, விக்டோரியா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அல்பிரட், அன்னலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் மேரி ஜெசீனா, ஜெயூரி ஆகியோரின் மாமியாரும் வக்சன், வக்சிகா, ஜெரிக் அஸ்வெல் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.06.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும். இறுதி ஆராதனையைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*196/1, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0776845308* (99272)

தகவல்:
குடும்பத்தினர்.

## சண்முகம் சுந்தரேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் உரிமையாளர், மொடேன் ஸ்ரோர்ஸ்)

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா கந்தசுவாமி கோயில் வீதி, இலக்கம் 25/8 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சுந்தரேசன் நேற்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தாட்சாயினி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகானந்தன் மற்றும் சிவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பார்த்தீபன், வர்ணனி மற்றும் ரதிவதனை, ஜெயஅமுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா, வசந்தராணி, காந்திமதி, உமாதேவி, செல்வராணி, அமுதராணி, இராசகோபாலன், மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாலிங்கம், அமரர் அமிர்தகுணநாதன், உதயகுமார், நமசிவாயம்பிள்ளை (ஆசிரியர், காரைநகர்), சிவானந்தன், விஜயராணி, சிறிசங்கர், அமரர் அழகேந்திரன், பிறேமச்சந்திரன், சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2010) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25/8, கந்தசாமி கோயில் வீதி,*
*வவுனியா.*

தகவல்: மனைவி,
பிள்ளைகள்.

## சின்னத்தம்பி ஜெகநாதன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சிற்றம்பலம் வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜெகநாதன் நேற்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் தனலட்சுமி, மகேஸ்வரி, பொன்னுமாலா, வெள்ளையம்மா, சுப்பிரமணியம், திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதியின் அன்புக் கணவரும், உதயகுமார், உதயகுமாரி, ஜெயக்குமார், சுரேஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரேந்திரன் (கச்சேரி), குலபதி, குலேந்திரன், அமரர் மாலினி, அமரர் கௌசலாதேவி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருகோணமலையில் உள்ள சகோதரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(99273)

தகவல் :
த.குலபதி
(மருமகள்).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அமுக்கி வாசிக்கப்படும் ஈழத்தமிழர் விவகாரம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று இந்தியா சென்றுள்ளார். கடந்த ஜனவரி மாதத்தில் இரண்டாவது தடவையாகவும் இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும். அது மட்டுமன்றி, இந்தியாவின் உதவி ஒத்தாசையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் வென்றதன் பின்னர், ஜனாதிபதி மேற்கொள்ளும் முதலாவது புதுடில்லிப் பயணமும் இதுவே.

ஜனாதிபதி தமது விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அந்நாட்டு ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் ஆகிய உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அவர் தமது இந்திய விஜயத்தின் போது ஆறு முக்கிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவார் என்று உத்தியோக பூர்வமாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின் போது, இலங்கையின் நீண்ட காலத் தொழுநோயாக, அதனைப் பீடித்திருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகப் பேசப்படும் என்ற எதிர்பார்ப்பே பொதுவாக ஈழத்தமிழர் மத்தியில் உண்டு. மிகக் குறிப்பாக ராஜீவ் - ஜே.ஆர் காலத்தில் 1987ஆம் ஆண்டில் கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ், தமிழ்மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்கும் இலங்கை அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்வது குறித்து இந்தியத் தலைவர்களுடன் மஹிந்தா பேச்சு நடத்துவார் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் நிலவுகின்றது.

அதுமட்டுமன்றி, இந்தியத் தரப்பிலும் அரச மட்டத்தில், இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால் தமிழர்களுக்குரிய நியாயமான தீர்வு ஒன்று காணப்பட்டாக வேண்டும் என்று இந்திய அரசுத் தலைவர்கள் கடந்த ஒரு வருடமாகக் கூறிவந்தார்கள். ஆகக் கடைசியாக தெஹ்ரானில் நடைபெற்ற ஜி-15 மாநாட்டு வேளையிலும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அமைச்சர் பீரிஸிடம் இதனை வலியுறுத்தியிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆனால் -

ஜனாதிபதி மஹிந்தா நேற்று இந்தியா புறப்படுவதற்கு முன்னதாக, திங்கட்கிழமையன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருடனும் இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேசினார். ஆனால் திட்டவட்டமான காத்திரமான அரசியல் அசைவு எதனையும் வெளிப்படுத்தவில்லை. அழைத்தோம், வந்தார்கள், பேசினோம், முன்வைக்கப்பட்ட உத்தேச தீர்வு குறித்துத் தெளிவாகக் கேட்டறிந்தோம் என்ற வழுவல், நழுவல் போக்கை காட்டிப் பயணமாகிவிட்டார்.

அதனால் -

இந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் போதும் அவர்களுக்கும் ''டிமிக்கி'' கொடுத்து, அல்வா காட்டி இனப்பிரச்சினை குறித்து பிடிபடாமல் பேசிவிட்டு வருவாரோ என்ற சந்தேகம் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கின்றது. நீண்ட காலமாகத் தமக்குரிய உரிமைகளை வழங்குவதில் தகிடுதத்தம் செய்து வரும் சிங்களத் தலைவர்களில் இவர் உச்சாணிக் கொப்பில் நிற்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

இந்தியாவையும் சீனாவையும் தமக்கருகில் இருத்தி, போரை வென்ற அனுபவத்தைக் கொண்டு தமிழர் களின் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் தட்டிக் கழிக் கும் 'யுக்தி' எதனையும் கையாளும் 'சமர்த்தராகி' விடுவார் என்று ஈழத்தமிழ் மக்கள் எண்ணுவதில் தப்பு ஏது?

இனப்பிரச்சினை விவகாரத்தில், காத்திரமான செயற்பாட்டு ரீதியான ஆரம்பத்தையேனும் காட்டாமல், போரில் தனது அரசு வெல்வதற்கு உதவிய இந்தியத் தலைமைகளை இனிக்க இனிக்க வாயாரப் பாராட்டி உறைய வைத்து, ஈழத்தமிழர் விவகாரத்தை இப்போதைய விஜயத்தின் போது அமுக்கி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இலங்கையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் அழுத்தம் கொடுத்துச் செயற்படும் இந்தியாவின் வெளிவேட ஆர்வத்தைத் தணித்துவிடக் கூடிய ராஜதந்திரத்திலும் அவர் ஈடுபட்டு ''வெல்லக்கூடும்''! அந்த நிலையை நோக்கி இலங்கை ஜனாதிபதி அடிவைத்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை!

# பூநகரிப் பகுதியில் 1,230 வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

### ஆளுநர் சந்திரசிறி தகவல்

கிளிநொச்சி, ஜூன் 9

பூநகரிப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் சொந்தக் காணிகளில் 9 கோடி 49 லட்சம் ரூபா செலவில் 1,230 வீடுகளை அமைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடொன் றுக்குத் தேவையான கூரைத் தகடுகள் மற்றும் உபகரணங்களுடன் 80 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். இதற்கமைய 1,230 வீடுகளை நிர்மாணிக்க 9 கோடியே 49 லட்சம் ரூபா நிதி செலவு செய்யப்படவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருமாத காலத்துக்குள் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அந்த மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவித்த அவர், இதன் மூலம் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 1,230 குடும்பங்கள் நன்மையடைய உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

பூநகரியில் மீளக்குடியமர்த்தப் பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்றும் - இந்த வீடமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான பணிப்புரைகளை சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் தான் வழங்கியுள்ளார் என்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி சுட்டிக்காட்டினார்.

1,230 வீடுகளை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை அரசு மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## ஷெல்லுக்குப் பலியான இருவரின் சடலங்கள் உறவினரிடம் கையளிப்பு

தென்மராட்சி, ஜூன் 9

சாவகச்சேரி, தனங்கிளப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் குப்பை எரியூட்டப்பட்ட வேளை இடம்பெற்ற ஷெல் குண்டு வெடிப்பில் பலியான இருவரின் சடலங்கள் பிரதேச பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு பணிக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலங்களைப் பார்வையிட்ட பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு பணித்தார்.

ஷெல் வெடித்ததில் கனகசபை பிரகாஸ், மணியம் பொன்சேகரா ஆகியோர் பலியானது தெரிந்ததே. (ஒ-207-231)

## பிரிட்டனின் 'த எக்கனோமிஸ்ற்' சஞ்சிகை இதழ்கள் சுங்கத் திணைக்களத்தால் பறிப்பு

கொழும்பு, ஜூன் 9

பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'த எக்கனோமிஸ்ற்' சஞ்சிகையின் மே மாதம் 22ஆம் 29ஆம் திகதி இதழ்கள் இலங்கையின் சுங்கத் திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த இதழ்களில் இலங்கை குறித்து கடுமையாக விமர்சனங்கள் வெளியாகி இருந்தன. அதனாலேயே அந்த இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக இராணுவ வெற்றி, அகதிகளின் மீள்குடியேற்றத்தில் நிலவும் தாமதங்கள், அரசியல் தீர்வு யோசனைகள் ஆகியன குறித்து ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரமாகி இருந்தன. இந்நிலையிலேயே மேற்படி திகதிகளில் வெளிவந்த இச்சஞ்சிகை இதழ்களை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்து வைத்துள்ளது என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் சுங்கத் திணைக்களம் இது குறித்து எந்த வொரு காரணத்தையும் இன்னமும் வெளியிடவில்லை.

இந்த இதழ்கள் விஜித யாப்பா புத்தக வெளியீட்டு நிறுவனத்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. சுங்கத் திணைக்களம் இந்த இதழ்களைத் தகவல் திணைக்களத் துக்கு அனுப்பி வைத்துள்ளது என்றும் திணைக் களத்தின் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக் கப்படும் என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 'ஐபா' விருது விழாவின் தோல்விக்கு அவசரகாலச் சட்டமே காரணம்

### ஐ.தே.கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9

ஐபா விருது வழங்கல் விழா தோல்வியில் முடிந்தமைக்கு இந்நாட்டில் அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கின்றமையே காரணம் என்று ஐ.தே. கட்சி எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்றைய அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சுமார் 60 கோடி ரூபா செலவு செய்து அரசால் நடத்தப்பட்ட ஐபா விருது வழங்கல் விழாவில் எமது நாட்டு சினிமா நட்சத்திரங்கள் புறக் கணிக்கப்பட்டனர். எதிர்பார்க்கப் பட்ட இந்திய நட்சத்திரங்களும் வரவில்லை.

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கின்றமையே இந்நிகழ்வு தோல்வியில் முடிவடையக் காரணம். யுத்தம் முடிந்து நாட்டில் முழுமையான சமாதானம் ஏற்பட்டுள்ளது என்று அரசு கூகிறது. மறுபுறம் புலிகள் கொழும்பில் தொடர்மாடி வீடுகள் அமைத்துள்ளனர் என்கிறது.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான கருத்துகள் தெரிவிக் கப்படுவது நாட்டிற்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். சுற்றுலாப்பயணிகள் இங்கு வரத் தயங்குவர்.

நாட்டில் முழுமையான சமாதானம் ஏற்பட்டுள்ளது என்று கூறும் அதே அரசுதான் இங்கு புலிகள் இருக்கின்றனர் என்றும் கூறுகிறது. இக்கூற்று எமது நாட்டுக்கு வரவுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கிடையே பயத்தை ஏற்படுத்தும். - என்றார். (ஒ-சி)

## யாழ். இந்துவின் மாணவர்கள் 135 பேர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு

### கொக்குவில் இந்துவில் இருந்து 39 பேர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

2009/2010ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வெட்டுப்புள்ளி அடிப்படையில் யாழ். இந்துக்கல்லூரியில் இருந்து 135 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர். இவர்களில் 31 மாணவர்கள் பொறியியல் துறைக்கும், 9 மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் தெரிவாகியுள்ளனர்.

கடந்தவருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் வெட்டுப்புள்ளி நேற்றுமுன் தினம் வெளியாகியது. இதன் அடிப்படையிலேயே மேற்படி மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகினர்.

இவர்களில் ஏனைய அனைத்துத் துறைகளிலும் கணிசமான எண்ணிக்கையினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் இந்து

இதேவேளை, கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து 39 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் 8 பேர் பொறியியல் துறைக்கும், ஏனைய 31 பேர் மற்றைய துறைகளுக்கும் தெரிவாகியுள்ளனர். (ஒ-10-9)

## தாளையடி அந்தோனியார் திருவிழா இம்முறை நடைபெற ஏற்பாடு

கொழும்புத்துறை, ஜூன் 9

வடமராட்சி கிழக்கு இடப்பெயர்வின் பின்னர் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா இம்முறை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயப்பகுதியில் மக்கள் மீளக்குடியமராத நிலையில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வசித்து வருகிறார்கள்.

இத்திருவிழாவுக்கு பக்தர்கள் சென்றுவர வசதியாக பருத்தித்துறை, சில்லாலை, யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பங்கு மக்கள் தெரிவிக்கின்றனர்.

பக்தர்கள் அடையாள அட்டை, உணவு, குடிதண்ணீர் வசதிகளுடன் புதுக்காடு வழியாக வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-135)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 27 | 10.06.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : திரயோதசி |
| | மு.இ. 07.18 வரை |
| நட்சத்திரம் | : பரணி |
| | மு.ப. 10.35 வரை |
| சுபநேரம் | : 07.22 - 08.52 |
| ராகுகாலம் | : 01.22 - 02.52 |

## சாவகச்சேரி லிகோரியார் ஆலய வளவில் கருணாகரர் அடிகள் நினைவு மண்டபம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்துடன் இணைந்துள்ள கட்டடம் புனரமைக்கப்பட்டு தேவாலயத்தின் முன்னைய பங்குத் தந்தை கருணாகரர் அடிகள் நினைவு மண்டபம் என்றும் பெயரிடப்பட்டு கடந்த 6ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு யுத்த வேளையில் சேதமடைந்த கட்டடம் பங்குத் தந்தையாகவிருந்த அருட்திரு இரவிச்சந்திரன் அடிகளின் முயற்சியில் ஹரித்தாஸ் - கியுடெக், யேசுசபை அகதிகள் பணி (ஜே.ஆர்.எஸ்), சோ-ஆ ஆகிய நிறுவனங்களின் உதவியுடனும் பங்கு மக்களின் பங்களிப்புடனும் புனரமைக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி எம்.எல். தயாகரன் அடிகளின் நெறிப்படுத்தலில் பங்கின் வின்சன்-டி-போல் சபையின் தலைவர் ம.யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி சகாயநாயகம் அடிகள் மண்டப பெயர்ப்பலகையினைத் திரை நீக்கம் செய்ததுடன் மண்டபத்தினையும நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

யாழ். திருச்சபை பொதுநிலையினர் சபை உறுப்பினரும் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலருமான கில்பேட் குணம், வின்சன்-டி-போல் சபையின் மத்திய குழு உறுப்பினர்கள் உட்பட பெருமளவு மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். பங்கைச் சேர்ந்த சி.தேவசகாயம்பிள்ளை நன்றியுரை வழங்கினார். (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய முன்னாள் அதிபர்

### சந்திரசேகரம் நடேசபிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(சி/568174)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.05.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் செல்லத்துரை சக்கரவர்த்தி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.06.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி (குணபால் கடையடி),
வராகி அம்மன் கோயில் வீதி,
கோக்குவில் மேற்கு. (99261) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பொன்சேகரா

(பரிசாரகர், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை)



தனங்கிளப்பை பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்சேகரா கடந்த 07.06.2010 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் அகாலமரணம் அடைந்துவிட்டார்

அன்னார் ரஞ்சினியின் அன்புக் கணவரும் தனோயா, கியானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் சுப்பிரமணியம்-மகேஸ்வரி தம்பதிகளின் அருமை மகனும், அமரர் தம்பிஐயா -மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமக்னும், செல்வி உருத்திராவின் அன்புச் சகோதரனும், விஜயறஞ்சன் (கனடா), சிவறஞ்சன் (கனடா) ஜெயறஞ்சன் (கனடா), றஞ்சன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2010) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை. தகவல்: திருமதி பொ.ரஞ்சினி (மனைவி).
T.P: 077 0344264

## தவறிவிட்டது

நேற்று (08.06.2010) செவ்வாய்க் கிழமை உடுப்பிட் டிக்கும் - தம்பசிட்டிக்கு மிடையில் 751 வழி இலக்க மினிவானில் உடுப்புப்பாசல் ஒன்று மாறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ''ரஜனி பீடா'' ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும்.

தகவல்களுக்கு : T.P.:- 0213008132

போக்காலை வீதி, உடுப்பிட்டி. தகவல் : க. சிவம்.

## தவறிவிட்டது

கைதடியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றின் திருமுறைப்பதிகப் புத்தகங்கள் அடங்கிய பாசல் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கனகம்புளியடி ஊடாகக் கொடிகாமம் செல்லும் C.T.B. பஸ்ஸுல் கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் பெண் பயணி ஒருவரிடம் தவறுதலாகக் கைமாறிவிட்டது.

இப்புத்தகங்கள் ஆலய உற்சவ விழாவிற்கு அவசரமாகத் தேவையாக இருப்பதனால் இதனை வைத்திருப்பவர் கைதடிச் சந்தியில் உள்ள K.S. பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்திலோ அல்லது 0776155443 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள் தேவை

விண்ணப்பதாரிகள்

* 25 வயதுக்குள் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த கல்வித்தகைமை மற்றும் மேலதிக தகைமைகள். (பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள் தகுதியிருப்பின் விண்ணப்பிக்கலாம்)
* தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு அவசியம். (சிங்கள மொழி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)
* தெரிவு செய்த விண்ணப்பதாரிகளுக்கு சம்பளம் +மேலதிகக் கொடுப்பனவு.
* சந்தைப்படுத்தல் அனுபவம்மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உடனடியாக விண்ணப்பிக்கவும், தொடர்பு கொள்ளவும்.
ஹிரான் பீற்றர்.
0773427843

## ஈசன் திருமண சேவை

புளியடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
Telephone No: 021 7900315, 0773618507
உள்நாடு, வெளிநாடு டாக்டர், இஞ்சினியர் உட்பட போதியளவு மணமகன், மணமகள் உண்டு. தொடர்பு நேரடியாகவும் தபால் மூலமாகவும்.

## விற்பனைக்கு

அழகான கூட்டுடன் லவ்பேட்ஸ் குருவிகள் விற்பனைக்கு.
தொடர்பு: 0776701481

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ 1974, ஆயிலியம், முதலாம் பாதம், 8 செவ்வாய், கிரகபாவம் $63\frac{1}{4}$ அரசாங்க உத்தியோக மணமகளுக்கு அரசாங்க உத்தியோக அல்லது சொந்த தொழில் உள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 0212226589
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

## வீடு கடை வாடகைக்குத் தேவை

யாழ்.நகர்ப் பகுதியில் இருந்து 5 கி.மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் (யாழ்.நகர், நல்லூர், சுண்டுக்குழி) விருந்தினர் விடுதி அமைப்பதற்கு வீடு ஒன்று தேவை. அத்துடன் சைனீஸ் உணவு வகைகள் விற்பனை செய்வதற்கு ஒரு கடையும் தேவை. கட்டட திருத்த வேலைகள் இருந்தால் எம்மால் திருத்தம் செய்யப்படும். பிரதான வீதிகளில் கட்டடம் இருந்தால் நல்லது.

தொடர்பு: 0775405596

## கண்ணீர் அஞ்சலி



எமது முன்னாள் ஆசிரிய சகோதரத்துவத் தலைவரும் தற்போதைய எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினருமான திரு.இ.நித்தியானந்தன் அவர்களின் மாமனான

### சுந்தரம் விநாயகமூர்த்தி

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தாரின் துயரத்தில் பங்கு கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(99270)

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் மாணிக்கராசா



இணுவில் கிழக்கு, சிவகாமியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மாணிக்கராசா நேற்று (08.06.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமகன், க.சிதம்பரநாதன் (அமுதா வர்த்தக நிலையம்).
சிவகாமியம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு. (99263)

### செல்வரட்ணம் சண்முகநாதன் (சண்)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் சண்முகநாதன் (சண்) நேற்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பார்வதிதேவியின் அன்புக் கணவரும் சர்மிளா (சசி), அஜந்தன், நிஷா, ரஜீத் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் சிவானந்தம் (மணி அக்கா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, மகேந்திரநாதன், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிவகுமார், கிளியன், ஈசன் (யாழ். தபால் நிலையம்), திருநாவுக்கரசு, ஜெயபாலசிங்கம் (தபால் நிலையம், எழுதுமட்டுவாழ்.), இந்திராதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தா.ஈசன் - மைத்துனர் (தபால் நிலையம், யாழ்ப்பாணம்.)
ஈச்சமோட்டை. (99264)

### சுந்தரம் விநாயகமூர்த்தி



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் விநாயகமூர்த்தி நேற்று (08.06.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் சிவக்கொழுந்துவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு வேலுப்பிள்ளை, பூரணம் ஆகியோரின் சகோதரனும் தங்கம்மா காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் இராசையா, நல்லம்மா, சோமசுந்தரம், விஜயரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் நாகநந்தினி (ஆசிரியை, மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), நந்தகுமார் (LIVCO, சாவகச்சேரி), நந்தரூபி (ஆசிரியை, மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), நந்தகோபன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), நாகஜோதி , நாகரோகினி (ஆசிரியை, அ.த.க. பாடசாலை, கச்சாய்) ஆகியோரின் தந்தையும் நந்தகுமாரன், நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கோகுலன், இராசலிங்கம் (ஆசிரியர், மிருசுவில் G.T.M.S.), சுயந்தா, ரஜிந்தா (யாழ்.மாவட்டச் செயலகம்) ஆகியோரின் மாமனாரும் சங்கவி, சாரங்கா, சங்கீதா, பிரியங்கன், சிந்துஜன், லக்சிகன், திவ்யரதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2010) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை. (99265) தகவல்: குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21.01.1921
மறைவு 11. 05. 2010

(சி/568175)

### அமரர் மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை

நிர்வாகி - அடியார்மடம் - செல்வச்சந்நிதி
(ஓய்வுபெற்ற அதிபர் - யா/கம்பர்மலை வித்தியாலயம்
ஆசிரியர் - கெங்கெல்லை அரசினர் பாடசாலை (கண்டி),
யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை)

கடந்த 11.05.2010 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச்சடங்கில் அஞ்சலி செலுத்தியும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10.06.2010) வியாழக்கிழமை அன்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு வித்தியாசாலை வீதி,
வல்வெட்டித்துறை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015ஆம் ஆண்டுக்கிடையில் குடாநாட்டின் அபிவிருத்தியில் மாற்றங்கள் நிகழவேண்டும்

## அரச அதிபர் கணேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்9

யாழ்.மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கிடையில் அபிவிருத்தியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

இதற்கான திட்டங்களைத் தயாரித்து திறம்பட செயற்படுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் திணைக்களத் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி என்பது ஒரு துறை சார்ந்ததாக மட்டுமன்றி சகலதுறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டும்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் எனப் பல்வேறு துறைகளையும் கட்டி எழுப்ப வேண்டிய தேவை இன்றுள்ளது. இத்தகைய பணியினை முன்னெடுக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களும் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான திட்டங்களைத் தயாரித்து அத்திட்டங்களை அமுல் படுத்துவதிலும் முழு அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் 2010ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவுகள் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-9)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி,ஜூன்9

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறையில் உள்ள சத்துணவுக் கூடத்தில் திருமதி யோ.பரமேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது. (50-204-236)




# நெடுந்தீவு தொடர்ந்தும் இருளில் மாணவர்கள் பெரும் அவதி நிலையில்

நெடுந்தீவு,ஜூன்9

நெடுந்தீவு கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளது. இதனால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அவலப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கும் மின்பிறப்பாக்கி இயந்திரம் பழுதடைந்தமையால் சிறிய மின்பிறப்பாக்கியின் உதவியுடன் பகல்வேளைகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை மின்விநியோகம் நடைபெற்று வருகின்றது. ஆனால் இரவில் முற்றாக மின்சாரம் வழங்கப்படுவதில்லை. பகல் வேளையில் பிற்பகல் 4 மணிவரை மின்சாரம் வழங்கப்பட்டாலே அலுவலக வேலைகளைச் சீராக மேற்கொள்ள முடியுமென அங்குள்ள அலுவலகங்களில் கடமையாற்றுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைப்போலவே இரவு வேளைகளில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடரமுடியாமல் அல்லலுறுகின்றனர்.

இந்த நிலையில் பழுதான மின்பிறப்பாக்கியைத் திருத்துவதற்கென வந்த குழுவினர் எதையுமே செய்யாது திரும்பிச் சென்றுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (க-111)

# பொலித்தீன் பைகளால் நிரம்பும் யாழ்.முற்றவெளிப் பிரதேசம்

யாழ்ப்பாணம், ஜூன்9

யாழ்.முற்றவெளிப் பிரதேசம் பொலித்தீன் பைகளால் நிரம்பிக் காணப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமையுடன் முற்றவெளியில் நிறைவுபெற்ற வசந்த விழாவுடன் 'சொப்பிங் பாக்' மற்றும் பொலித்தீன் பைகள் என்பன அப்பகுதியெங்கும் நிறைந்து காணப்படுகின்றன.

இந்தப் பொலித்தீன் பைகள் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு வீதிகளுக்கும் வந்துவிடுகின்றன.

யாழ்.மாநகர சபைத் தொழிலாளர்கள் தினமும் பொலித்தீன் பைகளைச் சேகரித்துத் தீயிட்டுக் கொளுத்திவருகின்றபோதிலும் மீண்டும் அப்பகுதிகளில் பொலித்தீன் பைகள் குவிந்துவிடுகின்றன (50-224)

# பளையில் மீளக்குடியமர்ந்த மக்கள் பாம்புக்கடிக்கு இலக்காகி வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன்9

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் பாம்புக் கடிக்கு இலக்காகி வருகின்றனர்.

படுக்கைகளில் வைத்து பாம்பு கடித்ததாக இரவு வேளைகளில் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்துவரப்படுகின்றனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் நிரந்தரக் குடியிருப்புகள் இல்லாததால் தற்காலிகமாகக் கொட்டில்கள் அமைத்து வசித்து வருவதாகவும் பாம்புகள் இக்கொட்டில்களுக்குள் இரவு வேளையில் புகுந்து கடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளைகளில் பாம்பு கடித்தால் உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கடியுண்டவர்களை அழைத்து வருமாறு பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (50-207)

# குலை குலையாக விலை போகும் நுங்கு; பயணிகள் கண்வைத்ததால் வந்த பயன்!

யாழ்ப்பாணம்,ஜூன்9

சுற்றுலாப் பயணிகள் பனம் நுங்கு மீது அதிக பிரியம் கொண்டு அவற்றை வாங்கிப் பருகித் தமது தாகத்தைத் தீர்க்கத் தொடங்கியுள்ளனர். தற்போது குடாநாட்டில் நுங்கு சீசன் ஆரம்பமாகியுள்ளது.

இதனால் யாழ்.குடாநாட்டைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் பனம் நுங்கு மீது அதிக விருப்பம் கொண்டு அவற்றினைக் குலை குலையாக வாங்கிக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாகத் தீவுப் பகுதிக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளே அங்குள்ள பனை மரங்களில் குலை குலையாக காய்த்துத் தொங்கும் நுங்குகளைக் கண் வைத்து அவற்றினைப் பருகவேண்டுமென்ற விருப்பில் என்ன விலை கொடுத்தேனும் அதை வெட்டி இறக்கிக் கொண்டு செல்கின்றனர். சிலர் இதை அவ்விடத்திலேயே கூடியிருந்து பருகியும் மகிழ்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளின் நுங்கு மீதான பிரியத்தால் பனம் நுங்குக்கும் இப்போது கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு குலை நுங்கின் விலை 250 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. (எ-224)

# மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் இன்று கணனி அறை, மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன்9

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வித்தியாலய மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட கணனி அறைத் திறப்பு, பிரதான மண்டபத்திற்கு ஸ்தாபகர் காசிநாதர் பெயர் சூட்டி திரைநீக்கம் செய்தல், மாணவ தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டல், வித்தியாலய முன்னாள் அதிபர் நா.சிவசோதி நினைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இன்று இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், வித்தியாலய முன்னாள் அதிபர் செ.சிவநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வித்தியாலய ஸ்தாபகர் பரம்பரையைச் சேர்ந்தவரும் திருக்கணித நிலைய முகாமையாளருமான கா.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்வர். (50-207)

# விலைப் பட்டியலின்றி வியாபாரம்; வியாபாரிகள் இருவருக்கு தண்டப் பணம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

விலைப்பட்டியல் இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரண்டு வர்த்தகர்களுக்கு யாழ்.நீதிமன்றம் தண்டப் பணம் அறவிட்டதுடன் எச்சரிக்கையினையும் செய்து விடுவித்துள்ளது.

அரியாலை, நல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கே இவ்வாறு தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது விலைப்பட்டியல் இன்றி வியாபார நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் குறித்த இரண்டு வர்த்தகர்களுக்கும் எதிராக யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கினை கடந்த 4ஆம் திகதி விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.ஆனந்தராஜா இரண்டு வர்த்தகர்களுக்கும் தண்டப்பணம் விதித்ததுடன் கடுமையாக எச்சரிக்கை செய்தபின் விடுவித்துள்ளார். (எ-9)

# பாடசாலை கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன்9

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ். ஜேரூபசிங்கம், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கிரிக்கெட் விளையாடும் பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (50)



சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுவாமி கருணாகரர் நினைவு மண்டபத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.பேராலய பங்குத் தந்தை அருட்பணி சகாயநாயகம் அடிகள் நினைவு மண்டபத்தினை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் பங்குத் தந்தை அருட்பணி எம்.எஸ்.தயாகரன் அடிகள் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் நினைவு மண்டபத்தின் முகப்புத் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.கிருஷ்ணராஜா அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவிக்கு சைக்கிள் ஒன்றைக் கையளிப்பதையும், அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்த நடராசா, உப அதிபர் கு.விமலன் ஆகியோர் நிற்பதையும் முதல் படத்திலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை இரண்டாவது படத்திலும், இந்த நிகழ்வில் வெளியிடப்பட்ட ஆசிரியர் க.ஸ்ரீநந்தகோபன் எழுதிய எமது நல்வாழ்வு நூலின் முதற்பிரதியை வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கௌரி மதிவர்னன் பெற்றுக் கொள்வதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:நந்தன்)


# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **758**

சீட்டிழுப்பு திகதி **07.06.2010**

எழுத்து: **E**

வெற்றி இலக்கங்கள்: **33 46 50 58**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 17,267,261.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 299 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 573 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 14350 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8195 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 203183 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 32060 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,161,160.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,752,392.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


# ஐபாவிற்கு செலவிடப்பட்டப் பணம் மூலம் விஹாரைகளைப் புனரமைத்திருக்கலாம்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன்9

சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவிற்காகச் செலவிடப்பட்ட பெருந்தொகைப் பணத்தைப் பயன்படுத்தி நாட்டின் சிறிய பௌத்த விஹாரைகளைப் புனரமைத்திருக்கலாம் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய நடிகர் - நடிகையருக்காக 10 கோடிக்கும் மேற்பட்ட பணத்தைச் செலவிட முடியுமாயின், ஏன் அதில் பத்து வீதத்தையேனும்பௌத்த விஹாரைகளுக்காக ஒதுக்கக் கூடாது - என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்குளி ஸ்ரீ கல்யாணி ஞானராமய விஹாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமப்புற விஹாரைகள் புனரமைக்கப்படாத காரணத்தால், அநேகமான கிராம மக்கள் நகர்ப் புறங்களில் காணப்படும் விஹாரைகள் நோக்கிச் செல்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நகரப் பாடசாலைகளில்தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு மேற் கொள்ளும் முயற்சிகளைப் போன்றேதற் போது நகர விஹாரைகள் நோக்கி மக்கள் படையெடுக்கின்றனர் என்றும்அவர் தெரி வித்தார்.

கிராமங்களில் காணப்படும் பௌத்த விஹாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (சி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 28 ★ 01 ★ 1929



மறைவு 11 ★ 05 ★ 2010

## அமரர் கனகராஜா மனோன்மணி

கடந்த11.05.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர் அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.06.2010) வியாழக்கிழமை மகேசன்-கனகம்மா அவர் களின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'ஆனந்தி இல்லம்',
புதுறோட்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

திருமதி புஸ்பா இராமநாதன்பிள்ளை (மகள்)
மகேசன்-கனகம்மா (சம்பந்தி).

(99260)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி ஆறுமுகம் (முகத்தார்)



கொடிகாமம், எருவனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் (முகத்தார்) அவர்கள் நேற்று (08.06.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளி நாயகியின் அன்புக் கணவரும் திருமதி பாக்கியலட்சுமி, துரைச்சாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), தியாகராசா, யோகராசா (முகாமையாளர், கிராமியவங்கி, கொடிகாமம்), இராசரத்தினம், தங்கராசா (லண்டன்), செல்வராசா (கனடா), திருமதி பா.விமலாதேவி (சுவிஸ்), திருமதி ஜெ.லீலாதேவி (கனடா), மனோகரன், ரவீந்திரன் (லண்டன்), சந்திரன் (கனடா), காலஞ்சென்ற அசோகன், தயாளன் (கனடா), திருமதி.ர.மாலா (டென்மார்க்) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.06.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

ஆ.யோகராசா (மகன்),
(கிராமிய வங்கி, கொடிகாமம்).

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் செல்வராஜா

(வி.செல்வராஜா அன் கோ (கொழும்பு) உரிமையாளரும் தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தாவும்)



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்வராஜா (07.06.2010) பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-வாலாம்பிகை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் பூமணி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரி (இந்தியா)யின் அன்புக் கணவரும் சிவதர்சன் (இந்தியா), விஷ்ணுதர்சன் (பிரான்ஸ்), செல்வதர்சன் (இந்தியா), ஜெயந்தினி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம் (கனடா), பங்கையற்செல்வி (திருநெல்வேலி), கணேசலிங்கம் (ஜேர்மனி), வரதலட்சுமி (கொழும்பு), விஜயலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சு.நித்தியானந்தனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

24.A, வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214590256

லயன் சு.நித்தியானந்தன் (J.P)
நியூ கல்யாணி ஜுவெல்லரி

(99257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி மடகல்ல சிங்கள மகா வித்தியாலய ஆசிரியர், மாணவர்கள் அடங்கிய குழுவின் நல்லுறவுப் பாலம் அமைக்கும் நிகழ்வு நேற்று யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் அதிபர் தி.சோமசேகரம், கண்டி, மடகல்ல சிங்கள மகாவித்தியாலய அதிபர் கே.எம்.டபிள்யூ.சந்திரசேகர, யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி திருமதி வ.சிவபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதனை முதல் மூன்று படங்களிலும், அதிபர் கே.எம்.டபிள்யூ.சந்திரசேகர, கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களுக்கு வழங்குவதற்கென கற்றல் உபகரணங்களை யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி திருமதி வ.சிவபாலனிடம் கையளிப்பதனையும், கண்டி மடகல்ல சிங்கள மகாவித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்:ரட்ணம்)

## தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதிகளில் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் மிதிவெடி அகற்றப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 9

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள13 கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்கள் தொழில்நுட்ப மற்றும் மிதிவெடி அகற்றல் முறைமூலம் பரிசீலிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் 9 பகுதிகள் மிதிவெடிகள் உள்ள பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை என்று யாழ்.மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் அதிகாரியொருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 13 கிராம அலுவலர் பிரிவுகள் அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதில் ஜே/229 (துர்க்காபுரம்), ஜே/223 (வித்தகபுரம்), ஜே/224 (புன்னாலைக்கட்டுவன்), ஜே/221 (இளவாலை), ஜே/222 (இளவாலை), ஜே/232 (மாவிட்டபுரம் தெற்கு), ஜே/231 (மாவிட்டபுரம் தெற்கு), ஜே/225 (கொல்லங்கலட்டி), ஜே/170 (பொன்னாலை), ஜே/172 (சுழிபுரம் மேற்கு), ஜே/152 (மாதகல் மேற்கு) ஆகிய பிரதேசங்கள் தொழில்நுட்ப மற்றும் மிதிவெடியகற்றல் முறை மூலம் பரிசீலிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கென அந்தந்தப் பிரதேச செயலர்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவற்றில் 9 பகுதிகள் மிதிவெடி உள்ள பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அப் பகுதிகளில் மிதிவெடியகற்றல் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பகுதிகளில் 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடியகற்றும் நிறுவனம் பணிகளைமேற்கொண்டு வருகின்றது - என்றார். (50-9)




## அதிபர்களுக்கான கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த டெங்கு ஒழிப்பு தொடர்பான அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி வலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்திற்கு வருகை தரும்போது பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் தொடர்பான முழுமையான விவரங்களுடன் அதிபர்களைச் சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (20-201)

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 20 பயிற்சித் தாதியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலும் 20 பயிற்சித் தாதியர்களைச் சுகாதார அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

தாதியர் பயிற்சியை மேற்கொள்ளும் பொருட்டே இந்தப் பயிற்சி தாதியர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்த இந்த பயிற்சித் தாதியர்கள் தமது பணியை ஆரம்பித்துள்ளனர். (50-224)




யாழ்ப்பாணம், ஜூன் 9

சரவணை, பள்ளப்புலம் முருமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை மு.ப. 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் ஆலயத்தின் ஆனி உத்தர அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகமும் அதைத் தொடர்ந்து ஏகருத்திர ஹோமமும் விசேட பூசையும் நடைபெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204-51)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா நேற்றுமுற்பகல் 11 மணிக்குத் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

திருவிழாவில் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-10)

* * *

நல்லூர், ஜூன் 9

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-111)

* * *

நெடுந்தீவு, ஜூன் 9

நெடுந்தீவு மத்தி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 4 மணிக்குத் தீத்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-111)

* * *

நல்லூர், ஜூன் 9

இருபாலை கட்டைபிராய் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆவரங்கால் மேற்கு, சாந்தா தோட்டம் ஞானவைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7.32 மணிமுதல் 8.42 மணிவரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் பால் காப்புச் சாத்துதல் நிகழ்வும் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (204-234)

* * *

வடமராட்சி, ஜூன் 9

அல்வாய் வடக்கு, பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் 19ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும். (204-236)

* * *

## மீளக் குடியமர்ந்த 100 மாணவருக்கு 'பாசிக்' நிறுவனத்தினால் சைக்கிள்கள்

வடமராட்சி, ஜூன் 9

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்து பாடசாலை யில் கல்வியினை மேற்கொண்டு வரும் மாண்வர்களின் போக்குவரத்தினை இலகு படுத்தும் நோக்குடன் 'பாசிக்' நிறுவனத்தி னால் 100 மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 48 மாணவர்களுக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஊடாகவும், இரண்டாம் கட்டமாக 52 மாணவர்களுக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தபேந்திரா ஜெயராஜா ஊடாகவும் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சைக்கிள்கள் பெறுவதற்கென பயனாளி மாணவர்கள் பிரதேச கிராம சேவையாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்புடன் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர்களினால் இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-236)

## யாழ்.ஆஸ்பத்திரியில் 17ஆம், 18ஆம் விடுதிகள் புதிய கட்டடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

போதனா வைத்திசாலையின் 17ஆம், 18ஆம் இலக்க பெண்கள் விடுதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்துக்கு இந்த இரண்டு விடுதிகளும் இடமாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு விடுதிகளும் முன்னர் இருந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத்தொகுதி ஒன்றை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (50-224)

## அரைகுறையான நிலையில் திருத்த வேலைகள்; குமுதினியின் நிலைகண்டு பலரும் அதிர்ச்சி

நெடுந்தீவு, ஜூன் 9


திருத்த வேலைகளை முடித்துக் கொண்டு அண்மையில் நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடுவதற்கென வந்த குமுதினி படகு மீண்டும் திருத்த வேலைகளுக்கென கொண்டு செல்லப்படவுள்ளதாகத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர்தான் திருத்த வேலைகள் முடிவுற்று குமுதினி சேவையை ஆரம்பித்தது. கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக கலப்பத்து வேலைகள் இடம்பெற்ற போதிலும் அதில் பதிக்கப்பட்ட புரிகள் யாவும் வெளியே தொங்கிக் கிடக்கக் காணப்பட்டன. இருக்கைகள், கதவுகள் எல்லாம் உடைந்து ஆட்டம் காணும் நிலையிலே உள்ளன. படகின் பின்புறத்தில் காணப்பட்ட பித்தளை மூடிகளைக் காணவில்லை. இதேவேளை திருத்த வேலைகளுக்கென சுமார் 15 லட்சம் ரூபாவரை வழங்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்தப்படகின் திருத்த வேலைகளைப் பார்த்து அதிர்ச்சியடைந் ததாகவும் தெரியவருகின்றது. (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் சில ஆச்சரியமான உண்மைகள்




மனிதன் உடலில் கடுமையாக உழைக்கும் ஆற்றல் மிகுந்த உறுப்புகளில் ஒன்று இதயம். இதயமானது தொடர்ச்சியாக 12 மணி நேரத்தில் பயன்படுத்தும் ஆற்றலைக் கொண்டு 6 டன் எடையுள்ள பொருளை தரையில் இருந்து 2 அடி உயரத்துக்கு தூக்க முடியும். இதயமானது ஒவ்வொரு முறை சுருங்கும்போதும் உடலில் உள்ள மொத்தம் சுமார் பத்தாயிரம் மைல் நீளம் உள்ள இரத்தக் குழாய்களில் இரத்தத்தை அனுப்புகிறது. இந்த இரத்தக் குழாய்களின் மொத்த நீளமானது நம் நாட்டில் உள்ள ரயில்வே இரும்புப் பாதையின் மொத்த நீளத்தை விட மூன்று மடங்கு அதிகம். மருத்துவர்களால் புரிந்துகொள்ள முடியாத சிலபுதிரான ஆற்றல்களை இதயம் பெற்றுள்ளது. இதயத்தைப் பிணைத்திருக்கும் பலவகையான நரம்பு அமைப்புகளை முழுமையாகத் துண்டித்து விட்டால்கூட, இதயம் எந்தவிதமான பாதிப்புக்கும் ஆளா காமல், தானாகவே இயங்கும் ஆற்றல் பெற்றது. ஒவ்வொரு நாளும் இதயமானது ஒரு லட்சம் முறை விரிந்து சுருங்குகிறது. இந்தக் கணக்கை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டால் 70 ஆண்டுகள் உயிர் வாழும் ஒரு மனிதனின் வாழ்நாளில் இதயமானது 25 ஆயிரம் கோடி முறை சுருங்கி விரிகிறது.

ஒரு நாளில் இதயமாவது 1800 காலன் அளவு இரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கும் அனுப்புகிறது. இந்த அளவில் கணக்கிட்டால் இதயமானது ஒரு மனிதனின் வாழ்நாளில் சுமார் 4.6 கோடி காலன் அளவு இரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கு அனுப்புகிறது.

இதயத்தின் ஆற்றலானது ஒரு குதிரையின் ஆற்றலில் 240இல் ஒரு பங்கு. இதயமானது ஒவ்வொரு முறை சுருங்கும்போதும் சுமார் 11 பண்ட் அளவுள்ள இரத்தத்தை இரத்தக் குழாய்களின் மூலமாக உடலின் பல பாகங்களுக்கு அனுப்புகிறது.

இதயமானது ஓர் ஆண்டில் வெளியேற்றும் இரத்தத்தின் அளவானது 6.5 லட்சம் காலன்கள். இந்த அளவு இரத்தத்தைக் கொண்டு 900 காலன் கொள்ளளவு கொண்ட 72 லாரிகளை நிரப்பலாம். ஒரு மனிதனின் வாழ்நாளில் இதயமானது வெளிப்படுத்தும் ஆற்றலை ஒன்ளாகத் திரட்டினால் அந்த ஆற்றலால் ஒரு டன் எடையுள்ள பொருளைத் தரையில் இருந்து சுமார் 150 மைல் உயரத்துக்குத் தூக்கமுடியும்.

# நுரையீரல்களில் என்ன நடக்கிறது



நுரையீரல் என்பது உயிரினங்கள் மூச்சுக்காற்றை இழுத்து வெளிவிடும் ஒரு முக்கிய உறுப்பாகும். மூச்சுக்காற்றை இழுத்து விடுதலுக்கு மூசுதல் என்று பெயர். வாயுப்பரிமாற்றம் இவ்வுறுப்பின் முக்கிய பணியாகும். மேலும் சில முக்கிய வேதிப் பொருள்களை உருவாக்குவதும், வேறு சில வேதிப்பொருள்களைச் செயலிழக்கச் செய்வதும் இதன் பணியாகும்.நுரையீரலானது உடலியக்கத்திற்கு ஆற்றல்தரும் ஒட்சிசனை உள்ளெடுத்துக்கொள்வதற்கும் காபனீர்ஒட்சைட் வளிமத்தை வெளியேற்றுவதற்கும் முக்கிய உறுப்பாகச்செயற்படுகிறது. ஒரு நாளைக்கு சராசரியாக 22,000 முறை மூச்சுவிடும் மூக்கின் வழியாக நாம் உள்ளிழுக்கும் காற்று, காற்றுக் குழாய் வழியாக நுரையீரலுக்குச் செல்கிறது. காற்றுக்குழாய் மார்புப்பகுதியில் இரண்டாகப் பிரிந்து வலது, இடது நுரையீரல்களுக்குச் செல்கிறது. வலது நுரையீரல் மூன்று பாகமாகவும் இடது நுரையீரல் இரண்டு பிரிவாகவும் உள்ளது. இதில் பல நுண்ணிய இரத்தக்குழாய்கள் இருப்பதால், நுரையீரல் தமனி மூலமாக வந்த காபனீர்ஒட்சைட் நிறைந்த இரத்தத்தில் உள்ள காபனீர்ஒட்சைட் வெளியேற்றி, புதிய ஒட்சிசனை ஏற்றுக்கொண்டு, நுரையீரல் சிறைகள் மூலமாக இதயத்திற்குச் செல்கிறது. இந்த நுண்வளிப்பைகளில்தான் வளிமப் பரிமாற்றம் நிகழ்கின்றது. நுண்காற்றறைகள் சுருங்கி விரிதல்லயும் சில நோய்களால் நுரையீரல் பாதிக்கப்படும்போது எப்படிச் சுருங்கிவிரியும்.


பொதுவாக நுரையீரலில் சுரக்கும் சளி போன்ற நீர்மம் சில தூசிகளை அகற்றி வெளியேற்றும். காற்றுக்குழாயில் உள்ள சீலியா மேல் நோக்கித் தூசுகளைக் கொண்ட மியுக்கசை வெளியேற்ற, நாம் அறியாமலே அவற்றை விழுங்கி விடுகிறோம். உடல் நலம் சரியில்லாமல் போனால் மட்டுமே அவை சளியாக மூக்கின் வழியாக வெளியேறும். மூக்கினுள்ளே உள்ள மயிர் கூட தூசுகளை வடிகட்டும். இதையும் தாண்டி ஏதேனும் தூசு உள்நுழைந்தால் இருமல், தும்முதல் முதலானவற்றால் வெளியேறிவிடும்.



ஜானுசா, கொடிகாமம்.

# தொல்லை தரும் வைரஸ் கிருமிகள்

நமது உடலின் மென்மையான பகுதிகளே பெரும்பாலும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. பூஞ்சை, பாக்டீரியா, காளான் போன்ற பலவகையான நுண்கிருமிகளுக்கு அதற்கென சிறப்பாக வழங்கப்படும் நுண்கிருமி நாசினி பலனளித்தாலும், வைரஸ் கிருமியினால் ஏற்படும் தாக்குதலுக்கு மட்டும் சிறப்பான நுண்கிருமி நாசினிகள் இல்லை. ஏனெனில் வீரியமற்ற நிலையில் காணப்படும் வைரஸ் கிருமிகள் உயிருள்ள செல்களின் உள்ளே நுழைந்ததும், மிகவும் வீரியமடைந்து தன் தோற்றத்தையும் தாக்குதலையும் மாற்றிக்கொண்டே இருக்கின்றன. ஆகையால்தான் வைரஸ் கிருமிகளை எதிர்க்கும் அல்லது தடுக்கும் மருந்துகள் சிறப்பாக செயற்படுவதில்லை.



சளி, குருதி, குருதி படிந்த கருவிகள், உடல் திரவங்கள், இனப்பெருக்கத் திரவங்கள் ஆகியவற்றின் மூலம் வேகமாகப் பரவும் வைரஸ் கிருமிகள், குறிப்பட்ட காலம் வரை காத்திருந்து வீரியம் பெற்றதும், அத்தியாவசிய உறுப்புகளைத் தாக்கி, பலவித நோய்களை ஏற்படுத்துகின்றன. ஒரு வைரஸ் கிருமி உடல் செல்லைத் தாக்கி, அதற்கான நோய் குறிகுணங்களை முதன்முதலில் காட்டத் தொடங்கும் காலத்தில் சரியான முறையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் வைரஸ் கிருமிகளைச் சரியாக எதிர்கொள்ள முடியும். இல்லையெனில் நோயின் தீவிரம் அதிகரித்து பல உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்திவிடும்.

வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கக்கூடிய நோய் எதிர்ப்பு செல்கள் நம் உடலிலேயே போதுமான அளவு அமைந்துள்ளன. இவை வைரஸ் கிருமிகள் உள்ளே நுழைந்ததும் இம்யுனோ குளோபன்களை அதிகரித்து நோயைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த இம்யுனோ குளோபன்களின் அளவைக்கொண்டே நோயின் தீவிரம் கணக்கிடப்படுகிறது. ஏனெனில் டி.என்.ஏ. வரை தாக்குதலை ஏற்படுத்தும் மிக நுண்ணிய ஆற்றலுடையவை வைரஸ் கிருமிகள். உயிரற்ற செல்களில் இவை அழிந்துவிடுவதாலும், வீரியம் குறைவதாலும் பாக்டீரியா, பூஞ்சை போன்ற கிருமிகளைப் போல் மின் நுண்ணோக்கியில் பார்க்க இயலுவதில்லை.

வாய், உதடு, நாக்கு, தொண்டை மென்மையான தோல் பகுதிகள் ஆகியவையே வைரஸ் கிருமிகளின் தாக்கத்திற்கு இலக்காகும். இவற்றில் ஏற்படும் தாக்குதலே தொண்டை வலி, அம்மை, அக்கி, மரு, பாப்பலோமா, நாய்முள், நாக்கு, வாய் மற்றும் பறப்புறுப்பல் கடுமையான குழிப்புண்கள் ஆகியவற்றில் கொப்புளங்களாகவும், புண்களாகவும் வைரஸ் கிருமியின் தாக்குதலின் அடையாளமாக நாம் உணருகிறோம். இதனால் தோன்றும் சிறு சுரம், வலி ஆகியன நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கான இயற்கையின வழிமுறைகளாம்.

வைரஸ் கிருமித் தொற்றினால் தோன்றும் சுரம் மற்றும் தொண்டைவலி நீங்க மயிற்கொன்றை இலைகளை இடித்து, சாறெடுத்து 15 முதல் 30 மில்லியளவு வெந்நீருடன் கலந்து சாப்பட வேண்டும். இதன் விதைகளை அரைத்துத் தடவ, இருமலினால் தோன்றும் மார்பு வலி நீங்கும். இலைச்சாற்றை தடவ, அக்கி தீவிரம் குறைந்து, தழும்பு மற்றும் அதனால் உண்டாகும் வலி மறையும்.

(நன்றி: மருத்துவ இணையம்)

## பிரிவு

உறவு வந்து சேரும்போது
ஏற்கின்ற இதயம் ....
பிரிவு வந்து வாட்டும் போது
ஏற்பதில்லையே...
கூடலும் பிரிதலும்
மனித வாழ்க்கையென்று
நினைக்குதில்லையே...
புரிந்து கொண்டும் செயற்பட
என்னுள்ளம் வருகுதில்லையே....

த.தர்சினி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியில் பின்தங்கிய நிலையில் கிழக்கு மாகாணம்

## தேசியக் கல்வி ஆய்வு மையம் அறிக்கை

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் உலக வங்கியின் உதவியுடன் தேசியக் கல்வி ஆய்வு மையம் மேற்கொண்ட ஆய்வில், ஆரம்பக் கல்வியில் கிழக்கு மாகாணமே பின்தங்கிய நிலையில் இருக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ஒன்பதாவது இடத்தையும், தமிழ் மொழிப் பாடத்தில் 5ஆவது இடத்தையும் கிழக்கு மாகாணம் அடைந்துள்ளதாகத் தேசியக்கல்வி ஆய்வு மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டாலும், ஆரம்பக் கல்வியில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தப்படாமையும், பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை போன்றவையுமே இந் நிலைக்கு பிரதான காரணங்கள் என்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்.

ஆரம்பக் கல்வியில் ஏற்பட்டுள்ள இந்தப் பின்னடைவானது இடைநிலைக் கல்வி மற்றும் உயர்நிலை கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதற்குத் தீர்வு காணும் வகையில் பாடசாலையில் அல்லது கல்வி வலயங்களில் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்வை, மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அடிப்படையில் வழங்கும் திட்டமொன்றை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் கல்வியை முன்னேற்ற மடையச் செய்யமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ளி)




# செல்வநகர், தங்கநகர் பிரதேச மக்களுக்கான காணி உறுதிகளை பெற்றுத்தர வேண்டுகோள்

திருகோணமலை, ஜூன் 09

சேருவில பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள செல்வநகர், தங்கநகர் பகுதி காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தரு மாறு உரிய அதிகாரிகளிடம் இப்பிரதேச மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளார்கள்.

இங்குள்ள குடியிருப்பு காணி, வயற்காணி ஆகியவற்றிற்கான காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லாமையால் பல்வேறு சிரமங்களை தாங்கள் எதிர்கொள்ளவேண்டி நேரிடுகிறது என இவர்கள் கூறுகின்றார்கள்.

வீடுகட்டுவதற்கான மானிய உதவிகள், வீட்டு மின்சார இணைப்பு பெறல், மலசலகூட நிர்மாணம்,உரமானியம் பெறல் உள்ளிட்ட பல்வேறுவகையான தேவைகளுக்கு இந்தக் காணி அனுமதிப் பத்திரங்கள் தேவையானவை.

காணி அனுமதிப்பத்திரம் இல்லாமையால் உரிமைப்பிணக்குகள், எல்லைப் பிரச்சினைகள் உள்ளிட்ட பலவகையான காணிப் பிரச்சினைகள் எழுகின்றன எனவும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

காணி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்து இரண்டு வருடம் கழிந்துள்ள நிலையிலும் இன்னும் கிடைக்கவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தங்கநகர் பிரதேசம் முழுமையாக நில அளவை செய்யப்பட்டுள்ளது. எனவே, காணி அனுமதிப்பத்திரத்துடன், 'ரண்பீம' காணி உறுதிகளையும் தங்கநகர் மக்களின் காணிகளுக்கு உரிய அதிகாரிகள் செய்து தர வேண் டுமென கோரப்படுகின்றது. இது குறித்து குடியேற்ற அலுவலர், சேருவில பிரதேச செயலாளர் ஆகியோர் கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (ளி)

# மட்டு. மாவட்ட புனர்வாழ்வு அலுவலகத்தை கலைக்கும் தீர்மானத்தை இடைநிறுத்துக!

## கூட்டமைப்பு எம்.பி. அரியநேத்திரன் வலியுறுத்து

பட்டிருப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அலுவலகத்தைக் கலைப்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எடுத்துள்ள நடவடிக்கையை இடைநிறுத்தி, அவரின் தீர்மானத்தை மீள் பரீசிலனை செய்யுமாறுகோரி - மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மீள்குடியேற்றப் பணிகள் ஓரளவு, பூர்த்தியடைந்துள்ளன. இந்நிலையில் அதனைக் கலைத்துவிட்டு அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களை மாவட்ட திட்டமிடல் அலுவலகத்தில் இணைக்குமாறும் - மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை ஆட்சேபித்து, பா.அரியநேத்திரன் எம்.பி. மேற்படி செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அலுவலகம் கடந்த சுமார் 20 வருடங்களாக இயங்கி வருகிறது. இதனூடாகவே புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பணிகள் முற்றுப் பெறவில்லை.

மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களில் அநேகமானோர் இன்னமும் சேதமடைந்த கூடாரங்களில் வாழ்கின்றனர். நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகள் முற்றுப்பெறவில்லை.

எனவே, அரச அதிபரின் முடிவை மீள் பரிசீலனை செய்து, மட்டக்களப்பு மாவட்ட புனர் வாழ்வு அலுவலகத்தை தொடர்ந்து இயங்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அலுவலகத்தின் பணிகளை பொருத் தமற்றதும் - இன்னொரு அமைச்சின் கீழ் இயங்குவதுமான திட்டமிடல் அலுவலகத்தினால் மேற்கொள்வது உசித மற்றதாகும். - இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# போஷாக்கற்றவர்களின் எண்ணிக்கை நுவரெலியா மாவட்டத்தில் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சின் போஷாக்குப்பிரிவு தகவல்

கொழும்பு, ஜூன் 08

நுவரெலியா மாவட்டத்தில் போஷாக்கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், குறிப்பாக சிறுவர்களுக்கே போஷாக் கின்மை காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் போஷாக்குப்பிரிவு அறிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டின் சுகாதார அமைச்சின் போஷாக்குப்பிரிவின் அறிக்கையின் படி 36.2 சதவீதம் போஷாக்கு இல்லாத பிள்ளைகள் நுவரெலியா மாவட்டத்தில் வாழ்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளுக்கு போஷாக்குள்ள உணவுகள் வழங்கப்படாமையினாலேயே இக்குறைப்பாடு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

நுவரெலியா மாவட்ட மக்கள் மத்தியில் வறுமைநிலை காணப்படுகின்றது என பல்வேறு தரப்பட்டவர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்த மாவட்டத்தில் பிள்ளைகளுக்குப் போஷாக்கின்மை குறைபாடு காணப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நுவரெலியா மக்கள் பெருந்தோட்டத் துறையை நம்பியே வாழ்கின்றனர். இவர்களுக்கு உழைப் புக்கேற்ற ஊதியம் கிடைக்காத காரணத்தினால் குறைந்தபட்ச வருமானத்தைக் கொண்டே வாழ்க்கையை நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக சத்தான உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்து தமது பிள்ளைகளுக்கு வழங்கமுடியாத நிலையில் பெருந்தோட்ட மக்கள் வாழுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பாலான சிறுவர்கள் மூன்றுவேளைகளும் கோதுமை மா ரொட்டியையே உணவாக உட்கொள்கின்றனர். இதனால் இவர்களிடையே போஷாக்கு குறைப்பாடு காணப்படுவதோடு, மேலும் பல பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.

இதேவேளை தோட்டப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கு உரிய உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாததால் பாடசாலைகளில் மாணவர் இடைவில




கல், வரவுகுறைவு என்பன நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இதனால் கல்வி வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படத்தொடங்கியுள்ளது.

எனவே, இந்தக் குறைப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைக்ளை அரசு எடுக்கவேண்டும். போஷாக்கான உணவு முறை தொடர்பாக பெருந்தோட்ட மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும். குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளில் போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தை அரசு முன்னெடுக்கவேண்டும். அத்துடன், இந்த மாவட்டத்தில் வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கான உதவிகளை விவசாயத் திணைக்களம் வழங்கவேண்டும். (ளி)

# சென். லெனாட்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டோரை பழிவாங்கச் சதியா?

## வலப்பனை பிரதேசசபை செயலர் அறிக்கை

கொழும்பு, ஜூன் 09

நுவரெலியா - இராகலை சென். லெனாட்ஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் நிலவுவதாகக் கூறப்படும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக கடந்த 30 ஆம்திகதி பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஒருசில ஆசிரியர்களைப் பழிவாங்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று புதிய ஜனநாயக கட்சியின் வலப்பனை பிரதேச செயலாளர் எஸ். பன்னீர்ச் செல்வம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நுவரெலியா - இராகலை சென். லெனாட்ஸ் தமிழ் மகாவித்தியாலயத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவித்து கடந்த 30 ஆம்திகதி பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகளால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் 40 ஆசிரியர்களும் இணைந்து கொண்டார்கள்.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட ஒருசில ஆசியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வலப்பனை வலய தமிழ்க்கல்வி அதிகாரிகள் கல்விப் பணிப்பாளருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்விப்பணிமனையும் குறிப்பிட்ட ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களை அனுப்புமாறு பாடசாலை அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இதனை திட்டமிட்ட ஒரு செயலாகவே எமது கட்சி கருதுகின்றது.

ஏனெனில் பாடசாலைகளில் கல்வி வீழ்ச்சி, நிர்வாகச் சீர்கேடுகள் இடம்பெற்றால் அதிபரை இடமாற்றக்கோரி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். வலப்பனையிலும் கடந்த காலங்களில் இவ்வாறான போராட்டங்கள் இடம்பெற்றன.

எனினும், இங்கு மட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் ஏதோ சூட்சு மங்கள் உள்ளன என்றே நாம் கருதுகின்றோம்.

அதேவேளை, இப்போராட்டம் தொடர்பில் எமது கட்சியின் பெயரில் போலியான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடக்கும் பட்சத்தில் மீண்டும் மக்கள் போராட்டம் நடைபெறுகின்றமையைத் தடுக்கமுடியாமல் போகும்.

எனவே, இத்தகைய நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளோரைக் கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்துமாறு இராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் எமது கட்சி செய்துள்ளது - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# மொனராகலையில் இருவர் டெங்குநோயால் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 09

மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் டெங்குநோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த இரு இளைஞர்கள் கடந்த இரண்டு வாரங்களில் மரணமாகியுள்ளனர் என வைத்தியசாலை பணிப் பாளர் ஆர். எம்.டீ. ரத்னாயக்க தெரிவித்தார்.

மேலும், டெங்குநோயால் பீடிக்கப்பட்டவர் கள் எனக் கருதப்படும் 12 பேர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் டெங்குநோயால் பீடிக்கப்பட்ட நூறுபேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர் - இப்படி ரத்னாயக்க மேலும் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு வணிகவள நிலையம்

அண்மையில் நடத்திய உயர்தரப் பரீட்சை - பங்குனி, 2010

## உயிரியல் | பகுதி - I

01. பின்வருவனவற்றுள் மா மூலக்கூறாக அமைவது,
1) ADP 2) ATP 3) மயோகுளோபின்.
4) ஈஸ்ரோஜன். 5) குளுக்கோஸ்.

02. கலத்தக மென்சவ்வுத் தொகுதியின் பகுதியாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
1) குழியவுரு. 2) ER
3) இழைமணி. 4) பச்சையவுருமணி. 5) புன்கரு.

03. புரதம் ஒன்றினது கட்டமைப்பு அழிவதை எடுத்துக்காட்டும் செயற்பாடாக அமைவது,
1) முதலான கட்டமைப்பு மாறுதல்.
2) துணையான கட்டமைப்பு மாறுதல்.
3) புடையான கட்டமைப்பு மாறுதல்.
4) அமினோ அமிலங்களின் எண்ணிக்கை குறைதல்.
5) பெப்ரைட் பிணைப்புக்கள் உடைதல்.

04. DNA இல் உள்ள பரம்பரை அலகு ஒன்றின் செய்தியின் மொழிபெயர்ப்பு நிகழும் பகுதி,
1) கரு. 2) புன்கரு.
3) றைபோசோம். 4) குழியவுரு. 5) நிறமூர்த்தம்.

05. பின்வருவனவற்றுள் ஒட்டுருக்கல இழையத்தின் இயல்பு அல்லாதது எது?
1) இது ஓர் இறந்த இழையம்.
2) இது ஓர் உயிருள்ள இழையம்.
3) இதில் உள்ள பிரதான கலச்சுவர்க்கூறு செலுலோசு.
4) தாவரத்திற்குப் பொறிமுறை ஆதாரமளிக்கும் இழையம்.
5) தாவர வேரில் காணப்படாத இழையம்.

06. தலையாகு செயல் ஆரம்பமாகிய கணம் பின்வருவனவற்றுள் எது?
1) Platyhelminthes 2) Nematoda 3) Annelida
4) Arthropoda 5) Echinodermata

07. பின்வருவனவற்றுள் எமது நாட்டில் காணப்படும் வாழும் உயிர்ச்சுவடு எது?
1) Limulus 2) Ichthyophis 3) Trilobite
4) Chelone 5) Dugong

08. பின்வரும் எக்காலப்பகுதியில் தரையில் வித்தற்ற கலன் தாவரங்கள் உருவாகின?
1) Triassic 2) Permian 3) Devonian
4) Silurian 5) Carbonyferous

09. பின்வரும் எவ்வகுப்பு அங்கிகளில் முதன்முதலாக முளைய மென்சவ்வுகள் விருத்தியாகின?
1) Pisces 2) Amphibia 3) Reptilia
4) Aves 5) Mammalia

10. இன அழிவுச் செயற்பாடு தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) இனங்களுக்கிடையிலான போட்டியால் ஏற்படும்.
2) இயற்கைக் காரணிகளால் ஏற்படும்.
3) மிகைநுகர்வும் இதற்கு ஒரு காரணமாகும்.
4) இது இன உற்பத்திக்கு வழிகோலும் செயற்பாடு.
5) இதனைக் காப்பு நடவடிக்கைகளால் தடுக்கலாம்.

11. Pogonatum பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
1) புணரித்தாவரம் சுயாதீனமானதும், ஆட்சியானதுமாகும்.
2) புணரித் தாவரத்தில் தனிக்கல வேர்ப்போலிகள் காணப்படும்.
3) முட்டை பெண்கலச் சனனியுள் காணப்படும்.
4) விந்துப்போலிகள் இரு சவுக்குமுளையுடையவை.
5) வித்திகள் முளைத்து இழைமுதலை ஆக்கும்.

12. Nephrolepis இன் வித்தித்தாவரத்தில்,
1) பல்லின இலையுண்மை காணப்படும்.
2) இலைகளில் சிறுநா காணப்படும்.
3) இலைகளின் மேற்புற மேற்பரப்பில் குவைகள் தென்படும்.
4) வித்தித் தாவரம் அதன் ஆரம்ப விருத்தி நிலைகளில் புணரித் தாவரத்தில் தங்கியிருக்கும்.
5) வித்தித் தாவரம் பல்லின வித்திகளைத் தோற்றுவிக்கும்.


13. Selaginella பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
1) பெண்புணரித் தாவரத்தில் தனிக்கல வேர்ப்போலிகள் காணப்படும்.
2) பெண்புணரித் தாவரத்தில் பச்சையவுருமணிகள் விருத்தியடையும்.
3) ஆண்புணரித் தாவரத்தில் மூலப் பிரிவிலிக் கலமும், ஆண்கலச் சனனிக் கலமும் காணப்படும்.
4) முளையத்தில் தூக்கணம் காணப்படும்.
5) கூம்பியின் மாவித்திக்கலன் அல்லது நுண்வித்திக்கலன் காணப்படும்.

14. Cycas பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) பெண்புணரித் தாவரம் சூல்வித்துள் காணப்படும்.
2) பெண்புணரித் தாவரம் முளையத்துக்குப் போசணை வழங்கும்.
3) ஆண்புணரித் தாவரம் மகரந்தக் குழாயுடையது.
4) மகரந்தக் குழாய் கருக்கட்டலில் உதவிசெய்யும்.
5) மகரந்தச் சேர்க்கையின் பின் கருக்கட்டல் நிகழும்.

15. பின்வரும் இணைப்புக்களில் தவறானது எது?
1) உரியச் சுமையேற்றம் - உயிர்ப்பான செயற்பாடு.
2) உரியச் சுமையிறக்கம் - தாழி.
3) உரியத்தினூடாகக் கொண்டுசெல்லல் - நேர்முக அழுத்தம்.
4) காழினூடாகக் கொண்டுசெல்லல் - எதிர்முக அமுக்கம்.
5) காழ் கலனின் ஊடாக நீரின் அசைவு - பிரசாரணம்.


**SPECIAL GUIDE FOR 2010 A/L SCIENCE STUDENTS**

16. கோட்டுப்படம் தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?



1) உள்ளாதிக் காழ். 2) ஆரைக்குரிய கலன்கட்டுகள்.
3) திறந்த கலன்கட்டுகள். 4) தெளிவான மையவிழையம்.
5) இழையப் பரம்பல் இருவித்திலைத் தண்டுக்குரியது.

* 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு பின்வரும் வரைபுகளைப் பயன்படுத்துக.




17. வெவ்வேறு மூலர்ச்செறிவுள்ள சுக்குரோசுக் கரைசல்களில் அமிழ்த்தப்பட்ட Rhoeo மேற்றோல் உரிக்கலங்களில் ஏற்பட்ட முதலுருச் சுருக்க வீதம் தொடர்பான வரைபு எது?
X - மூலர்ச்செறிவு; Y - முதலுருச்சுருக்க வீதம்.

18. வளிமண்டல ஈரப்பதனுடன் ஆவியுயிர்ப்பு வீதம் மாறுபடுவதைக் காட்டும் வரைபு எது?
X - வளிமண்டல ஈரப்பதன்; Y - ஆவியுயிர்ப்பு வீதம்.

19. பின்வரும் ஓமோன்கள் அவற்றின் தொழில்கள் தொடர்பான இணைப்பில் தவறானது எது?
1) சைற்றோகைனின் - கலப்பிரிவைத் தூண்டுதல்.
2) ஜிபரலின் - உறங்குநிலை நீக்கம்.
3) ஒட்சின் - வெட்டுப்படையை நிரோதித்தல்.
4) எதிலின் - வெட்டுப்படையை நிரோதித்தல்.
5) அப்சீசிக் அமிலம் - உறங்குநிலையை ஏற்படுத்துதல்.

20. இளம் வேரில் அப்போபிளாஸ்ட் பாதை நடைபெறாத பாகம் எது?
1) வேர்மயிர். 2) மேற்பட்டை. 3) அகத்தோல்.
4) பரிவட்டவுறை. 5) காழ்.

21. மனிதனில் தனிச்செதின் மேலணி காணப்படுவது,
1) தோலில். 2) சிறுநீரகத்தில். 3) நாக்கில்.
4) களத்தில். 5) கேடயப்போலிச் சுரப்பியில்.

22. மனிதனில் சுவாசப் பொறிமுறை தொடர்பாகத் தவறானது,
1) குருதிப் pH அதிகரிப்பு காற்றோட்ட வீதத்தைக் கூட்டும்.
2) குருதிப் pH மாற்றம் இரசாயன வங்கிகளால் உணரப்படும்.
3) உட்சுவாசப் பொறிமுறை ஓர் உயிர்ப்பான செயல்.
4) சுவாச மையம் நீள்வளைய மையவிழையத்தில் உண்டு.
5) அனுசேபவீத அதிகரிப்பு சுவாசவீத அதிகரிப்புக்கு வழிகோலும்.

23. மனித சமிபாட்டுத் தொகுதியில்,
1) புரதச் சமிபாடு வாய்க்குழியில் ஆரம்பிக்கும்.
2) இரைப்பைச் சுவரில் தசை இருபடையில் காணப்படும்.
3) இரைப்பையின் புரதப் பிரிநொதியங்கள் புறப்பெரிடேஸ் வகை.
4) இதய இரைப்பைப் பகுதியில் வாயுக்கள் சேகரிக்கப்படும்.
5) பித்தச்சாற்றில் கொழுப்பு சமிபாட்டு நொதியங்கள் உண்டு.

24. சுற்றோட்டத் தொகுதி தொடர்பாகத் தவறானது எது?
1) கரப்பான் பூச்சியில் திறந்த சுற்றோட்டம்.
2) மீன்களில் மூடிய சுற்றோட்டம்.
3) மண்புழுவின் இதயம் இதயத்தசை செறிந்தது.
4) நீள்வளையக் குடையம் ஒரு தற்காலிக துவாரம்.
5) பெருநாடிச் சுவரில் மீள்சக்தித் தொடுப்பிழையம் உண்டு.

25. நரம்புத் திரட்டுக்கள் காணப்படாத விலங்கு,
1) கரப்பான். 2) மண்புழு. 3) நத்தை.
4) Planaria 5) கடல் அனிமனி.

26. மனிதக் குருதிக்கலங்கள் தொடர்பாகச் சரியானது,
1) எல்லா வெண்குருதிக் குழியங்களும் சிறுமணியாகக் காணப்படும்.
2) மொனோசைற்றுக்கள் பிறபொருள் எதிரி உற்பத்தியுடன் தொடர்பு.
3) அதியுயர் சதவீதத்தில் நடுநிலை நாடிகள் காணப்படும்.
4) குருதியுறைதலில் மூலநாடிகள் முக்கியம்.
5) செங்குழியங்கள் Heamoerythrin உடையவை.

27. மனிதனின் சிறுநீரகத்தி தொடர்பாகத் தவறானது எது?
1) அது சிறுநீரகத்தின் தொழிற்பாட்டலகு.
2) அது அதிகளவு குருதியை வாங்கும் அங்கம்.
3) அதன் அண்மை மடிந்த சிறுகுழாயில் கட்டுப்பட்ட நீர் மீளகத்துறிஞ்சல் நிகழும்.
4) அதன் சேய்மைமடிந்த சிறுகுழாயில் குளுக்கோசு மீளகத்துறிஞ்சல் நிகழும்.
5) அதனுடன் சிறுநீரகத்தின் எதிரோட்டப் பொறிமுறை தொடர்பு.

* 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக.

| புலன் அங்கம் | பகுதிகள் | புலன் அங்கம் |
|---|---|---|
| A - காது | P - பசினியன் சிறுதுணிக்கை | X - ஒலி உணர்ச்சி |
| B - கண் | Q - கூம்புக்கலம் | Y - அமுக்க வாங்கி |
| C - தோல் | R - கோட்டியின் அங்கம் | Z - இராக்காலப் பார்வை |

28. புலனங்கங்கள் A, B, C உடன் தொடர்புடைய கட்டமைப்புக்கள்.
1) P, Q, R 2) R, P, Q 3) R, Q, P 4) Q, R, P 5) P, R, Q

29. X, Y, Z தொழில்களுடன் தொடர்புடைய பகுதிகள்,
1) R, P, Q 2) P, Q, R 3) R, P, Q 4) Q, P, R 5) Q, R, P

30. மனித மூளையம் தொடர்பாகத் தவறானது,
1) புறத்தோற்படை உற்பத்தி.
2) இச்சையுள் தசைச்சுருக்கத்தைக் கட்டுப்படுத்தும்.
3) அகஞ்சுரக்கும் சுரப்பியாகத் தொழிற்படும்.
4) மூளையின் மிகப் பெரும்பகுதி.
5) ஞாபகங்கள் தேக்கப்படும் பகுதி.

(15 ஆம் பக்கம் பார்க்க)

**நன்றி : கொழும்பு வணிக வள நிலையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 10

*'' விவேகம் பரிபூரணமான பின்
விருப்பங்கள் அற்றுப் போகும்.
விடுதலை பெற்றவனுக்கு
சலுகைகள் வேண்டியிருக்காது.''*

### சலபாசனம்



**செய்யும் முறை:**


படத்தில் காட்டியபடி குப்புறப்படுத்து முகத்தை விரிப்பில் தாழ்த்தி வைத்துக் கொண்டு இரு கால்களையும் ஒட்டவைக்கவும். அதன் பின்பு இரு கைகளையும் குப்புற மூடியவாறு அடி வயிற்றின் கீழ் வைத்துக் கொள்ளவும். மூச்சை உள்ளே இழுத்து அடக்கியபடி இரு கைகளையும் தரையில் அழுத்தி கால்களை விறைப்பாக வைத்துக் கொண்டு மேலே தூக்கவும். முழங்கால் பகுதி மடியாமல் பார்த்துக் கொள்ளவும். ஒரு முறைக்கு ஐந்து முதல் பத்து வினாடியாக மிக மெதுவாக உயரே தூக்கி கீழே இறக்க வேண்டும். சிலருக்கு இரண்டு கால்களும் சேர்த்துக் தூக்க கஸ்டமாக இருக்கும். அப்படியானவர்கள் மெதுவாக ஒவ்வொரு கால்களாக மாற்றி மாற்றித் தூக்கி சில காலம் பழகியபின் இரண்டு கால்களையும் சேர்த்துக் தூக்கலாம்.

**பயன்கள்**

வயிற்றுப்பகுதி பலப்படும், பெருங்குடல், சிறு குடல் இழுக்கப்பட்டு நன்கு வேலை செய்யும், மலர்ச்சிக்கல் நீங்கும், கல்லீரல், மண்ணீரல், கணையம் நன்கு வேலை செய்யும். அஜீரணம், வயிற்றுவலி நீங்கும். முதுகுவலி, இடுப்புவலி நீங்கும். அடி வயிறு இழுக்கப்பட்டு தொந்தி கரையும். முதுகெலும்பு நோய் குணமாக முக்கிய ஆசனம் இது.

*''வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு
மருண்டு விடாதீர்கள்- அந்த
மாற்றங்களை உங்கள் ஆன்ம முன்னேற்றத்திற்குப்
பயன்படுத்திக் கொள்ளுங்கள்''*

### தனுராசனம்



**செய்யும் முறை:**

த னு ர் என்றால் வில் எனப் பொருள். விரிப்பில் குப்புறப்படுத்து கைகளால் கால்களை (கரண்டைக் கால்) இறுக்கமாகப் பிடிக்கவும். சுவாசத்தை வெளியே விட்ட நிலையில் கைகளால் கால்களை இழுத்து தலையையும், கழுத்தையும் மேலே தூக்கி வளைத்துக் கால்களையும் மேல் நோக்கி இழுத்து உடலை வில் போல் வளைக்கவும். ஆசன நிலையில் சாதாரண மூச்சு. ஒரு முறைக்கு 5முதல் 15 வினாடியாக 3 முதல் 5தடவை செய்யவும். ஆரம்பக் காலத்தில் காலை விரித்துச் செய்யவும் பின் காலை மிக மெதுவாகச் சுருக்கவும்.

**பயன்கள்:**

முதுகெலும்பின் வழியாக நாடி நரம்புகளுக்குப் புது இரத்தம் செலுத்தப்பட்டு உறுதியடைகிறது. இரப்பை, குடல்களிலுள்ள அழுக்குகள் வெளியேறி குடல் சுத்தமடைகிறது. ஜீரண சக்தி அதிகரிக்கும். சோம்பல் ஒழியும். கபம் வெளிப்படும்.தொந்தி கரையும். மார்பகம் விரிவடையும். இளமைத் துடிப்பு உண்டாகும். நீரிழிவு நோய் நீங்கும். ஆண்-பெண் உறுப்புகளுக்கும் கர்ப்பப் பைக்கும் நல்ல இரத்தோட்டம் ஏற்பட்டுப் பலம் பெறும். இளமைப் பொலிவு உண்டாகும். பெண்களுக்கு மாதவிடாய் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

*''நம் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால்
காற்று இல்லையென்றாகிவிடுமா?
நாம் தொட்டுப் பார்க்கவில்லை என்பதால்
தூரத்து ஆகாயம் கற்பனையாகிவிடுமா?''*

### வச்சிராசனம்



**செய்யும் முறை:**

படத்தில் காட்டியபடி கால்கள் இரண்டையும் மடக்கி முதுகெலும்பை நேராக நிமிர்த்திக் கம்பீரமாக உட்கார வேண்டும். கைகளைத் தொடையின் மீது வைத்து சின் முத்திரை பிடிக்கலாம். நன்றாக மூச்சை 4 முதல் 10 முறை இழுத்து விடவும். 2 முதல் 4 நிமிடம் ஆசன நிலையில் இருக்கலாம்.

**பயன்கள்:**

வச்சிரம் போன்று கெட்டியாக மனதைப் பிடிக்கக் கூடிய ஆசனம் என்பதால் வச்சிராசனம் எனப் பெயர் பெற்றது. அலைபாயும் மனம் கட்டுப்படும். தியானம் செய்யவும்,மூச்சுப்பயிற்சி செய்யவும் சிறந்தாசனம். முழங்கால்கள் மடிக்கப்படுவதால் நல்ல இரத்தோட்டம் கிடைக்கப்பெற்று முழங்கால் வியாதிகள் நீங்கும். துடைச் சதைப்பகுதி கெட்டியாகும்.

*(இன்னும் வளரும்)*

இந்த ஆசனங்களை தகுந்த குருவிடம் பயின்ற பின் செய்வதே சாலச்சிறந்தது

# புத்தரின் கருணை

புத்தர் தன்னுடைய இறுதிக் காலத்தில் இறப்பதற்கு ஓர் ஏழை அளித்த உணவுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

புத்தர் ஓர் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது அந்த ஏழை தன் வீட்டில் சமைக்கப்பட்ட உணவை புத்தருக்குக் கொடுத்தார்.அது காட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நாய்க்குடைக் காளான். அதனை உலரவைத்து சமைத்து புத்தரிடம் அன்புடன் கொடுத்தான் அந்த ஏழை.

அந்த நாய்க்குடைக் காளானில் சில துண்டுகள் விஷத்தன்மை அடைந்திருந்தன. இந்த விஷயம் அந்த ஏழைக்குத் தெரியாது. ஆனால் புத்தருக்குத் தெரியும்.



அது கொடிய விஷம் என்று தெரிந்தும் பண்பாடு கருதி ஏழையின் மனம் நோகக்கூடாது என்று புத்தர் அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு சாப்பிட்டார். அவர் உடலில் விஷமேறி மரணப்படுக்கையில் சாய்ந்தார்.

விஷயமறிந்த அவரது சீடர்களும், உணவு கொடுத்த அந்த ஏழையும் கலங்கினார்கள். அதற்குப் புத்தர் '' வாழ்க்கையில் மரணம் ஒருமுறைதான் வரும். நீ எனக்கு உணவுதரும்போது உனது அன்பும், பரவசக் கண்ணீரும் எனக்கு அமிர்தத்தை உண்ணுகின்ற உணர்வைக் கொடுத்தது'' என்றார்.

தனது சீடர்களை அழைத்து, '' சீடர்களே எனக்குக் கடைசியாக உணவு வழங்கிய இந்த ஏழை மிகுந்த பாக்கியசாலி என்று ஊருக்கு அறிவிப்புச் செய்யுங்கள் இல்லையெனில் பொதுமக்கள் இவரைக் குற்றவாளி என்று தண்டித்து விடுவார்கள். எனக்கு முதல் உணவு அளித்த தாயைப் போலவே, கடைசி உணவளித்த இந்த ஏழையும் கொண்டாடத் தகுந்தவர் என்று புத்தர் நெகிழ்வுடன் கூறினார். அவரது சீடர்களும் அவ்வாறே அறிவித்தார்கள்.

*சொன்னவர்:புலவர் இரா. சண்முகவடிவேல்*

# ஜோதிடம் அவசியமா?

ஒரு பிச்சைப் பாத்திரத்தை கையில் வைத்துக் கொண்டு அதில் என்ன விழப்போகிறது என்று எதிர்பார்ப்பது போல உங்கள் வாழ்க்கையை நீங்களே ஒரு பிச்சைப் பாத்திரமாக ஏந்திக்கொண்டு, கிரகங்கள் அதிலே என்ன போடப் போகின்றன என்று பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது.

உங்கள் வாழ்க்கையை நீங்களேதான் வடிவமைக்க வேண்டும். உங்களுடைய வாழ்வை நீங்கள் வடிவமைக்கிற முறையில் தான் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கை, இந்தச் சமூகத்தின் வாழ்க்கை, இந்த தேசத்தின் வாழ்க்கை அனைத்துமே அடங்கி இருக்கிறது.



வாள் வித்தையில் தலைசிறந்து விளங்கிய ஒரு மனிதர் இருந்தார். அவரிடம் ஒரு இளைஞன்போய், ''நான் உலகின் மிகச் சிறந்த வாள் வீச்சுக்காரனாக விரும்புகிறேன், அதற்கு எத்தனை காலம் உங்களிடம் பயிற்சி எடுக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

''பத்து ஆண்டுகள் போதும்'' என்றார் அவர். ''அவ்வளவு காலம் நான் காத்திருக்க முடியாது. இரவும் பகலும் இடையறாமல் பயிற்சி எடுத்துக் கொண்டால் எத்தனை ஆண்டுகளில் முடியும்'' என்றான். அதற்கு அந்த வாள் வீச்சு வல்லுநர் ''நாற்பது வருடங்கள் ஆகும்'' என்றார்.

இளைஞருக்கு அதிர்ச்சி. அவர் சொன்னார், ''ஏதாவது ஒன்றை உடனே அடைய வேண்டும் என்று பதட்டத்தோடு இடையறாமல் செய்து கொண்டேயிருந்தால் உன்னுடைய ஆற்றல் குறையும். செயல்திறன் மங்கும். ஆகவே அதிக நாள்கள் ஆகும்'' என்று சொன்னார்.

இந்தப் பதட்டத்தின் இன்னொரு அம்சம்தான் நம்முடைய வாழ்க்கையைத் தெரிந்து கொள்ள ஜாதகத்தை நம்பிப்போவது. தன்னை அறிந்துகொள்ள ஜாதகத்தை நம்பிப்போவது. தன்னை அறிந்து கொள்ளாமல் சில வெற்றிகளைப் பெற்றால் அவை அதிர்ஷ்டத்தால் வந்தவை என்று நீங்களே நம்பத் தொடங்கிவிடுவீர்கள். அதற்குப் பிறகு ஒவ்வொன்றுக்கும் உங்கள் ஜாதகத்தையோ, கைரேகையையோ, எண் கணிதத்தையோ பார்த்துக் கொண்டுதான் உங்களால் செயற்பட முடியும். ஒரு மனிதன் தன் வீட்டைவிட்டு வெளியே வரக்கூட ஜோதிடம் பார்க்க வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்படுகிறான். இதற்குக் காரணம் அவன் தன்னுடைய சக்தியை, ஆற்றலை, செயல்திறனை அறிந்து கொள்ளாததுதான்.

*சொன்னவர்: சத்குரு ஜக்கி வாசுதேவ்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# HINDUSTAN
## GROUP OF INSTITUTIONS

42 years 1968 - 2010

"To make every man a success and no man a failure"



## World-Class Training for World wide Career

### HINDUSTAN UNIVERSITY

HINDUSTAN INSTITUTE OF TECHNOLOGY & SCIENCE (HITS)
(Deemed to be University, Established Under Section 3 of UGC Act 1956)



- World class campus
- Government sponsored research initiatives worth more than 20 crores
- Over 200 International students
- Over 950 students have been placed in leading companies in India and abroad
- Linkages with leading Industries and government organisations
- Collaboration with reputed Universities and research organisations
- Hostel facility on campus
- State-of-the-art library
- TIFAC-CORE Centre of excellence in Aircraft Maintenance

**UG COURSES**

**B.E. COURSES** (4 yrs)
Aeronautical Engg.
Aerospace Engg.
Automobile Engg.
Chemical Engg.
Civil Engineering
Computer Science & Engg.
Electrical & Electronics
Electronics & Communication
Electronics & Instrumentation
Mechanical Engg.

**BACHELOR OF ARCHITECTURE** (5 yrs)

**B.TECH. COURSES** (4 yrs)
Information Technology

**PG COURSES**

**MBA** (2 yrs) Aviation Management

Also offers **MBA** (2 yrs)
- Media & Entertainment
- Family Business & Entrepreneurship
- Hospitality Management

**MBA** (2 yrs) Regular programme with specialisations in
- International Business
- Marketing Management
- Human Resources Management
- Financial Management
- Systems Management

**MCA** (3 yrs)

**M.E. COURSES** (Full time / Part time)
Aeronautical Engg.
Aircraft Maintenance Engg.
Applied Electronics
Avionics
Computer Aided Design
Construction Engg. & Management
Computers & Communication Engg.
Computer Science & Engg.
Communication Systems
Environmental Engg.
Internal Combustion Engg.
Power Electronics & Drives
Process Control & Instrumentation Engg.
Refrigeration & Air Conditioning
Software Engg.
Structural Engg.
Thermal Engg.
Embedded Control

**M.TECH.** (2 yrs)
Embedded Systems
Information Technology
VLSI Design

**Ph.D.** in all subjects

### KCG COLLEGE OF TECHNOLOGY

Approved by the AICTE, Govt. of India and Affiliated to the Anna University
Accredited by National Board of Accreditation (NBA) New Delhi.

**B.E. COURSES** (4yrs)
- Aeronautical Engg.
- Computer Science & Engg.
- Electronics & Communication Engg.
- Electrical & Electronics Engg.
- Mechanical Engg.

**B.TECH.** (4yrs)
- Information Technology

**M.E.** (2yrs)
- VLSI Design
- Engineering Design

**MCA** (3yrs)

**MBA** (2yrs)
Offered by
NATIONAL INSTITUTE OF MANAGEMENT STUDIES
Affiliated to University of Madras. Approved by the All India Council for Technical Education (AICTE).

### HINDUSTAN INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

**AIRCRAFT** (A.M.E - 3yrs) **MAINTENANCE ENGINEERING**
Approved by DGCA, Govt. of India.
- Avionics Stream
- Mechanical Stream

Eligibility: A pass in 10+2 with an aggregate of 50% marks in Mathematics and Physics or a Diploma with 50% marks in related field.

**DIPLOMA COURSES** (3yrs)
Affiliated to the State Board of Technical Education, Govt. of Tamilnadu
- Automobile Engg. (D.A.E)
- Mechanical Engg. (D.M.E)
- Computer Engg. (D.C.E)

Eligibility: A pass in S.S.L.C. or equivalent.

### HINDUSTAN COLLEGE OF ARTS & SCIENCE

Affiliated to the University of Madras & Approved by the Govt. of Tamilnadu.

**B.Sc COURSES** (3 yrs)
Biochemistry / Electronics and Communication Science / Microbiology / Biotechnology / Computer Science / Information Systems Management / Electronic Media / Visual Communication / Mathematics

**M.Sc COURSES** (2 yrs)
Applied Microbiology / Biotechnology / Bioinformatics / Information Technology

**M.Phil.**
Applied Microbiology

**B.Com** (General) (3yrs) / **B.B.A** (3yrs) / **BCA** (3yrs)(Computer Applications)

**Twinning Programme** Study two years in India and final year in UK Please see website for more details www.bite.ac.uk

### ORIENT FLIGHT SCHOOL





**OFS AT A GLANCE**

- Approved by the Directorate General of Civil Aviation (DGCA), Government of India for Single and Multi-Engine **Pilot Training**
- In the field of **Pilot Training** for the past 16 years since 1994 with an excellent safety record
- Fleet strength of 12 Single Engined and 2 Twin Engined Aircraft including a Jet
- Flight operations from the Airports Authority of India (AAI), airport at Puducherry, India
- Hostel facility for students
- Multi-Engine Rating offered on KingAir C-90A
- 2 glass cockpit aircraft to take students closer to the cockpits of Airliners
- DGCA approved Flight Simulator ALSIM AL-50, a product of France, as per the specifications and approval of Joint Aviation Authority (JAA) of the European Union
- Highly qualified experienced and DGCA approved Flight Instructors and Faculty


**COURSES OFFERED**

**PRIVATE PILOT LICENCE** (PPL - 50 HRS)
**COMMERCIAL PILOT LICENCE** (CPL - 200 HRS)









**HINDUSTAN UNIVERSITY**
REGD. & ADMN. OFFICE:
No. 40, G.S.T. Road, St. Thomas Mount,
Chennai - 600 016 Tamil Nadu. India.
Ph : +91-44-2234 2155 / 0980 / 1389 / 2508
Fax: +91-44-2234 2170 / 2233 3848
Email : hetc@vsnl.com www.hindustanuniv.ac.in

Celebrating 25 Years Hindustan University

**Srilanka Office:**
METRO INSTITUTE OF HIGHER EDUCATION
Level 8C, Valiant Towers, 46/7 Nawam, Mawatha, Colombo-2.
Ph: 117397390 / 117397393 Email: metroihesl@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையைப் பாதிக்கும் பழக்கங்கள்

**காலையில் உணவு உண்ணாமல் இருப்பது**

காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு இரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும் தேவையான ஊட்டச்சத்துக்களையும் கொடுக்காமல் ஆக்கி, மூளை அழிவுக்குக் காரணமாகும்.

மிக அதிகமாகச் சாப்பிடுவது மூளையில் இருக்கும் இரத்த நாளங்கள் இறுகக் காரணமாகி, மூளையின் சக்திக் குறைவுக்குக் காரணமாகும்.

**புகை பிடித்தல்**

மூளை சுருங்கவும், அல்ஸமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது.

**நிறைய சர்க்கரை சாப்பிடுதல்**


நிறைய சர்க்கரை சாப்பிடுவது, புரோட்டின் நமது உடலில் சேர்வதைத் தடுக்கிறது. இதுவும் மூளை வளர்ச்சிக்குப் பாதிப்பாகிறது.

**மாசு நிறைந்த காற்று**

மாசு நிறைந்த காற்றைச் சுவாசித்தல், நமக்குத் தேவையான ஒட்சிசனை நாம் பெறுவதிலிருந்துதடை செய்கிறது. மூளைக்கு ஒட்சிசன் செல்லாவிட்டால், மூளை பாதிப்படையும்.

**தூக்கமின்மை**

நல்ல தூக்கம் நம் மூளைக்கு ஓய்வு கொடுக்கும். வெகுகாலம் தேவையானஅளவு தூங்காமலிருப்பது மூளைக்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும்.



**தலையை மூடிக்கொண்டு தூங்குவது**

தலையை மூடிக்கொண்டு தூங்குவது, போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நீங்கள்; சுவாசிக்கும் ஒட்சிசனைக் குறைக்கிறது. குறைவான ஒட்சிசன் மூளையைப் பாதிக்கிறது.

**நோயுற்ற காலத்தில் மூளைக்கு வேலை கொடுப்பது**

உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும். உடல் சரியாக ஆனபின்னால், மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.

**மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது**

மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனைகளை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவாகின்றன. அதனால், மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது.

**பேசாமல் இருப்பது**

அறிவு பூர்வமான உரையாடல்களை மேற்கொள்வது மூளையின் வலிமையை அதிகரிக்கிறது.★★★







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனதில் உயர்வான சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். எந்த வேலையையும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் செய்ய முற்படுவீர்கள். தாய் வழி உறவுகளால் அனுகூலம், ஆதாயம் பெறலாம். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாட்டால் எரிச்சல் அடையலாம்.

### இடபம்



ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். சிறிய குடும்ப பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். செலவில் சிக்கனம் அவசியம்.

### மிதுனம்



எந்த விடயத்திலும் தனித்து செயற்பட்டு முத்திரை பதிக்க முற்படுவீர்கள். உங்களுக்காக அல்லது குடும்ப உறுப்பினர்களுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நண்பர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான பொருள் வரவைப் பெறலாம்.

### கடகம்



தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். அயலார் பற்றி விமர்சிப்பதைத் தவிர்க்கவும். கடன், பாக்கிகளை செலுத்துவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உற்சாகம் குடிகொள்ளும் நாள்.

### சிங்கம்



உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து குடும்பத்தினருக்கு அதை அறிவுரையாகச் சொல்வீர்கள். காத்திருப்பு, அலைக்கழிப்பு நேரும்.

### கன்னி



மனதில் இனம் புரியாத கவலை ஆட்கொள்ளலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நல்ல நண்பர் ஒருவரே உங்களின் மனம் நோகும் வகையில் நடந்து கொள்ளலாம். அதிக பலனை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வேலைப்பளு அதிகரிக்கும்.

### துலாம்



தொலைபேசி வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

### விருச்சிகம்



அலைச்சல், பதற்றம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக பார்க்காத உறவினர்கள் சிலரை பார்க்க நேரிடலாம். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். பழைய அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

### தனுசு



வரவுகளை விட செலவுகள் அதிகரிக்கலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களில் மாற்றங்கள் செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி விட்டு புதிய பொருள்கள் வாங்கலாம். சிறு உடல் உபாதைகளால் அவதிப்படலாம். பக்தி நாட்டம் ஏற்படும்.

### மகரம்



உறவினர்கள் சிலர் தங்களின் வேலைக்காக உங்களின் உதவியை நாடலாம். வெளியூர்களில் வசிக்கும் சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். மற்றவர்களின் பேச்சை கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். கோபத்தைத் தவிர்க்கவும்.

### கும்பம்



புதியவர்களின் சந்திப்பு நிகழும். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்கு அலைவதால் பதற்றம் உருவாகலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். உங்களுக்கு தெரியாத விஷயம் ஒன்றை மற்றவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வீர்கள்.

### மீனம்



சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். அவசரப்பட்டு சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு, பின்னர் வருத்தம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள், தின்பண்டங்கள் வாங்குவீர்கள். அயலாருடன் பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். சோம்பல் கூடும்.

---

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று
# யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## க.நிரோசன்
### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

நான் ஆரம்பக் கல்வியைத் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும் பின் தரம் 6இல் இருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்று வருகின்றேன்.

இப்பரீட்சையில் 6ஏ2பிஎஸ் எனும் சராசரியான பெறுபேற்றைப் பெற்றதையிட்டு ஓரளவுக்கு மகிழ்ச்சியடைகிறேன். இப்பெறுபேற்றைப்பெற எனது பெற்றோரும், அண்ணன்மாரும் தந்த ஊக்கமும் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் சேவைக்கு அப்பாற்பட்ட அர்ப்பணிப்பு மிக்க கற்பித்தல் நடவடிக்கையும், நண்பர்களின் ஒத்துழைப்பும் பெரும்பங்கு வகித்தது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் உயர்தரத்தில் கணிதத்துறையை தெரிவுசெய்து அதன் மூலம் ஒரு பொறியியலாளராக வரவேண்டுமென்பதே எனது இலட்சியம்.



## சி.அருண்குமார்
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

நான் தரம்- 6 இல் இருந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகிறேன். நான் ஜி.சி.ஈ.சாதாரணப் பரீட்சையில் இப் பெறுபேற்றைப் பெறுவதற்கு காரணம் பாடசாலைக் கற்பித்தலும் எனது சுயகற்றலுமேயாகும்.

பாடசாலையில் கற்பித்த பாடங்களை மீட்டல் செய்வதன் மூலமும் அவற்றிற்கும் மேலாக நூல்களை தேடிக் கற்பதன் மூலமும் நான் எனது அறிவை விருத்தி செய்துகொண்டேன்.

இப்பெறுபேற்றைப் பெற உதவிய பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நான் உயர்தரத்தில் கணிதத்துறையில் கல்வி கற்றுவருகிறேன். உயர்தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தியடைவதே எனது நோக்கமாகும்.



## பரமநாதன் ஹரிதர்சன்
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

நான் ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலத்தில் தோற்றி 5ஏ2பிசிஎஸ் பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

எனக்கு இப்பெறுபேறு கிடைப்பதற்குச் சகல வழிகளிலும் உதவி புரிந்த பெற்றோர், உறவினர், பாடசாலைச் சமூகத்தினர், ஆசிரியர்கள் , தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் எனது நோக்கத்தின் அடிப்படையில் ஆங்கிலமொழி மூலத்தில் கணிதத் துறையைத் தெரிவு செய்துள்ளேன். நான் பொறியியலாளராக வருவதே என் குறிக்கோளாகும்.



## சிவயோகநாதன் துவாரகன்
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

நான் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் 5ஏ4பி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன். எனக்குக் கல்வி புகட்டிய பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


மேலதிக வகுப்புகள் வைத்து எம்மை ஊக்குவித்த ஆசிரியர்கள் என்றும் நினைவில் நிற்பவர்கள்.

உயர்தரத்தில் நான் கணிதத்துறையை ஆங்கில மொழிமூலம் தேர்வுசெய்துள்ளேன். என் இலட்சியத்தை அடைய அயராது உழைப்பேன்.

நேர்காணல்: எஸ்.மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 31ஆம், 32ஆம் வினாக்கள் பின்வரும் வரிப்படங்களுடன் தொடர்புடையவை.




31. வாந்திபேதி நோயை ஏற்படுத்துவது எது? ......................

32. பாலைத் திரையவைப்பது எது? ......................

33. கழிவுநீர் பரிகரிப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
   1) முதலான, துணையான எனும் இரு படிகளில் நிகழும்.
   2) முதலான பரிகரிப்பில் உயிரியல் தொழிற்பாடு நிகழாது.
   3) துணையான பரிகரிப்பில் Trickling Filter பயன்படுத்தப்படும்.
   4) துணையான பரிகரிப்பின் பின் கிருமி நீங்குவதற்காக குளோரின் பயன்படுத்தப்படும்.
   5) கழிவு நீரில் உள்ள சேதனப் பதார்த்தங்களின் சமிபாட்டுக்கு காற்றின்றிய பக்ரீரியாக்கள் பயன்படுத்தப்படும்.

34. பதார்த்தம் - தொழில் தொடர்பாகத் தவறான இணைப்பு எது?
   1) கிறிசோபிளேவின் - பங்கசுக்களின் மென்சவ்வைப் பாதிக்கும்.
   2) பொலிமிக்சின் - பக்ரீரியாக்களின் கலமென்சவ்வைப் பாதிக்கும்.
   3) எரித்திரோமைசின் - பக்ரீரியாக்களின் புரதத்தொகுப்பைத் தடுக்கும்.
   4) இன்ரெபெரோன் - இரும்புடன் இணைந்து பக்ரீரியா வளர்சியைத் தடுக்கும்.
   5) பென்சிலின் - பக்ரீரியா கலச்சுவர்த்தொகுப்பை நிரோதிக்கும்.

35. தரம் குறைந்த உலோகத் தாதுக்களில் இருந்து செம்பைப் பிரித்தெடுக்கப் பயன்படுத்தப்படும் நுண்ணங்கி எது?
   1) Bacillus thuringiensis
   2) Pseudomonas denitrificans
   3) Thiobacillus ferroxidans
   4) Methano bacterium
   5) Streptococcus thermophilus

36. நோயாக்கியின் உக்கிரத்தில் பங்களிப்புச் செய்யாதது எது?
   1) உயிர்க் கலங்களினுள்ளே ஊடுருவும் திறன்.
   2) உயிர்க்கலங்களினுள்ளே பெருகும் திறன்.
   3) நொதியங்களை உருவாக்கும் திறன்.
   4) தொட்சின்களை விடுவிக்கும் திறன்.
   5) பிறபொருள் எதிரி உருவாக்கத்தைத் தூண்டும் திறன்.

37. நன்னீர் மீன்பண்ணை வளர்ப்புக்குப் பொருந்தாத மீன்,
   1) விரால். 2) மிரிகால். 3) திலாப்பியா.
   4) ரோகு. 5) பொதுகாப்.

38. Plasmodium ஒட்டுண்ணியின் வாழ்க்கை வட்டத்தில் ஒடுக்கற்பிரிவு நிகழ்வது,
   1) புணரிக் குழியங்களில்.
   2) புணரிக்கலச் சிறைப்பையில்.
   3) இயங்குமுட்டையில்.
   4) வித்திச் சிற்றுயிர்களில்.
   5) பாத்துமுறைச் சிற்றுயிர்களில்.

39. SEMB வைரசுக்களால் பாதிக்கப்படும் பண்ணை வளர்ப்பு இறால் இனம்,
   1) Cyprinus carpio 2) Catla catla
   3) Labio rohita 4) Cirrhinus mrigala
   5) Penaeus monodon

40. Necator americanus வாழ்க்கை வட்டத்தில் மனித உடலில் இருந்து வெளியேறும் நிலை,
   1) கருக்கட்டப்பட்ட முட்டை. 2) 4 கல நுகமுட்டை.
   3) நிறைவுடலி. 4) $L_1$ குடம்பிப் பருவம்.
   5) $L_3$ குடம்பிப் பருவம்.

41. தென்னைப் பீடையான Promecotheca cumingi தொடர்பான தவறான கூற்று,
   1) Coleoptera வர்ணத்துக்குரியது.
   2) முட்டைக்கூடுகளில் முட்டைகள் காணப்படும்.
   3) சேத்தை உண்டுபண்ணுவது குடம்பிப்பருவம் மாத்திரம்.
   4) கூட்டுப்புழுப் பருவம் தென்னையின் சீறிலைகளில் காணப்படும்.
   5) Demmockia javanica இனால் கட்டுப்படுத்த முடியும்.

42. நெற்றாவரத்தில் இலை வெளிறல் நோயை ஏற்படுத்துவது,
   1) பங்கசு. 2) பக்ரீரியா. 3) வைரசு.
   4) நெமற்றோடா. 5) கனியுப்புக் குறைவு.

43. பீடைக்கட்டுப்பாட்டு முறையைத் தீர்மானிக்காத காரணி,
   1) பீடையின் வாழ்க்கை வட்டம்.
   2) பீடையால் ஏற்படுத்தப்படும் தாக்கம்.
   3) செலவு. 4) கலாசார முறையிலாகக் கட்டுப்பாடு.
   5) சூழல் நிலைமை.

44. AaBb x Aabb எனும் இனக்கலப்பில் உருவாகக்கூடிய பிறப்புரிமை அமைப்பு வகை எண்ணிக்கை,
   1) 4 2) 6 3) 9 4) 2 5) 8

45. மனிதக் குருதிக் கூட்டம் A, B, AB, O எனும் எதிருருக்களால் தீர்மானிக்கப்படுகிறது. A குருதிக்கூட்டம் உள்ள ஆண் ஒருவர் B குருதிக்கூட்டம் உள்ள பெண் ஒருவரைத் திருமணம் செய்தால் அவர்களின் பிள்ளையின் குருதிக்கூட்டம்,
   1) A 2) B 3) AB
   4) O 5) A, B, AB, O இல் [illegible]

46. தக்காளியில் வட்டப்பழம் (R) நீண்ட பழத்திற்கு (r) ஆட்சி. அழுத்தமான பழம் (A) சுருக்கமடைந்த பழத்திற்கு (a) ஆட்சி. வட்டமான அழுத்தமான பழங்களை உடைய தக்காளியுடன், நீண்ட சுருக்கமடைந்த தக்காளியைக் கலப்புச்செய்த போது வட்டமான அழுத்தமான பழங்களும், வட்டமான சுருங்கிய பழங்களும் முறையே 1:1 விகிதத்தில் கிடைத்தன. இம் முடிவில் இருந்து பெற்றோரின் பிறப்புரிமை அமைப்பானது,
   1) RRAa x rraa 2) RRAA x rraa
   3) RrAA x rraa 4) RrAa x rraa
   5) rrAa x rraa

47. பூமியின் ஆதி வளிமண்டலத்தில் காணப்படாத வாயு,
   1) $H_2$ 2) $O_2$ 3) நீராவி. 4) $CO_2$ 5) $NH_3$

48. டாவினின் கோட்பாட்டின்படி அடிப்படையில் புதிய இனங்களின் தோற்றத்தை விளக்குவது,
   1) விகாரங்கள். 2) பாரம்பரிய மாறல்கள்.
   3) மிகை உற்பத்தி. 4) இசைவு விரிகை.
   5) இயற்கைத் தேர்வு.

49. Chi-square சோதனை செய்யப்படுவதன் காரணம்,
   1) செவ்வன் பரம்பலை அறிவதற்கு.
   2) நியம விலகலை அறிவதற்கு.
   3) நடுவன் பெறுமானத்தை அறிவதற்கு.
   4) பரிசோதனை முடிவை உறுதிப்படுத்துவதற்கு.
   5) எதிர்பார்க்கும் பெறுமானங்களுக்கும் அவதானிப்புப் பெறுமானங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளின் கருத்துண்மையை அறிவதற்கு.

50. ஆண், பெண் ஆகிய இரு குடித்தொகையில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளின் நியம விலகல்கள் முறையே 126, 135 ஆகும். மாதிரிகளின் எண்ணிக்கை 30 ஆயின், இத்தரவுகளின் நியம வழு.
   1) 0.337 2) 3.37 3) 33.7 4) 337 5) $\sqrt{337}$

* 51-60 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையை உபயோகிக்குக.

| | | |
|---|---|---|
| விடைகள் A, B, D சரியாயின் | ......................... | 1 |
| விடைகள் A, C, D சரியாயின் | ......................... | 2 |
| விடைகள் A, B சரியாயின் | ......................... | 3 |
| விடைகள் C, D சரியாயின் | ......................... | 4 |
| வேறுவிடைகள் சரியாயின் | ......................... | 5 |

51. கசியிழையம்,
   A) உயிருள்ளது. B) அரும்பர் உடையது.
   C) தாயம் கொன்றின் உடையது.
   D) என்பு மீன்களில் காணப்படும்.
   E) சுறா, திருக்கை போன்ற கசியிழைய மீன்களிலும் காணப்படும்.

52. மரவுரியில் காணப்படுவது/காணப்படுபவை,
   A) துணைமேற்பட்டை. B) தக்கை.
   C) மையவிழையம். D) துணைக்காழ்.
   E) துணை உரியம்.

53. புவியில் பூகோள வெப்பமாக்கலுக்குப் பங்களிப்பது/பங்களிப்பவை,
   A) காடழிப்பு. B) அதிக வனப்புகை.
   C) ஓசோன்படை. D) சமுத்திரம் மாசடைதல்.
   E) "X" கதிர்களின் ஊடுருவல்.

54. மளமளப்பான தசைக்கலம்,
   A) இரு முளையும் கூம்பியும். B) தனிக்கருவுடையது.
   C) பல்கருவுடையது. D) இதயத்தில் காணப்படும்.
   E) இச்சையுள்ள இயக்கமுடையது.

55. உணவு நஞ்சாதலை ஏற்படுத்தக்கூடிய பக்ரீரியாக்கள்,
   A) Aspergillus flavus B) Claviceps purpurae
   C) Staphylococcus aureus D) Clostridium botulinum
   E) Salmonella typhii

56. ஒட்டுண்ணிகள் மனிதனில் தொற்றும் நிலை எனும் இணைப்புக்களில் சரியானது/சரியானவை,
   A) Entamoeba - போசணைச் சிற்றுயிர்.
   B) Wuchereria - மைக்கிரோ பைலேரியா.
   C) Necator - $L_3$ குடம்பிப் பருவம்.
   D) Ascaris - $L_2$ குடம்பியுடைய முட்டை.
   E) Plasmodium - பாத்துமுறைச் சிற்றுயிர்.

57. சிறுநீரகங்களில் pH சீராக்கலில் சிறுநீரகத்திகளினால் சுரக்கப்படும் பதார்த்தம்/பதார்த்தங்கள்,
   A) நீர். B) $HCO_3^-$ C) $H^+$ D) $NH_3$ E) யூரியா.

58. வைரசுக்கள் தொடர்பான கூற்றுக்களில் சரியானது/சரியானவை,
   A) தனித்துவமான ஜீனோம் உடையவை.
   B) அழுகல் வளரிகளாக் வாழக்கூடியவை.
   C) பொலிமரேஸ் நொதியங்கள் உடையவை.
   D) பளிங்காக்கக்கூடியவை.
   E) கூர்ப்பு மாற்றங்களுக்கு உட்பட முடியாதவை.

59. ஒளித்தொகுப்பில் ATP பயன்படுத்தப்படும் தாக்கப் படிநிலைகள்,
   A) $RuBP + CO_2 \rightarrow$ உறுதியற்ற $C_6$ சேர்வை.
   B) உறுதியற்ற $C_6 \rightarrow 2PGA$ C) $PGA \rightarrow PGAL$
   D) $RuMP \rightarrow RuBP$ E) $NADPH_2 \rightarrow NADP$

60. பாரம்பரிய மாறல்களை எதில்/எவற்றில் அதிகம் எதிர்பார்க்க முடியாது?
   A) Hydra அரும்புதலில்.
   B) Plasmodium பிளவுப் பிறப்பில்.
   C) ஒரே மகரந்தக் கூட்டில் உருவாகிய மகரந்தமணிகளில்.
   D) Ameba பிளவுபடுதலில்.
   E) வித்து உருவாகும் எச்சங்களில்.

(பகுதி II அடுத்த வாரம் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISA - வீசா
Consultancy Service

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,***

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.



## வீடு வாடகைக்குண்டு

112, மானிப்பாய் வீதியில் [ஐந்து சந்திக்கு அருகில்] 7அறைகள் கொண்ட மற்றும் வாகனங்கள் [பெரிய] நிறுத் தக் கூடியதுமான வசதிகொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. நேரில் பார்வையிடலாம்.

தொடர்பு: 0777679188



## காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.

தொடர்புக்கு:-
0714102174/0771622770


## கல்லூரித் தினவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கல்லூரித் தினவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ந.குண சீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் கலந்துகொள்வார். (204-253)

## கண்ணீர் அஞ்சலி



தென் மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோயில் பரிபாலனசபையின் முன்னாள் செயலாளர்

அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சரசாலை சரஸ்வதி வித்தி)

அவர்கள் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்தியடைய மவும் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
தென் மட்டுவில். (99250) வேரற்கேணி கந்தசுவாமி கோயில்.


# COMPUTER EXPRESS
Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

## மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>3 Months<br>3500/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7500~~/= 4500/= | Diploma in Web Page Designing<br>3 Months<br>~~7500~~/= 4500/= |
| Diploma in Graphic Designing<br>4 Months<br>~~7500~~/= 4500/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7000~~/= 4000/= | Diploma in Auto CAD<br>3 Months<br>~~7500~~/= 4500/= |
| Diploma in Accounting Package<br>3 Months<br>~~7500~~/= 4500/= | Diploma in Computer Science<br>4 Months<br>~~7500~~/= 4500/= | Honors Diploma in Computer Science<br>3 Months<br>~~13500~~/= 6500/= |

80% Off

50% Off Advance Courses

Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch I - 09.06.2010 - 9Am or 3pm
Batch ii - 12.06.2010 - 9Am or 3pm
Batch iii - 14.06.2010 - 9Am or 3pm
Batch iv - 16.06.2010 - 9Am or 3pm

**1 Week Courses**
(Monday to Friday)

Start On 14.06.2010 At 9AM

1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகலிங்கம் சிவசோதி**

(முன்னாள் அதிபர், யா/மட்டுவில் வடக்கு, சந்திரமௌலீச வித்தியாலயம்)

மலர்வு
03★12★1946

உதிர்வு
09★06★2000

கடமை கண்ணியத்துடன் பணியாற்றிய கல்வியாளன்
தெளிவான பேச்சாற்றலுடன் தூரநோக்கு சிந்தனையாளன்
ஆற்றலுடன் கற்பித்து பிள்ளைகளை ஏணியில் ஏற்றினீர்
அயலவரையும் நேசித்து அவர்களது மனங்களில் வாழ்கின்றீர்
வாடா மலராய் என்றும் எம் மனங்களில் நிலைத்து நிற்கின்றீர்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர். [99215]

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்
## ஈரவிழிகள் நனைந்தபடி
## இன்றும் உன் நினைவின் வழி



செல்வி
**ஸ்ரீஸ்கந்தராசா பிரவீனா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.09.1987 | 09.06.2008 |

தூரவிலகிய ஓர்காலத்தின்
தொலைந்துபோகாத உன்நினைவுகள்
மேகதூதத்தின் தளிர் மழை எனவும்
மலர் மேனிதடவிடும் மல்லிகையாயும்
நீண்டு கனக்கிறது எங்கள் மனவெளியில்
பாவாடைத் தாவணியில்
பவனிவரும் உனதழகும்
பள்ளிப்பருவ காலமதில்
பாடிவரும் உன் எழிலும்
பார்த்து மனம் குழைகின்றோம்
நெஞ்சில் படிந்து போன
உன் நினைவுகளில்.

குடும்பத்தினர்.

(99229)


## உங்களை அழைப்பவர் யார் என்று அறிந்து கொள்ளுங்கள்

யாழ் வாழ் மக்களும்

slt CLI

வசதியை பெற்றிடலாம்



CLI அலகு
ரூ. 950/-

மாதாந்த கட்டணம்
ரூ. 50/- +வரி

- அழைப்பவரின் இலக்கத்தை பார்க்கும் வசதி
- இலக்கங்களை சேமித்து வைத்து மீளப்பெறும் வசதி

CLI அலகுகளை சகல டெலிஷொப் நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு
(021) 2 222 231/2 222 232

Sri Lanka Telecom


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மீண்டும் மலேரியா நோய்த் தொற்று; 15இற்கும் மேற்பட்டோருக்கு இதுவரை சிகிச்சை

## விழிப்புணர்வு நடவடிக்கைகள் மும்முரம்

கிளிநொச்சி,ஜூன்9

வன்னிப் பகுதியில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த மலேரியா தற்போது மீண்டும் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொக்காவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தொலைத்தொடர்புக் கோபுர வேலைகளுக்கென தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களிடமே முதலில் மலேரியா இனங்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை 15 இற்கும் மேற்பட்ட மலேரியா நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்கள் கொக்காவில், முறிகண்டி, கிருஷ்ணபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பான தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் மலேரியாத் தடுப்பு இயக்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-405)

# நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மன்னார்-கொழும்பு சொகுசு பஸ் சேவை

மன்னார்,ஜூன்9

மன்னாரில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. மன்னாரிலுள்ள தனியார் பேருந்து சேவை நிலையம் இச் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இந்த ஆடம்பர பஸ்ஸில் சுமார் 60 பயணிகள் பிரயாணம் செய்யலாம். பிரயாண நேரத்தில் அலுப்பின்றிச் செல்வதற்கு இதில் தொலைக்காட்சிப் பெட்டியும் பொருத்தப்பட்டுள்ளது.

தலைமன்னாரிலிருந்து புறப்படும் இந்த பஸ் மதவாச்சி, அனுராதபுரம், புத்தளம் வழியாகக் கொழும்பு சென்று பின்னர் அதே வழியாக மீண்டும் மன்னார் வந்தடையும்.

இதன் ஒரு வழிக் கட்டணமாக 750 ரூபா அறவிடப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (50-80)

# வலதுகுறைந்தோருக்கான வாழ்வாதார நிதி உதவி

மன்னார்,ஜூன்9

சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சினால் 'மஹிந்த சிந்தனை' திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக வலது குறைந்த குடும்பங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த ஓய்வூதியப் பணம் மூவாயிரம் ரூபா தற்போதும் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படாத போதிலும் இவர்களுக்கான கொடுப்பனவுகள் எவ்விதத் தடங்கல்களுமின்றி வழங்கப்படுகின்றன. இதன்படி சென்ற ஐந்து மாதங்களுக்குமான 15ஆயிரம் ரூபாய்களை மாவட்டத்தில் வாழும் 35 குடும்பத் தலைவர்கள் தற்போது பெற்றுக்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தற்போது நாடு முழுவதும் சுமார் 2500 குடும்பத் தலைவர்கள் அதைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (50-80)




# மாந்தையில் குடியேறிய மக்களுக்கு 3நாள் நடமாடும் வைத்திய சேவை

மன்னார்,ஜூன்9

மாந்தை மேற்கில் மீள்குடியேறி வாழும் மக்களுக்கான மூன்று நாள் நடமாடும் வைத்திய சேவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் இன்று புதன்கிழமை வரை நடைபெற்று வருகின்றது. இச் சேவையில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

சுமார் முப்பதுக்கும் அதிகமான சிங்கப்பூரில் இருந்து வந்துள்ள பல்துறை சார் வைத்தியர்கள் இச்சேவையில் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பை வழங்கினர். சமுகம் தந்திருந்த நோயாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டன.

மன்னார் பிராந்தியக் கட்டளைத் தளபதி மைத்திரி டயஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவையில் மாந்தை மேற்கு 215 ஆவது படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் நலிந்த மகாவிததாரண, மாந்தை மேற்கு உட்படப் பல்வேறு அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (50-80)

# மன்னார் உணவகங்களில் அதிக விலையில் பொருள்கள்

மன்னார்,ஜூன்9

மன்னாரிலுள்ள சகல உணவு விடுதிகளிலும் எவ்வித கட்டுப்பாடுமற்ற வகையில் சிற்றுண்டிவகைகள் தன்னிச்சையாக விலைகள் உயர்த்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு எவ்வித உணவு விலைக்கட்டுப் பாடுகளுமின்றி உணவுப் பண்டங்கள் விற்கப்படுகின்றன. பொதுமக்களும் ஏன் என்று கேட்காமல் பணத்தைக் கொடுத்து விட்டு அவற்றை வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (50-80)

# இராமநாதபுரம் கமநல சேவை நிலையம் இயங்காமையால் விவசாயிகள் சிரமம்

கிளிநொச்சி, ஜூன்9

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பிரதேச மக்களுக்கு சேவையாற்றும் இராமநாதபுரம் கமநல சேவை நிலையம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் அவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கமநல சேவை நிலையத்தை நாடவேண்டியுள்ள நிலையில் அது ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இப்பிரதேசம் விவசாயப் பிரதேசம் என்பதால் மக்கள் குடியேறியவுடன் தமது ஜீவனோபாயத் தொழிலாகிய விவசாயத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. உடனடியாகக் கிணறு இறைப்பதற்கான வசதிகள், களை நாசினிகளை விசிறுவதற்கான வசதிகள், நிலங்களை உழுது பண்படுத்துவதற்கான வசதிகள் என்பன மக்களிடம் இல்லாத நிலையில் கமநலசேவை நிலையத்திடம் அவற்றை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

அத்துடன் காலபோக நெற்செய்கைக்குரிய முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறை கொண்டு உடனடியாக இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தை ஆரம்பித்து தமக்கு உதவ வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (50-405)

# பருத்தித்துறையில் இருந்து பனங்காமத்துக்கு பஸ் சேவை

மல்லாவி,ஜூன்98

பருத்தித்துறையிலிருந்து பனங்காமத்துக்கு தனியார் பஸ் சேவை ஒன்று தினமும் நேரடியாக நடைபெற்று வருகிறது.

தினமும் காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து பனங்காமத்துக்கு புறப்பட்டுச் செல்லும் பஸ் நெல்லியடி, கொடிகாமம், கிளிநொச்சி, மாங்குளம், வவுனிக்குளம், மல்லாவி ஊடாகச் சென்றடைகிறது.

அன்றைய தினம் பிற்பகல் பனங்காமத்திலிருந்து இதே பாதை வழியாக புறப்படும் பஸ் மாலை பருத்தித்துறையை வந்தடையும். (50-236)

# ஸ்ரீதரன் எம்.பி மக்களுடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கடந்த 5ஆம் திகதி வட்டக்கச்சி, இராமநாதபுரம் பிரதேச மக்களையும் கூட்டமைப்பின் ஆதரவாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மண்டபத்தில் மு.ப. 10.30 மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பு இரண்டு மணிநேரம் நீடித்தது. இச்சந்திப்பில் மீள்குடியமர்வின் பின் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பிரதேச குறைபாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மக்களிடம் கேட்டறிந்தார். அத்துடன் சிதைவடைந்து இடிபாடுகளாகக் காணப்படும் வட்டக்கச்சி பொதுச்சந்தையையும் நேரில் சென்று பார்வையிட்டார். (50-405)

# வட்டக்கச்சி உப தபாலகம் இயங்க ஆரம்பித்தது

கிளிநொச்சி,ஜூன்9

வட்டக்கச்சி உப தபால்கம் கடந்த 2 ஆம் திகதியில் இருந்து மீண்டும் இயங்க் ஆரம்பித்துள்ளது. உபதபாலகத்தின் பழைய கட்டடத்திலேயே அது இப்போதும் இயங்குகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் வட்டக்கச்சி பகுதியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட நிலையில் உபதபாலகம் ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக கடந்த வாரம் உதயனில் செய்தி வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-405)

# கரைச்சிப் பிரதேச சபையின் 31 கிராமங்கள் நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனம்

கிளிநொச்சி,ஜூன்9

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக் குள் அடங்கும் 31 கிராமங்கள் நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி அமைச்சரினால் இது பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கிராமங்களின் விவரம் வருமாறு:-

பொன்நகர், பாரதிபுரம், மலையாள்புரம், விவேகானந்தநகர், கிருஷ்ணபுரம், உதயநகர் கிழக்கு மற்றும் மேற்கு, அம்பாள்குளம், செல்வாநகர், ஆனந்தபுரம், தொண்டமான்நகர், கனகாம்பிகைக் குளம், திருவையாறு மேற்கு, இரத்தினபுரம், கிளிநொச்சி நகரம், மருதநகர், பன்னங்கண்டி (வடக்கு,மேற்கு), கனகபுரம், திருநகர் (தெற்கு, வடக்கு), கணேசபுரம், ஜெயந்திநகர், பெரியபரந்தன், உருத்திரபுரம் (வடக்கு, கிழக்கு), சிவநகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு..

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் குமரபுரம், பரந்தன், கோரக்கன்கட்டு (தெற்கு, மேற்கு)

எனவே நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் வீடுகள், அலுவலங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட கட்டங்களை அமைப்போர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திட்டங்களுக்கு அமையவே அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-224)

# வன்னிப் பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்க அடிப்படை வசதிகள் இல்லை

## வவுனியா நகரசபையின் உப தலைவர் தெரிவிப்பு

வவுனியா,ஜூன் 9

வன்னிப் பாடசாலைகளில் மாணவர்கள் கற்பதற்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. சீருடைகள், புத்தகங்கள், கொப்பிகள், பாதணிகள், தளபாடங்கள் என எந்த வசதிகளும் இல்லை. அப்படிப் பார்க்கின்ற போது இப்பாடசாலைகள் பல வசதிகளை இழந்து காணப்படுகின்றன.

தமிழினத்தின் கடந்த கால வரலாறும் அதனுடைய வரலாற்றுப் பிண்ணனிகள் என்பவற்றை பார்க்கின்ற போது கல்வியே எங்கள் சொத்து. அதைப் பாதுகாத்து பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கம் கொடுக்க வேண்டியவர்கள் பெற்றோர்களே என வவுனியா நகரசபை துணைத்தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

சைவப் பிரகாச மகளிர் கல்லூரியின் இவ்வாண்டிற்கான பெற்றோர் ஆசிரியர் அபிவிருத்தி சங்க கூட்டம் பாடசாலையின் அதிபர் செல்வி உமா இராசையா தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

பாடசாலையின் இவ்வாண்டிற்கான [illegible] பெற்றோர் ஆசிரியர் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அங்கு கூடியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட பெற்றோர்கள் மத்தியில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

எமது இனத்தின் கடந்த கால வரலாறுகளை நாம் மீட்டுப் பார்த்தால் அதற்கு கல்வி ஏதோ ஒரு காரணமாக அமைந்துள்ளது. எமது இனத்தின் அனைத்து விடுதலைப் போராட்டங்களுக்கும் கல்வியின் தரப்படுத்தலே காரணமாகும். 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் விளைவாகவும் பல்கலைக்கழக தரப்படுதலில் ஏற்பட்ட அநீதி காரணமாகவுமே ஆயுதப் போராட்டம் தோன்ற காரணமாயிற்று. இதனால் நடந்ததது என்ன? பாடசாலைகள் பல நிர்மூலமாக்கப்பட்டன. பேராசிரியர்கள் பீடாதிபதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என எத்தனையோ உயிர்கள் இந்த கோரயுத்தம் பலிகொண்டுள்ளது. கல்வியிலே சிறந்து விளங்கிய எத்தனையோ தமிழ்க் கல்விமான்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார்கள். இதனால் எமது சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட போராட்ட சூழ்நிலைகள், உயிரிழப்புக்கள், இடப்பெயர்வுகள், அவல வாழ்வுகளுக்கு மத்தியிலும் தமிழினத்தின் மாணவ சமூகம் கல்வியில் வியத்தது சாதனைகளைப் படைத்துள்ளது.

இப்பாடசாலை கூட சென்ற ஆண்டு வன்னியில் இருந்து எமது உறவுகள் இடம்பெயர்ந்து வந்தபோது ஒரு நலன்புரி நிலையமாக ஏழு மாதங்கள் செயற்பட்டது. இதன் காரணமாக பல இடங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலே இப்பாடசாலை இயங்கியபோதும் அதிபரின் கடும் முயற்சி காரணமாக புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த.உயர்தர பரீட்சையிலும் க.பொ.த.சாதாரண பரீட்சையிலும் இவற்றோடு விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்த்தின ஆங்கிலதின போட்டிகளிலும் இம் மாவட்டத்தில் முதன்மையான இடத்திற்கு இக்கல்லூரியின் மாணவிகள் வந்திருப்பதை எவராலும் மறுக்க முடியாது. அதற்குக் காரணம் தமிழ் சமூக மாணவர்கள் எந்த சவால்களை சந்தித்தாலும் மனம் தளராது உறுதியுடன் முன்னேறும் ஆற்றல் கொண்டவர்கள் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆவது திருமண நிறைவுநாள் வாழ்த்துக்கள்

## விவேகானந்தன்–பொன்ரதம்

தம்பதியினர்



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த
விவேகானந்தன்–பொன்ரதம் தம்பதியினர் இன்று
(09.06.2010) புதன்கிழமை தமது 25ஆவது ஆண்டு
திருமண நிறைவின் வெள்ளி விழாவைக்
கொண்டாடுகிறார்கள். அவர்கள் இன்னும் பல நிறைவு
நாள்களைக் கொண்டாட இறையருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அன்புச் சகோதரிகள்: பேபி, வாணி, ரூபி, சித்திரா, சுகந்தி.
அன்புச் சகோதரர்கள்: சுகு, சுதா.
மருமகள்மார்: ஓவியா, அபியா.
பேறாமக்கள்: அருணன், அருவுணவி.

சொர்ணவடலி, கொக்குவில்.


## நடமாடும் சேவை

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் ஆகியன தவறவிட்டவர்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.
(50-204-253)


# ஜயோதர

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 653 திகதி 07-06-2010

வெற்றி எண்கள்

**04 20 23 28 A**

ஜக்பொட் பரிசு ரூ. 21,816,370/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 21,816,370/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 399 | 1,000/= | 399,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 636 | 1,000/= | 636,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15061 | 60/= | 903,660/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7154 | 40/= | 286,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 180013 | 20/= | 3,600,260/= |
| | | மொத்தம் | ரூ. 6,255,080/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 600088748-9-02 |
| யாழ்ப்பாணம் | 600096367-9-12 |
| கம்பஹா | 600095277-9-29 |
| மொணராகலை | 600080686-9-27 |
| பொலன்னறுவை | 600086017-9-19 |
| களுத்துறை | 600084331-9-25 |
| கொழும்பு | 600096952-9-34 |
| கேகாலை | 600093459-9-28 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,655,080/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 22,302,280/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஜூன் 10 ஆம் திகதி வியாழக்கிழமை
சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021-222 8093, E.mail: alliancejaffna@yhoo.com

## Learn French the French Way
## French Classes

* சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.
* பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயில்வதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

மேலதிக விபரங்களுக்கு நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.


## அரச வாகனங்களுக்கு நீல நிற இலக்கத் தகடுகள்

கொழும்பு, ஜூன் 09

சகல அரச வாகனங்களையும் இலகுவில் அடையாளம் காண்பதற்கு வசதியாக அவற்றின் இலக்கத் தகட்டில் நீல வர்ணம் பொறிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனத் திணைக்கள ஆணையாளர் லலித் தர்மப்பிரிய இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இலக்கத் தகடுகளைத் தயாரிக்கும் நிறுவனத்திற்கு இதுதொடர்பாகத் தமது திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது எனக் கூறினார்.

இதனையடுத்து இந்நிறுவனம் நீல நிறத் தகடுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. சகல அரச வாகனங்களுக்கும் புதிய இலக்கத் தகடுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் இவற்றை விற்பனை செய்யும் வேளைகளில் பிரச்சினைகள் உருவாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

புதிய திட்டம் இன்னும் ஓரிரு வாரங்களில் அமுலுக்கு வருமென்றும் அவர் தெரிவித்தார்.
(சி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 30.05.2010 இல் B.A பட்டம்பெற்ற எமது சங்கப் பணியாளர்
திரு.குமாரசாமி விஜயகுமார் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



நெடுந்தூரம் கொண்ட
கல்வித்துறைதனில்
பட்டக்கல்வி என்ற
பெருந்தூரம் கடந்து
பெருமை பல சேர்த்து
சீரும் சிறப்பும் பெற்றீர்.
மேலும்பல
பட்டங்களையும்
பதவிகளையும் பெற
உளமார வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சி
அடைகின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,
கண்டிவீதி, சாவகச்சேரி.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்.


### நல்லூர் பிரதேச சபையின் கழிவகற்றும் திட்டம்

நல்லூர் பிரதேச சபை டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் விசேட கழிவு அகற்றும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த விசேட கழிவு அகற்றும் பணிகள் கடந்த சனிக்கிழமை முதல் இடம்பெற்று வருவதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பிரதேச சபைக்கு உட்பட்ட ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளில் வீதிகளில் போடப்படும் கழிவுகள், குப்பைகள் போன்றவை அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த குப்பைகள் கழிவுகள் அகற்றும் விசேட திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ளது. (50-224)

### எச்சமோட்டை வீதி புனரமைப்பு

யாழ்.எச்சமோட்டை பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதியில் ஏற்பட்ட சேதங்கள் புதிதாகத் தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்தபலவருடங்களாக புனரமைக்கப்படாமல் இருந்த இந்த வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (50-224)


# 13ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சுப்பையா ஆறுமுகராசா

மறைவு: 24.05.1998

தோற்றம்: 08.08.1932

திதி: 09.06.2010



நீ அழைத்தால் நான்
வருவேன்
நான் அழைத்தால் நீ
வரமாட்டாய்
வெகுதூரம்
சென்றுவிட்டாய்
மனிதன் வாழ்க்கையில்
ஒவ்வொரு
நாளும் ஏக்கம், அதை
தீர்த்து வைப்பது தாகம்.
13 ஆண்டுகள்
சென்றாலும்
என் இதயத்தில்
இடம்கொடுத்து
அன்பாய் வாழ
வைத்தாய்
திடீர் என்று மறைந்தாய்
எப்போ ஒருநாள் நீ
இருக்கும்
இடத்தில் வருவேன்
என் தெய்வமே.

மனைவி:
ஆ.சறோஜினிதேவி.

பிரம்படி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(99252)



# புதிய பிரிவுகள் ஆரம்பம்

## AAT (Srilanka)

Foundation level & intermediate level & Final
பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**Certificate Course in English**
Course commencing on:
19.06.2010- 8.30 am Week end batch
21.06.2010- 8.00 am Week day batch

**External Degree** (Jaffna University)
GAQ, BA 1 & BA Final
1st in Com, B.Com (1&11), Final
ஆரம்பம்: 12.06.2010 (Saturday) 9.00 am

Further Detail
Director

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஹொக்கிச் சுற்றுப் போட்டி; சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலகங்கள் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூன்9

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகமும் பெண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலகமும் சம்பியனாகின.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இருபாலாருக்குமான ஹொக்கிச் சுற்றுப் போட்டியை நடத்தியது.

இதன் இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகி முடியும் வரை உடுவில் பிரதேச செயலக அணியினர் கோல்கள் பெறும் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றும் அவர்களால் கோல்களை எதையும் பெறமுடியவில்லை.

ஆட்ட முடிவுவரை இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

வெற்றி, தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு அடி (பெனால்டி) வழங்கப்பட்டது.

இதில் இரண்டு அணியினரும் ஒரு கோல்களைப் பெற்றன. இதனால் மீண்டும் போட்டி சமநிலையில் முடிவுற்றது. மேலும் இரண்டு சமநிலை தவிர்ப்பு அடிகள் வழங்கப்பட்டன.

இதில் உடுவில் பிரதேச செயலக அணியினர் 02:01 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டு யாழ்.மாவட்டச் சம்பியனாகியது.

பெண்களுக்கான ஆட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப் பழை பிரதேச செயலக அணி மோதியது. இரண்டு அணியினரும் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் கடுமையாக மோதிக் கொண்டன.

இரண்டு அணிகளும் கோல்களைப் பெறுவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு கோல் பரப்பிற்கு பந்தினைக் கொண்டு சென்ற போதும் பின் கள வீரர்களினால் அம்முயற்சிகள் தடுத்து நிறுத்தப் பட்டன.

இதனால் ஆட்டத்தின் முதல்பாதி இரண்டு அணிகளும் கோல்கள் எதுவும் பெறப்படவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலான ஆட்டமாகக் காணப்பட்டது.

இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் விளையாடிய போதும் இரு அணிகளினதும் முயற்சிகள் கைகூடாத நிலையில் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி, தோல்வி காண்பதற்காக ஐந்து சமநிலை தவிர்ப்பு அடிகள் வழங்கப்பட்டன.

அதுவும் சமநிலையில் முடிவுற்றதனால் மேலும் ஒவ்வொரு பெனால்டி வழங்கப் பட்டது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வீரர் கோல் அடிக்க 6.5 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி தன்னை எதிர்த்து விளையாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு யாழ்.மாவட்ட சம்பியன் ஆனது. (6-23-86)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.



உடுவில் பிரதேச செயலக அணி.

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டமும் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆட்டங்களில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை களமிறங்குகின்றது.

இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி களமிறங்குகின்றது. (6-86)

சைக்கிள் ஓட்டப் போட்டிகளில்

## 100போட்டிகளில் 40 இல் முதலிடம் பெற்று சாதனை



யாழ்ப்பாணம், ஜூன்9

நவாலி சென்.றோக் விளையாட்டுக் கழகம் நடத்திய 75 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் நவாலி வடக்கைச் சேர்ந்த ம.நிர்மலேஸ்வரன் முதலாம் இடத்தைப் பெற்றார்.

முதலாம் இடத்தைப் பெற்ற இவருக்கு பரிசாக சைக்கிள் ஒன்று வழங்கப்படவுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக நூறுக்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றிய இவர் 40 போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

சிறந்த சைக்கிள் ஓட்ட வீரரான இவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் காங்கேசன்துறை எரி பொருள் விநியோகக் களஞ்சியத்தில் பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6 - 224)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## மாவட்டச் செயலகத்தின் கரப்பந்தாட்டம்; தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்!

வலி.வடக்கு, ஜூன் 9

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை தெல்லிப்பழை பிரதேச செயலக அணியின் ஆதிக்கமே காணப்பட்டது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:04, 25:18, 25:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ்,மாவட்டச் சம்பியனாகத் தெரிவானது. (6-86)

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் ஜனாதிபதி தங்கக்கிண்ணக் கைப்பந்தாட்டம்

வலி.வடக்கு, ஜூன்9

இலங்கை அரசாங்க நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி 'ஜனாதிபதி தங்கக்கிண்ணம்' கைப்பந்துச் சுற்றுப்போட்டியை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கைப்பந்தாட்ட சம்மேளனமும் அரசாங்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும் இணைந்து அகில இலங்கை ரீதியில் இச்சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளன.

அரசாங்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ணவின் வழிகாட்டலில் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன.

பிரதேச செயலகங்கள், மாகாணம், தேசிய மட்ட ரீதியில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. முதற்கட்டமாக பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக ஆண்கள், பெண்களுக்கான அணிகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் இருந்து தலா ஒரு ஆண், பெண் அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. (6-86)



இலங்கை இராணுவத்தின் 'றைக்ஹொண்டோ' கராத்தே சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், போட்டியில் வெற்றிபெற்ற வீரார்களுக்கு இலங்கைக்கான றைக்ஹொண்டோவின் தலைமைப் பயிற்றுநரும் சர்வதேச நடுவருமான கிஸூலி பதக்கம் வழங்குவதையும் முதல் இரு படங்களிலும் காணலாம்.

இராணுவ றைக்ஹொண்டோவின் தலைவர் பிரிகேடியர் [illegible] யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும், வீரர்களின் கராத்தே கண்காட்சியையும் இறுதி இரு படங்களில் காணலாம். (படங்கள்: தமிழியன், நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

## விகிர்தி வருஷ மஹோற்சவம் 10.06.2010-21.06.2010

| | | |
|---|---|---|
| 09.06.2010 | புதன் | மாலை 4 மணி விநாயகர் வழிபாடு. மஹோற்சவ பூர்வாங்க கிரியைகள். |
| 10.06.2010 | வியாழன் | பகல் 10.30 மணி கொடியேற்றம் |
| 15.06.2010 | செவ்வாய் | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், மாலை 7 மணி, பூச்சப்பறம். |
| 16.06.2010 | புதன் | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம் மாலை 7 மணி கைலாய வாகனம் |
| 17.06.2010 | வியாழன் | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம் ந.ப.12 மணி வேட்டைத் திருவிழா, மாலை 7 மணி சப்பறம் |
| 18.06.2010 | வெள்ளி | காலை 9.30 மணி இரதோற்சவம் |
| 19.06.2010 | சனி | காலை 9.30 மணி தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்) மாலை 6.00 மணி, கொடியிறக்கம். |
| 20.06.2010 | ஞாயிறு | மாலை 5 மணி திருக்கல்யாணம் (முருகப்பெருமான்) |
| 21.06.2010 | திங்கள் | மாலை 5.00 மணி வைரவர் உற்சவம் |

விசேட குறிப்பு

*கொடியேற்றம் : வசந்த மண்டபபூஜை: பகல் 9 மணி, கொடியேற்றம் : பகல் 10.30 மணி*
*இரதோற்சவம் : வசந்த மண்டபபூஜை - காலை 8 மணி, சுவாமி தேர் பவனி காலை 9.30 மணி*
*தீர்த்தோற்சவம் : வசந்த மண்டபபூஜை: காலை 8 மணி, சுவாமி தீர்த்தமாடுதல் காலை 9.30 மணி*

தினமும் உதயபூசை காலை 6 மணி, அபிஷேகம் 7.30 மணி, வசந்தமண்டபபூசை காலை 10.30 மணி
சாயரட்சை பூசை மாலை 5.00 மணி, வசந்தமண்டபபூசை மாலை 6 மணி
கொடியிறக்க கிரியைகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.
உற்சவ நாள்களில் இரவுத் திருவிழா தினமும் இரவு 8 மணிக்கு நிறைவுபெறும்.
மஹோற்சவ குரு: ஈசான சிவாச்சாரியார் இ.ரமணீதரக் குருக்கள்
தினமும் காலை பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.
தினமும் மகேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

*கோண்டாவில் கிழக்கு.* *(99258)* ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.


# தென்மராட்சி அதிபர்களுக்கு வெள்ளியன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான இலவச பாட நூல்(2011) விநியோகம் தொடர்பான கருத்தரங்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இவ்வருடம் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரத்தை வகுப்புரீதியாக எடுத்துவருமாறும் இவ்வருடத்திற்கான இலவச பாடநூல் வவுச்சர்களை கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி நாளை வியாழக்கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)


# பிரத்தியேக விஞ்ஞான வகுப்புகள்

## தரம் : 9,10,11

## இரா. செல்வவடிவேல்

இரண்டு இடங்களில் ஆரம்பம்

| அறிவொளி | மணி கல்வி நிலையம் |
|---|---|
| 150, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 09.06.2010 மாலை 4.00 | கிளை - 2 193, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 11.06.2010 மாலை 4.00 |



உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தினையொட்டி
மாவட்டப் புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினால் நடத்தப்படவுள்ள

# சித்திரப்போட்டி - 2010

- போட்டி விவரம்
  1 ஆம் பரிசு : ரூபா 5,000
  2 ஆம் பரிசு : ரூபா 3,000
  3 ஆம் பரிசு : ரூபா 2,000
- போட்டித் தலைப்பு: புகைத்தலால் ஏற்படும் தீமைகள்
- தாளின் அளவு : A3 (16.54" x 11.69")
- வர்ண ஊடகம்: விரும்பியது
- போட்டியாளர்: தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட தரத்திலும் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்கள்

★*விண்ணப்பப் படிவம் அனுப்பவேண்டிய முகவரி:*

இணைப்பாளர்,
மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
572/3, வைத்திய சாலை வீதி, யாழ்ப்பாணம்.

- கடிதத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சித்திரப் போட்டி (உலக புகைத்தல் ஒழிப்பு தினம் - 2010) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

*1. மாணவ/மாணவியின் முழுப் பெயர்:*
*2. தற்போது கல்வி பயிலும் தரம்:*
*3. பிறந்த திகதி: ஆண்டு மாதம் திகதி*
*4. தொலைபேசி இலக்கம் (இருப்பின்):*
*5. பாடசாலையின் பெயர்:*
*6. வீட்டு முகவரி:*
*7. பாடசாலை அதிபரின் சிபார்சு:*

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது விண்ணப்பப் படிவத்தினை *16.06.2010 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மேல் குறிப்பிட்ட முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கவும்.*

*சித்திரப்போட்டி 19.06.2010 ஆம் திகதி அன்று நடைபெறும். பரீட்சை நிலையம், நேரம் என்பன பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

மேலதிக தொடர்புகளுக்கு: 021 222 2278/021 222 3911

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.** (சி/56817)



## கணனி விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள P.4 Computers, Monirar உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. 1.7 Ghz , 2.0 Ghz , 3.0 Ghz 14,750/= 16,750/= 21,750/=

தொடர்பு: Sky Computer System
162, Main Streer, Jaffna. T.P: 021 222 1417


# காவலூரில் நுளம்புப் பெருக்கம் திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஊர்காவற்றுறை நகரத்தை அண்டிய பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஊர்காவற்றுறையில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதியில் இருந்து ஊர்காவற்றுறை பொதுச் சந்தைப் பகுதி வரையான கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் சிறுமரங்களும், கொடிகளும் பற்றையாக வளர்ந்து காணப்படுகின்றன.

இதன் காரணமாக நுளம்புப் பெருக்கம் அடையலாம் எனச் சுட்டிக்காட்டும் பிரதேச மக்கள், அவற்றை வெட்டி அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர். (ஒ-51)

# எரியாத நிலையில் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட இராசாவின் தோட்ட வீதிக்கும், கோயில் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதி விளக்குகள் எரியாததால் இப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் இரவுவேளைகளில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவீதி இருளில் மூழ்கியுள்ளதால் சமூக விரோதிகளின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதோடு வாகன விபத்துக்களில் பொதுமக்கள் சிக்கும் அவல நிலையும் ஏற்படுகின்றது.

இது குறித்து மின்சார சபையினரிடம் முறையிட்டபோது, யாழ். மாநகரசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையினர் இந்த விடயத்தில் அக்கறை காட்டி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே இப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும். (ஒ-23)


பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

01. கணக்காளர் 104/09 (நிரந்தரம்)
மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

*கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் அல்லது அகநிலைக் கணக்காய்வாளர் பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் அக நிலைக் கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பகுதி அல்லது கணக்காய்வுப் பகுதி எழுதுனர் பதவியில்.*

*அல்லது*

*ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டத்தில் பதவி ஒன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*கூட்டுறவு ஊழியரின் உயர்தரச் சான்றிதழ் அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் உயர்தரச் சான்றிதழ் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தி எய்தியதுடன் கணக்கியல் அல்லது கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்டப்பதவி ஒன்றில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.*

*02. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*03. சம்பளத்திட்டம் 10950 - 130X10 - 140X10 = 13650.00*

*04. வயது எல்லை : 18 - 45 இடைப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.*

*விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்வித்தகைமைச் சான்றிதழ் பிரதியுடன், தலைவர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம் (வ/து), பருத்தித்துறை என்ற முகவரிக்கு 24.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.*

*கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தின் ஊடாக அனுப்பிவைக்கவும்.*

**தலைவர்,**
2010.06.07 **பரு.பல.நோ.கூ.சங்கம்.**



# கண்ணீர் அஞ்சலி



மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களின் பாரியார்

## திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம்

அவர்கள் 08.06.2010 இல் தனது 90 ஆவது வயதில் காலமாகிய செய்தியைக் கேட்டு மகாஜன அன்னை கலங்குகிறாள்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவருடைய பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

*குறிப்பு:* 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அமரர் திருமதி **ஜயரத்தினம்** அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் சகல பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/568181)



# அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபை

## நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழா - 2010

★ நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது 12.06.2010 தொடக்கம் 27.06.2010 வரை நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இக்காலப்பகுதியில் ஆலய வீதியிலும் வெளிச்சுற்றாடலிலும், புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதியிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோர் வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு வியாபார அனுமதிப் பத்திரம் பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும்.

★ உயர் திருவிழாக் காலத்தில் நயினாதீவில் மு.ப. 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் பின்னர் பி.ப. 4.30 மணி முதல் இரவு 11 மணிவரையும் பிரதான வீதியிலும், யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும், ஆலயத்தின் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியிலும் மேற்கு மதில் எல்லைக்குள்ளும், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார்சைக்கிள்கள், ஆட்டோக்கள் உட்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் வாகனத்தரிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக இளைப்பாறு மண்டப வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுமாறு யாத்திரிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

★ வாகனத் தரிப்பிடங்களில் உரிய தரிப்பிடக் கட்டணங்களைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கெஜநேத்திரன் துரைராசா,**
**செயலாளர்,**
(சி/568179) **பிரதேச சபை வேலணை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளை ஒழிக்க இரகசியத் திட்டத்தின்கீழ் 75 நாடுகளில் அமெரிக்கப் படையினர் பிரசன்னம்

வாஷிங்டன், ஜூன் 9

அல் - குவைதா உட்பட தீவிரவாத இயக்கங்களின் தீவிரவாதிகளை ஒழிப்பதற்காக உலகில் 75 நாடுகளுக்கு அமெரிக்க இராணுவத்தினர் இரகசியத் திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டுள்ளனர். இவற்றில் 15 நாடுகளுக்கு ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இரகசிய உத்தரவுகளுக்கிணங்க படையினர் அனுப்பப்பட்டுள்ளனர் என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கில் இராணுவத்தை குவித்துள்ளது குறித்து அமெரிக்கா மீது உலகம் முழுவதும் விமர்சனம் எழுந்துள்ளது. அதைத் தொடர்ந்து, அங்கிருந்து கொஞ்சம், கொஞ்சமாக இராணுவத்தை விலக்க ஜனாதிபதி ஒபாமா ஒப்புக்கொண்டுள்ளார்.

இதுதவிர, ஆப்கானிஸ்தானிலும் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் போரிட்டு வருகிறது. உலகம் முழுவதும் 75 நாடுகளில் அமெரிக்க இராணுவத்தின் பிரசன்னம் இடம்பெற்றுள்ளது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

அல்-குவைதா தீவிரவாதிகள் உட்பட சர்வதேச தீவிரவாதிகளுக்கு எதிராக மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இத்தகைய இரகசிய திட்டத்தில் ஒபாமா ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒபாமா ஜனாதிபதியாவதற்கு முன்னர், அமெரிக்க ஜனாதிபதியாக புஷ் இருந்தார். அப்போது, கடந்த ஆண்டு (2009) ஆரம்பத்தில் 60 நாடுகளில் மட்டுமே அமெரிக்க படைகள் இருந்தன. தற்போது 18 மாத இடைவெளிக்குள் மேலும் 15 நாடுகளுக்கு அமெரிக்க படைகள் அனுப்பப்பட்டுள்ளன. ஒபாமா பிறப்பித்து வரும் இரகசிய உத்தரவுகளே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அல்-குவைதா ஆதிக்கம் அதிகமாக உள்ள ஏமன், ஆபிரிக்க எல்லைப்புற நாடுகளில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. இதுபோல, மத்திய கிழக்கு நாடுகள், மத்திய ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் ஆகியவற்றிற்கு அமெரிக்க இராணுவத்தை ஒபாமா அனுப்பி வைத்துள்ளார்.

இவை தவிர, வெளிநாடுகளுக்கு இராணுவத்தை அனுப்பும் பணிகளுக்காகக் கூடுதலாக ரூ. 52 ஆயிரத்து 500 கோடி நிதியை ஒதுக்கவும் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். எனவே, நடப்பு நிதி ஆண்டில் (2010-11) ரூ. 94 ஆயிரத்து 500 கோடி இதுக்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதற்கிடையே, அமெரிக்க உளவுத் துறைக்குப் புதிய தலைவராக விமானப் படையின் முன்னாள் லெப்டினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் கிளாப்பர் என்பவரை ஜனாதிபதி ஒபாமா நியமித்துள்ளார். தற்போது, இவர் பெண்டகனில் உளவுப்பிரிவு தலைவராக இருந்து வருகிறார். இனிமேல், அமெரிக்க மத்திய புலனாய்வு முகவர் உட்பட 16 வகையான உளவுப்பிரிவுகளின் தலைவராக ஜேம்ஸ் கிளாப்பர் செயற்படுவார்.

மிகப்பெரிய அளவில் 'நெட்வேர்க்' வைத்துள்ள அமெரிக்க உளவுப்படைகளில் 2 இலட்சம் பேர் பணிபுரிகின்றனர். ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சத்து 25 ஆயிரம் கோடி நிதி இத்துறைக்கென ஒதுக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திபெத்துக்கு சுதந்திரம் அல்ல; சுயாட்சி மட்டுமே கோருகிறோம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் தலாய் லாமா தெரிவிப்பு

பத்தர் (ஜம்மு- காஷ்மீர்), ஜூன் 9



''திபெத்துக்கு சுதந்திரம் கேட்க வில்லை, சுயாட்சி மட்டுமே கோருகிறோம்'' என்று புத்த மதத் தலைவர் தலாய் லாமா பத்திரிகையாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டார்.

இரண்டு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு ஜம்மு-காஷ்மீரில் பத்தர் நக ருக்கு சனிக்கிழமை வந்த தலாய் லாமா, மறுதினமான ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

இதில் அவர் தொடர்ந்து பேசுகையில், ''திபெத்தில் சுயாட்சிக்காக அமைதியான முறையில் போராடி வருகிறோம். எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என கேட்கவில்லை. சுயாட்சி தாருங்கள் என்றே கோருகிறோம்'' என்றார்.

''சுயாட்சி இருந்தால்தான் மொழி உட்பட கலாசாரத்தை பாதுகாக்க முடியும். திபெத் நவீனமயமாக மாறவேண்டும் என்றுதான் ஒவ்வொரு திபெத்தியரும் நினைக்கிறார். முன்னேற்றம் என்பது மக்கள் நலன் சார்ந்ததாக இருக்கவேண்டும். இளைஞர் அமைப்புகளைச் சேர்ந்தோர் உட்பட 99 சதவீதம் பேர் அமைதியான முறையில் போராடுவதைத்தான் விரும்புகிறார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இளைஞர் அமைப்புகள் தொடக்கத்தில் இருந்தே திபெத்துக்கு சுதந்திரம் வேண்டும் என்று கோருகின்றன. நாங்கள் சுயாட்சி கோருகிறோம். ஆனால், அஹிம்சை முறை போராட்டம் என்பதில் யாரிடமும் மாற்றுக் கருத்து கிடையாது'' என்றும் தலாய் லாமா சுட்டிக்காட்டினார்.

# ஆப்கான் தாக்குதல்களில் 10 நேட்டோ படையினர் பலி!

காபூல், ஜூன் 9

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பத்து நேட்டோ படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் இடம்பெற்ற மிக மோசமான தாக்குதல்கள் இவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களில் குறைந்தபட்சம் ஐந்து அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் மேற் கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஐந்து அமெரிக்கப் படையினர் கொல்லப்பட் டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பிரிட்டிஷ் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர் என பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு மேலதிக துருப்பினர் அனுப்பி வைக்கப்படுவர் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விடுத்த அறிவிப்பினைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டுத் துருப்பினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டால் மட்டுமே சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்க முடியும் என தலிபான் தீவிரவாதிகள் அரசிடம் அறிவித்துள்ளனர்.



துருக்கி நிவாரண கப்பல் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் குறித்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிட்டன்யாகு, ஜெருசலேமில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கிறார்.

# அசாம் முன்னணி தலைவர் பங்களாதேஷில் கைது

டாக்கா, ஜூன் 9

ஐக்கிய அசாம் விடுதலை முன்னணி (உல்ஃபா) பிரிவினைவாத இயக்கத்தின் முக்கியத் தலைவர் ரஞ்சு சௌத்ரி பங்களாதேஷில் கைதுசெய்யப்பட்டார். வடக்கு மைமென்சிங் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இவர் கைதுசெய்யப்பட்டார் என பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு குற்ற நடவடிக்கைகளின் பின்னணியில் ரஞ்சு சௌத்ரி இருந்துள்ளார். அசாமின் சில்சார் பகுதியைச் சேர்ந்த ரஞ்சு சௌத்ரி, ரத்தன் சர்க்கார் என்றும் அழைக்கப்படுபவர்.

இவர் பொலிஸ் பிடியிலிருந்து தப்புவதற்காக பங்களாதேஷ் சென்று தலைமறைவாக வசித்து வந்தார். தற்போது ரஞ்சு சௌத்ரி கைதுசெய்யப்பட்டார்; அவருடன் கூட்டாளிகள் சிலரும் பிடிபட்டுள்ளனர். இது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர் இந்தியாவிடம் எப்போது ஒப்படைக்கப்படுவார் என்பது குறித்த விவரம் இனிமேல்தான் தெரியவரும் என்று பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கு பனிக்கட்டி உருகுவதால் ஆபத்து

## நிபுணர் தாவா ஸ்டீபன் கவலை

காத்மாண்டு, ஜூன் 9

''தற்போது வெப்பமயமாதல் காரணமாக எவரெஸ்ட சிகர பனிக்கட்டிகள் துரிதமாக உருகுகின்றன. இதனால் மலையேற்றம் ஆபத்துக்குரியதொன்றாக மாறி வருகிறது'' என நேபாளத்தில் நடைபெற்ற விழாவொன்றில் மலையேற்ற நிபுணர் தாவா ஸ்டீபன் பேசுகையில் கவலை தெரிவித் தார்.

கடல் மட்டத்திலிருந்து 29 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைப்பதற்காக உலகம் முழுவதுமிருந்து வரும் மலையேற்ற வீரர்கள், சீனா, நேபாளம் ஆகிய நாடுகளின் வழியாக எவரெஸ்ட் சிகரத்துக்கு ஏறுகின்றனர்.

தற்போது, வெப்பமயமாதல் காரணமாக எவரெஸ்ட் சிகரத்தில் உள்ள பனிக்கட்டிகள் உருகுகின்றன. இதனால் பாறைகள் வெளியே தெரிகின்றன. இந்த ஆண்டுக்கான மலையேற்ற பருவமும் தற்போது முடிவடைந்துள்ளது.

இதை முன்னிட்டு நேபாளத்தில் இடம்பெற்ற விழாவில் மலையேற்ற நிபுணர் தாவா ஸ்டீபன் பேசினார். அவர் தம் உரையில், ''இதே வேகத்தில் பனிக்கட்டிகள் உருக ஆரம்பித்தால் பெருமளவில் பாறைகள் வெளிபட்டுவிடும். அதனால், மலையேற்ற வீரர்கள் தவறி விழுந்தால் பாறையில் விழ நேரிடும்'' என்றார்.

''பனிக்கட்டிகளே இல்லாமல் வெறும் பாறைகள் மட்டும் இருந்தால் எவரெஸ்ட்டில் ஏறுவது மிகவும் அபாயகரமான தொன்றாகிவிடும். மேலும், மலையேற்றத்துக்கான செலவும் அதிகரிக்கும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேபாளத்தின் மலையேற்ற அனுமதி, வழிகாட்டுதல்கள், கருவிகள், எவரெஸ்ட் பயணம் ஆகியவற்றுக்காகக் குறைந்தபட்சம் ரூ.ஒரு கோடியே 5 லட்சம் வரை செலவாகும் எனக் கருதப்படுகிறது. இந்த ஆண்டில் 250 பேர் எவரெஸ்ட் சிகரத்தை தொட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக அரங்கில்

# ஆஸியில் இந்தியர் குத்திப் படுகொலை

மெல்போர்ன், ஜூன் 09

ஆஸ்திரேலியாவில் 61 வயதுள்ள இந்தியர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார். மெல்போர்ன் புறநகரில் ஒரு பாலத்தின் அடியிலிருந்து அவரது சடலம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டது என புலனாய்வு அதிகாரி பெர்னி எட்வர்ட்ஸ் திங்கட்கிழமை தெரிவித்தார்.

அவரது உடலில் கத்தியால் குத்தப்பட்டதற்கான காயங்கள் இருந்தன. பாலத்தின் மேல் பகுதியிலும் இரத்தக் கறை படிந்திருந்தது. ஞாயிற்றுக்கிழமை குளிர் அதிகமாக இருந்ததால் அந்தப் பகுதியில் காலை நேரத்தில் ஆள் நடமாட்டம் குறைவாக இருந் திருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனினும், இறந்தவர் குறித்த விவரங்களைத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

# பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய இரண்டு பேர் அமெரிக்காவில் கைது!

நியூயோர்க், ஜூன் 9

அமெரிக்கர்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கொல்ல திட்டமிட்ட பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய இரண்டு பேரை எவ்.பி.ஐ. பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நியூயோர்க்கில் வடக்கு பெர்ஜன் பகுதியில் வசித்து வந்த முகமது ஹமூத் அலீசா (வயது - 20), எல்ம்வுட் பார்க் பகுதியில் வசித்து வந்த கார்லோஸ் எட்வர்டோ அல்மான்ட் (வயது - 24) ஆகிய இருவரும், நியூயோர்க் விமான நிலையத்திலிருந்து எகிப்துக்கு விமானத்தில் பயணிக்கத் தயாராக இருந்தபோது கைதுசெய்யப்பட்டனர்.

எகிப்திலிருந்து சோமாலியாவுக்குச் சென்று அங்குள்ள அல்-குவைதாவின் தோழமை அமைப்பான, 'ஷபாப்' என்ற அமைப்புடன் தொடர்புகொள்ள இவர்கள் திட்டமிட்டிருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

பலரை கொலை செய்வதற்கு அல்மான்ட் சபதம் செய்திருந்தார் என்று பூர்வாங்க விசாரணையில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களது சதித்திட்டத்தை உணர்ந்த எவ்.பி.ஐ., நியூயோர்க் பொலிஸார் கடந்த வாரம் இவர்களது வீடுகளில் சோதனையிட்டுள்ளனர்.

தற்போது, நியூயோர்க் நீதிமன்றத்தில் இவர்கள் இருவரும் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், அதிக பட்சமாக ஆயுள் தண்டனை கிடைக்கும்.



பெருவிற்குச் சென்றிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை (வலது) ஜனாதிபதி ஆலன் கிரேஸியா லிம்பர் ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் விவகாரத்தில் வன்முறைகளை கைவிடுவோருடன் பேச்சு நடத்தத் தயார்!

## பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு



காஷ்மீர் சென்ற பிரதமருக்கு விமான நிலையத்தில் அம் மாநில ஆளுநர், முதல்வர் ஆகியோர் வரவேற்பளித்தபோது...

ஸ்ரீநகர், ஜூன் 9

காஷ்மீர் விவகாரத்தில் வன்முறையை கைவிட்டு அமைதிப்பேச்சு நடத்த முன் வருவோருடன் எந்த நேரத்திலும் பேச்சு நடத்த அரசு தயாராக இருக்கிறது - என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதைக் கருத் தில் கொண்டு மூன்று சுற்றுப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பேச்சை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவே அரசு விரும்புகிறது என்றும் பிரதமர் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை குறித்து நடைபெற்ற பேச்சின் வாயிலாக 5 செயற்குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்கள், மத்திய அரசுக்கும் காஷ்மீர் மாநில அரசுக்கும் இடையேயான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக சில பரிந்துரைகளை அளித்துள்ளன. இந்தப் பரிந்துரைகள் முன்னுரிமை அடிப்படையில் வரிசையாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு இரு நாள் பயணமாக வந்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், ஷெர் ஐ காஷ்மீர் வேளாண்மை அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பங்கேற்று உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது வருந்தத்தக்க ஒன்று.

இதுபோன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்காமல் இருக்க அண்டை நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் இரு நாடுகளின் எல்லைப் பகுதியை ஒட்டி வசிக்கும் மக்கள் அமைதியாகவும், நிம்மதியுடனும் வாழ முடியும்.

இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாதிகள் தங்களது மண்ணைப் பயன்படுத்துவதை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தினால் மட்டுமே இருநாடுகளிடையே அர்த்தமான பேச்சுக்குச் சாத்தியமுண்டு.

மனித உரிமையை மீறிவோர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்பது பாதுகாப்புப் படையின் தலையாய பணியாகும். எனினும் அந்தப் பணியில் ஈடுபடும்போது எந்த விதத்திலும் மனித உரிமை மீறப்படக் கூடாது. அப்படி மீறும்பட்சத்தில் சம்பந்தப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்பது தவிர்க்க முடியாதது.

- இப்படி பிரதமர் தெரிவித்தார்.

# வைரமுத்துவின் கவியரங்கத்துக்கு மாறுவேடத்தில் வந்த ரஜினிகாந்த்!

சென்னை, ஜூன் 09



வைரமுத்துவின் கவியரங்கத்துக்கு நேரடியாக வந்தால் பரபரப்பு ஏற்படும் என்பதால், மாறுவேடத்தில் வந்த ரஜினிகாந்த் கவிதையை ரசித்துவிட்டுச் சென்றார்.

சென்னை தீவுத்திடலில் ஒரு செயற்கை தாஜ்மகால் உருவாக்கப்பட்டிருக்கிறது. கவிஞர் வைரமுத்து தலைமையில் அந்தச் தாஜ்மகாலில் ஒரு காதல் கவியரங்கம் நடந்தது. தமிழக அரசின் சுற்றுலாத்துறை அதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

மேடையில் கவிஞர் வைரமுத்து அமர்ந்திருக்க, காதல் கவியரங்கம் தொடங்கியது. சனக் கூட்டத்தால் தாஜ்மகால் நிரம்பி வழிந்தது. பெரும்பாலும் இளைஞர்களே அங்கு வந்திருந்தனர். அதில் ஒரே ஒரு முதியவர் மட்டும் வித்தியாசமாகத் தெரிந்தார். தள்ளாத வயது, நரைத்த தலை, கூரிய பார்வை. கவியரங்கத்தின் மீதே கண்ணும் காதும் வைத்து லயித்திருந்தார்.

'இதுதான் காதலுக்குச் சிந்தப்பட்ட உயரமான கண்ணீர்த்துளி' என்ற வரியையும், 'கண்மணியை உள்ளே புதைத்து விட்டு வெள்ளை விழி மட்டும் வெளியே தெரிகிறது' என்ற வரியையும் ஆரவாரத்தோடு சபையினர் ரசித்த போது அவரும் தலையாட்டி ரசித்தார்.

கவியரங்கம் முடிந்ததும் தடியை ஊன்றிக்கொண்டே முதியவர் கூட்டத்தில் கரைந்து காணாமல் போய்விட்டார். அந்த முதியவர் வேறு யாருமல்லர், அவர்தான் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த்.

நேரடியாக வந்தால் பரபரப்பு ஏற்படும் என்பதால், ரஜினிகாந்த் மாறுவேடத்தில் வந்து கவிதையை ரசித்துவிட்டு போயிருக்கிறார். யாரும் அவரை அடையாளம் காண முடியவில்லை. அவரை அறிந்து கொண்ட ஒரே ஒரு அதிகாரியும் அவரைக் காட்டிக்கொடுக்கவில்லை.

**இந்தியச் செய்திகள்**

# செம்மொழி மாநாட்டுப் பிரசாரத்துக்காக அதிநவீன வான்களில் சுற்றுப்பயணம்



திருச்சி, ஜூன் 9

சேலம் தி.மு.க. இளைஞரணி சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு குறித்து விழிப்புணர்வுப் பிரசாரத்துக்காக தயாரிக்கப்பட்ட இரண்டு அதிநவீன விழிப்புணர்வுப் பிரசார வான்கள் திருச்சியில் இருந்து நேற்றுமுன்தினம் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தன.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரும் 23 ஆம் திகதி கோவையில் ஆரம்பமாகி 27 ஆம் திகதி நிறைவடைகிறது. இதற்காக தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்யும்படி முதல்வர் கருணாநிதி, தி.மு.கவினருக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து, தி.மு.கவினர் பொதுக் கூட்டம் மற்றும் தெருமுனை விளக்கப் பிரசாரம் நடத்தி வருகின்றனர். அனைத்து நகரங்கள், கிராமங்களில் சுவரோவியம் வரையப்பட்டுள்ளன. சேலம் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், இரண்டு நவீன பிரசார வாகனம் வடிவமைக்கப் பட்டுள்ளன. இந்த வாகனம் 15 லட்சம் ரூபா மதிப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு வான் தமிழகம் முழுவதும் சுற்றி வரும். மற்றொன்று சென்னையில் வலம் வரும். இந்த இரண்டு வான்களும் 23 ஆம் திகதி கோவை செல்கின்றன. இந்தத் தானியங்கி விளம்பர ஊர்தி, மும்பையில் வடிமைக்கப்பட்டது.

இந்தப் பிரசார வாகனத்தில் செம்மொழிப் பாடல் மற்றும் செம்மொழி விளக்கப்பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

# 20 ஆயிரம் பேர் பலியான போபால் விஷவாயு கசிவு வழக்கில் 7 பேருக்கு 2 ஆண்டுச் சிறை!

## 26 ஆண்டுகளுக்குப் பின்னர் தீர்ப்பு

போபால், ஜூன் 9

20 ஆயிரம் பேர் பலியர்ன போபால் விஷ வாயுத் தாக்குதல் வழக்கில் 7 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, தலா 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.





போபால் விஷவாயுக் கசிவு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கக் கோரி நீதிமன்றம் முன்பு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது...

உலகத்திலேயே தொழிற்சாலைகளில் நடந்த மிகக் கொடிய விபத்தாக போபால் விஷவாயு விபத்து கருதப்படுகிறது.

மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் யூனியன் கார்பைட் இந்தியா லிமிடெட் என்ற இரசாயனத் தொழிற்சாலை இயங்கி வந்தது. இது வொரு அமெரிக்க நிறுவனம். அந்த நாட்டைச் சேர்ந்த வாரன் அன்டர்ஸன் இந்தத் தொழிற்சாலையின் தலைவர் ஆவார்.

இந்தத் தொழிற்சாலையில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி நள்ளிரவில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டது. அதைச் சுவாசித்த 20 ஆயிரம் பேர் பலியாகினர். மேலும் 5 லட்சம் பேர் பெரிதும் பாதிக்கப் பட்டு நடைபிணமானார்கள்.

இந்த விஷவாயுத் தாக்கத்தின் காரணமாக அடுத்த தலைமுறையிலும் லட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். விஷவாயுச் சம்பவத்துக்குப் பின்னர் அந்தப் பகுதியில் பிறந்த குழந்தைகளில் பலர் ஊனத்துடனும், மேலும் சில பாதிப்புகளுடனும் பிறந்தனர். 26 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட அந்தப் பாதிப்பு இப் போதும் தொடர்கதையாக நீடிக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, யூனியன் கார்பைட் நிறுவனத்தின் தலைவர் வாரன் அன்டர்ஸன் உட்பட 9 பேர் கைது செய்யப் பட்டனர்.

இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட அனைவர் மீதும் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இதைத்தொடர்ந்து நீதிமன்ற விசாரணை தொடங்கியது.

தண்டனை பெற்றவர்கள் ரூபா 25 ஆயிரம் செலுத்தி சொந்தப் பிணையில் விடுதலையாகலாம் என்று மாஜிஸ்திரேட்டு கூறினார். அதன்படி, 7 பேரும் பிணைத் தொகை செலுத்திப் பிணையில் விடுதலையானார்கள்.

போபால் விஷவாயு விபத்துச் சம்பவம் நடந்து 26 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தீர்ப்புக் கூறப்படவிருப்பதையொட்டி, குற்றம் சாட்டப்பட்டவர்களில் உற்பத்திப் பிரிவு உதவியாளர் எஸ்.ஐ.குரேஷி தவிர மற்ற 6 பேரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜராகினர்.

# 20 பெண்களை ஏமாற்றிய மன்னன் பெண் இன்ஸ்பெக்டரின் வலையில்!



ஆலந்தூர், ஜூன் 09

திருமணமாகாமல் தவித்த பெண்களை திருமணம் செய்கிறார் என ஏமாற்றி நூதன முறையில் பல லட்சக் கணக்கில் பணம் பறித்த மோசடி மன்னன் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார்.

சென்னையை அடுத்த போரூர் பகுதியைச் சேர்ந்தவர் விஜயா (பெயர் மாற்றப் பட்டு உள்ளது). சென்னையில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் பேராசிரியையாகப் பணிபுரிந்து வந்த அவருக்கு 35 வயதுக்கு மேலாகியும் திருமணமாகவில்லை.

வயதாகிவிட்டதால் அவருக்கு ஏற்ற மணமகனைத் தேடிக்கொண்டு இருந்தனர். இந்த நிலையில் தாராபுரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்கின்ற அசோக் (வயது - 34) கைத்தொலைபேசி மூலம் விஜயாவை தொடர்பு கொண்டு, உங்களைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன் என்று கூறினார்.

தொடர்ந்து தொலைபேசியில். பேசி நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட ரவிச்சந்திரன், விஜயாவின் வீட்டிற்கு நேரிலும் சென்று வந்தார். ஒருநாள் பதற்றத்துடன் விஜயாவின் வீட்டிற்குச் சென்ற ரவிச்சந்திரன் அவசரமாக பணம் தேவைப்படுகிறது என்று கூறினார்.

பின்னர் விஜயாவின் ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தி ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துச் சென்ற ரவிச்சந்திரன் அதன் பின்னர் விஜயாவைச் சந்திக்கவில்லை. அவரைத் தொலைபேசியிலும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதனால் ரவிச்சந்திரன் தன்னை மோசடி செய்துவிட்டார் என்பதை அறிந்த விஜயா, சென்னைப் பொலிஸ் கமிஷனர் எஸ்.ஆர். ஜாங்கிட்டிடம் இதுகுறித்து முறைப்பாடு கொடுத்தார். இதையடுத்து உதவி இன்ஸ்பெக்டர் மங்களலட்சுமி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மங்களலட்சுமி, 'மிஸ் கோல்' மூலம் ரவிச்சந்திரனை தனது வலையில் சிக்கவைத்தார்.

இதனால் அவருடைய பொறியில் சிக்கிய ரவிச்சந்திரன், வழக்கம்போல் மங்களலட்சுமியையும் திருமணம் செய்ய விரும்புகிறார் எனக் கூறினார். அதன்படி மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலுக்கு ரவிச்சந்திரனை வரவழைத்த மங்கள லட்சுமி, தனி பொலிஸ் படையினரின் உதவியுடன் ரவிச்சந்திரனை மடக்கிப்பிடித்துக் கைதுசெய்தார்.

ரவிசந்திரனிடம் பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தியபோது, இதுவரை இவர் 20 பெண்களிடம் இதே போல் நூதன முறையில் ஏமாற்றி பல லட்சம் ரூபா மோசடி செய்துள்ளமையைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு செலவுக்காக கடந்த வருடத்தைவிட 2,165 கோடி 74 லட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கீடு

## நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் நேற்று சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 09

2010 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்காக 20 ஆயிரத்து 221 கோடியே 74 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவினங்களுக்காக 97 ஆயிரத்து 474 கோடியே 83 லட்சத்து 85 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. கேள்வி நேரத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பிரதமர் சபையில் சமர்ப்பித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது பாதுகாப்பு அமைச்சுக்காக 2,165 கோடியே 74 லட்சத்து 41 ஆயிரம் ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட செலவினங்கள் வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சுக்கு 20 ஆயிரத்து 221 கோடியே 74 லட்சத்து 80 ஆயிரம் ரூபா, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு 9ஆயிரத்து 559 கோடியே 91 லட்சத்து 79 ஆயிரம் ரூபா, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 8,351 கோடியே 23 லட்சத்து 20 ஆயிரம் ரூபா, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுக்கு 11 ஆயிரத்து 326 கோடியே 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபா, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு 6,348 கோடியே 29 லட்சத்து 55 ஆயிரம் ரூபா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 6,083 கோடியே 66 லட்சத்து 15 ஆயிரம் ரூபா, சுகாதார அமைச்சுக்கு 5,309 கோடியே 65 லட்சத்து 48 ஆயிரம் ரூபா, கல்வி அமைச்சுக்கு 2,750 கோடியே 78 லட்சத்து 10 ஆயிரம் ரூபா, மீள்குடியேற்ற அமைச்சுக்கு 307 கோடியே 43 லட்சத்து 30 ஆயிரம் ரூபா, புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு 405 கோடியே 43 லட்சத்து 40 ஆயிரம் ரூபா, ஜனாதிபதி செயலகத்துக்கு 5,029 கோடியே 95 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன.

துறைமுகங்கள், விமானசேவைகள் அமைச்சுக்கு 3,090 கோடியே 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபா, போக்குவரத்து அமைச்சுக்கு 3,509 கோடியே 97 லட்சத்து 4 ஆயிரம் ரூபா, பெற்றோலிய கைத்தொழில் அமைச்சுக்கு 9 கோடியே 69 லட்சத்து 15 ஆயிரம் ரூபா, கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சுக்கு 162 கோடியே 5 லட்சத்து 95 ஆயிரம் ரூபா, கமத்தொழில் அமைச்சுக்கு 3,790 கோடியே 39 லட்சத்து 37 ஆயிரம் ரூபா, மின்வலு எரிசக்தி அமைச்சுக்கு 2,628 கோடியே 47 லட்சத்து 86 ஆயிரம் ரூபா, அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு 126 கோடியே 30 லட்சத்து 77 ஆயிரம் ரூபா, தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சுக்கு 754 கோடியே 91 லட்சத்து 20 ஆயிரம் ரூபா, நிதி அமைச்சுக்கு 355 கோடியே 39 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, வெளிநாட்டு அமைச்சுக்கு 647 கோடியே 33 லட்சத்து 74 ஆயிரம் ரூபா,

சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சுக்கு 74 கோடியே 25 லட்சத்து 39 ஆயிரம் ரூபா, வெகுசன ஊடக தகவல் அமைச்சுக்கு 195 கோடியே 9 லட்சத்து 25 ஆயிரம் ரூபா, நிர்மாண பொறியியல் வேலைகள், வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சுக்கு 80 கோடியே 63 லட்சத்து 55 ஆயிரம் ரூபா, சமூக சேவைகள் அமைச்சுக்கு 66 கோடியே 26 லட்சத்து 18 ஆயிரம் ரூபா, தொழில் உறவுகள் அமைச்சுக்கு 130 கோடியே 20 லட்சத்து 39 ஆயிரம் ரூபா, பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு 68 கோடியே 73 லட்சத்து 58 ஆயிரம் ரூபா,

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுக்கு 246 கோடியே 97 லட்சத்து 23 ஆயிரம் ரூபா, தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு 35 கோடியே 66 லட்சத்து 41 ஆயிரம் ரூபா, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு 417 கோடியே 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபா, விளையாட்டுத்துறை அமைச்சுக்கு 120 கோடியே 59 லட்சத்து 48 ஆயிரம் ரூபா, சுதேச மருத்துவத்துறை அமைச்சுக்கு 107 கோடியே 32 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, கடற்றொழில் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு 550 கோடியே 50 லட்சத்து 75 ஆயிரம் ரூபா, கால்நடை வளர்ப்பு கிராமிய வள சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு 188 கோடியே 78 லட்சத்து 45 ஆயிரம் ரூபா,

தேசிய மரபுரிமைகள் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 265 கோடியே 22 லட்சத்து 63 ஆயிரம் ரூபா, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு 36 கோடியே 94 லட்சத்து 20 ஆயிரம் ரூபா, கைத்தொழில் வாணிப அமைச்சுக்கு 219 கோடியே 15 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சுக்கு 1,532 கோடியே 48 லட்சத்து 25 ஆயிரம் ரூபா, காணி,காணி அபிவிருத்தி அமைச்சுக்கு 375 கோடியே 90 லட்சத்து 43 ஆயிரம் ரூபா, இளைஞர் அலுவல்கள் அமைச்சுக்கு 573 கோடியே 52 லட்சத்து 29 ஆயிரம் ரூபா, சுற்றாடல் அமைச்சுக்கு 295 கோடியே 66 லட்சத்து 68 ஆயிரம் ரூபா, நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சுக்கு 2,513 கோடியே 91 லட்சத்து 93 ஆயிரம் ரூபா, உயர்கல்வி அமைச்சுக்கு 2,011 கோடியே 20 லட்சத்து '50 ஆயிரம் ரூபா, அரச வளங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு 17 கோடியே 43 லட்சத்து 5 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## மஹிந்தவின் விஜயத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டமும் நடைபெறும் என வைகோ அறிவித்திருந்தார். அதன்படி நேற்றுக் காலை பத்து மணியளவில் மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்கா அருகே ஆயிரக் கணக்கான தொண்டர்கள் திரண்டனர்.

வைகோ, பழ. நெடுமாறன், நல்லகண்ணு, நடராஜன், சீமான், விஜய டி.ராஜேந்தர் உள்ளிட்டோர் தொண்டர்களிடையே பேசினர். ''இனப்படுகொலை செய்த கொடுங்கோலன் ராஜபக்ஷ ஒழிக '' என்பது உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை முழக்கினர்.

பின்னர் அங்கிருந்து இலங்கைத் துணைத் தூதரகம் நோக்கிப் பேரணியாகக் கிளம்பினர். இதையடுத்து அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்திக் கைது செய்தனர்.

இதேபோல, சென்னையில் இலங்கைத் தூதரகம் நோக்கி பேரணியாகச் செல்ல முயன்ற புதிய தமிழகம் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

ஒசூரில் போராட்டத்தில் ஈடுபட்ட பெரும் திரளான ம.தி.மு.க., தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

### கொடும்பாவி எரிப்பு

திருச்சியில் மஹிந்தவின் கொடும்பாவியை சிவசேனா கட்சியினர் தீவைத்துக் கொளுத்தினர். இதையடுத்து 13 தொண்டர்களைப் பொலிஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

திருப்பூரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 7 ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டனர்.

நாகர்கோவிலில் சரத்குமாரின் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் மஹிந்தவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. இதையடுத்து அக்கட்சித் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கரூரில் பல்வேறு தமிழர் அமைப்புகளைச் சேர்ந்த 150 பேர் ராஜபக்ஷவைக் கண்டித்து கறுப்புக் கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தி கைதாகினர்.

நாமக்கல்லில் பொலிஸ் தடையைமீறி கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 50 ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டனர்.

கோவையில் ரயில் மறியலில் ஈடுபட்ட விடுதலைச் சிறுத்தைகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கைதானார்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொல்.திருமாவளவனும் கைது செய்யப்பட்டார்.

ரயில் நிலையம் முன்பு கறுப்புக்கொடிகளுடன் திரண்ட அவர்கள் திடுதிடுவென ரயில் நிலையத்திற்குள் ஓடினர். இதை எதிர்பாராத பொலிஸார் அவர்களை விரட்டிச் சென்று பிடித்துக் கைது செய்தனர்.

### துணைத் தூதரகத்துக்கு பலத்த பாதுகாப்பு

பல்வேறு கட்சிகள் சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தமையால் துணைத் தூதரகத்துக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது.

மாவட்டத் தலைநகரங்கள் அனைத்திலும் ம.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தன. பல நூறு பேர் கைதானார்கள்.

தேனியில் ராஜபக்ஷ வருகையை எதிர்த்து கறுப்புக் கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ்ப் புலிகள் அமைப்பினர் 43 பேர் கைது செய்யப்பட்டனர்.

சிவகங்கையில், கறுப்புக்கொடிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.எல்.ஏ குணசேகரன் உள்ளிட்ட 120 பேர் கைது செய்யப்பட்டனர்.

மயிலாடுதுறையில் ராஜபக்ஷவின் கொடும்பாவி தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இதில் ஈடுபட்ட 20 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். (ஒ-சி)

## எஸ்.எஸ்.பி. மறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்து, அத்தவணையில் சமுகமளிக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த வழக்கின் சாட்சியான பொதுமகன் ஒருவரும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அவருக்கு நீதிவான் பிடியாணை பிறப்பித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் விஜயேந்திரா, எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் ஆகியோர் சந்தேக நபர்களைப் பிணையில் விடுமாறு கோரிச் சமர்ப்பித்த மனுக்கள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. (ஒ-1-207)

## குடாநாட்டில் கண்ணு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஈ.சரவணபவன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

குடாநாட்டில் மட்டுமன்றி கிளிநொச்சி - முல்லைத்தீவு எல்லைக் கிராமமான விசுவமடு றெட்பானா என்ற குடியேற்றக் கிராமத்தில் நடைபெற்ற வன்செயல் குறித்தும் சரவணபவன் சபையில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

அவர் தமது நேற்றைய உரையில் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி பயங்கரவாத சூழல் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் நாடு மீண்டும் ஒரு சுதந்திரக் காற்றை அனுபவிப்பதாகவும் அடிக்கடி கூறும் வார்த்தைகளை நான் இங்கு ஒருமுறை நினைவு கூரவேண்டிய அவசியத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன். பயங்கரவாதமற்ற ஒரு சுதந்திரமான சூழல் நிலவுமாக இருந்தால் நானும நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவுசெய்த மக்களும் நிறைந்த மனதுடனும் ஆழ்ந்த மகிழ்ச்சியுடனும் வரவேற்றிருப்போம்.

ஆனால் யாழ்.குடாநாட்டில் இதற்கு நேர்மாறாக ஒரு நிலைமை நிலவுவதை நான் ஆழ்ந்த மனவலியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

யாழ்.குடாநாட்டில் பாடசாலை செல்லும் மாணவிகள் சில விஷமிகளால் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுவதாகவும் ஏனைய பல குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் பயம், வெட்கம் காரணமாகப் பாதிப்படைவோர் முறைப்பாடு செய்வதில்லை எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெமின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.இதன்காரணமாக மக்கள் தங்கள் முறைப்பாடுகளை இரகசியமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு பொலிஸ் முறைப்பாட்டுப்பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

அதாவது மக்கள் தமக்கிழைக்கப்படும் குற்றங்களை நேரடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யப் பயப்படும் ஒரு கண்ணுக்குத் தெரியாத பயங்கரவாதம் நிலவுவதை பொலிஸ் திணைக்களம் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு யாழ்.குடாநாட்டில் நிலைமை மோசமடைந்துள்ளது என்பது தெளிவாகவே புலனாகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு கடத்தல், கொலை, கப்பம் கோரல் மாணவ, மாணவிகளைக் கடத்துதல் போன்ற சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற்றதை நீங்கள் அறிவீர்கள். அதிலும் சாவகச்சேரியில் கப்பம் கோரி ஒரு மாணவன் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட சம்பவத்தை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

இச்சம்பவத்தில் இன்று ஜனநாயக வழிக்குத் திருப்பிவிட்டதாகக் கூறிக் கொள்ளும் ஒரு முன்னாள் ஆயுதக்குழுவின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டனர். அதில் அக்கட்சியின் வேட்பாளரும் ஒருவர் எனச் செய்திகள் வெளிவந்தன. இச்சம்பவம் தொடர்பாக நீதிபதி ஒருவர் மிரட்டப்பட்டதும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்.மாநகர சபை முதல்வர் ஒரு விளம்பரம் மூலம் விமர்சித்தமையும் இவர்கள் தொடர்பாக சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவையும் நடந்து முடிந்த சம்பவங்கள்.

### முடிவுக்கு வந்ததாக ஒரு தோற்றப்பாடு மட்டுமே

இவை காரணமாக ஜனநாயகத்தின் தூணகளில் ஒன்று எனக் கருதப்படும் நீதிபரிபாலனம் உரிய நடவடிக்கைகளை இறுக்கமாக மேற்கொண்டதன் காரணத்தால் கடத்தல், கொலை, கப்பம் கோரல் முதலிய குற்றங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போன்ற தோற்றப்பாடு எழுந்தது.

ஆனால் மீண்டும் இத்தகைய குற்றங்கள் இடம்பெற்று வருவதாகவும், மக்கள் முறையிட அஞ்சுவதாகவும் பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளும் முறைப்பாட்டுப்பெட்டி வைக்கப்பட்டமையும் இன்னும் பயங்கரவாதச் சூழல் இல்லாமல் போய்விடவில்லை என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நடந்து முடிந்த சம்பவங்களும் தற்போது இடம்பெற்று வெளிவராமல் அமுக்கப்படும் சம்பவங்களும் இக்குற்றச் செயல்களின் பின்னால் சட்டவிரோத ஆயுதக் குழுக்களும் அவர்களுக்கு கவசமாக அரசியல் பலமும் இருப்பதையே புலப்படுத்துகின்றன. இவ்வகையில் ஜனநாயக நீரோட்டத்தில் நம்மை இணைத்துக்கொண்டு விட்டதாகக் கூறிக்கொள்ளும் முன்னாள் ஆயுதக் குழுக்களே இக்குற்றங்களின் பின்னால் நிற்கின்றன என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது.

### இரு குழந்தைகளின் தாயார் மீது வல்லுறவு

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான விசுவமடுவில் - றெட்பானா என்ற இடத்தில் கடந்த வாரம் சென்று மீளக்குடியேறிய இரண்டு குழந்தைகளின் தாயார் நான்கு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பாக பொலிஸ், இராணுவத்திடம் முறையிட்ட போது சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக ஆதாரம் இல்லை.

தமிழ் மக்கள் எப்படியெல்லாம் அவமானப்படுத்தப்பட்டு கேவலப்படுத்தப்படுகின்றார்கள் என்பதை தயவு செய்து மனிதாபிமான அடிப்படையில் சிந்தியுங்கள்.

இம்மாதம் 5 ஆம் திகதி இரவு கிளிநொச்சி திருநகர் என்ற கிராமத்திலும் இதே போல் ஒரு சம்பவத்துக்கு இராணுவததினர் முயற்சித்தபோது மக்கள் ஒன்று கூடி தடுத்ததினால் விபரீதம் தடுக்கப்பட்டது.

பயங்கரவாதமற்ற ஒரு சுதந்திரமான தேசம் என்ற ஜனாதிபதியின் உயரிய நோக்கம் சில தீய சக்திகளால் சிதைக்கப்படுவதைத் தாங்களும் இச்சபையும் கருத்தில் எடுக்க வேண்டும் என்பதை மிகுந்த பொறுப்புடனும் உரிமையுடனும் தங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இத்தகைய வன்முறைகள் அரசாங்க அதிகாரிகள் மீதும் மறைமுகமாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை எமக்கு ஏற்படுத்துகிறது. அப்படியான சந்தேகங்களுக்கு நியாயமான காரணங்களும் உண்டு.

எமது மாவட்டத்திற்கு அமைச்சர்களோ வேறு அபிவிருத்தி தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகளோ விஜயம் செய்து அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்களையோ ஆய்வுகளையோ மேற்கொள்ளும் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை.

இது ஒரு நியாயமற்ற நடைமுறை என்றே நான் கருதுகிறேன். நாம் எமது மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். எமது மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பும் கடமையும் எமக்குண்டு.

இப்படியான ஒரு நிலையில் எமது மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான ஆலோசனை அரங்குகளில் நாம் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை மறுப்பது எமது கடமையைச் செய்வதைத் தடுப்பதாகும்.

இது, நாடாளுமன்ற உறுப்பினரின் மரபு வழிவந்த உரிமைகளை மறுக்கும் ஒரு நடவடிக்கை.

ஜனநாயக விழுமியங்களைக் கட்டிக் காத்து முன்னெடுத்துச் செல்வதில் இச்சபை ஒரு வலிமை மிக்க நிறுவனமாகத் தொடர்ந்து நிலைத்து நிற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் நிதி உதவியுடன் கொழும்பில் தொடர்மாடிகள்

## தகவல் கிடைத்திருக்கிறது எனக் கூறுகிறார் பிரதமர்

கொழும்பு, ஜூன் 0

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் புலிகளின் நிதி உதவியுடன் தொடர்மாடி வீடுகள் அமைக்கும் திட்டம் பற்றிய தகவல் ஒன்று அரசுக்குக் கிடைத்துள்ளது என பிரதமர் டீ.எம்.ஜயரட்ண நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு :-

யுத்த வெற்றி காரணமாக ஆசிய நாடுகளின் பாராட்டை இலங்கை பெற்றுள்ளது. இதனால் தமக்கு சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐபா விருது வழங்கல் விழா இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

இந்த நிகழ்வைப் புறக்கணிக்குமாறு தென்னிந்தியாவில் உள்ள ஆதரவாளர்கள் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு அழுத்தம் கொடுத்தபோதிலும் ஏற்பாட்டாளர்கள் அதைப் புறக்கணித்தனர். இதன் மூலம் எமது நாட்டின் பாதுகாப்பு நல்ல நிலையில் உள்ளது என்பதை சர்வதேச நாடுகள் விளங்கியுள்ளன.

தனிப்பட்ட தமது இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக அணிதிரளும் அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியன தமிழீழ இராச்சியம் ஒன்றுக்கான பின்னடைவை உருவாக்கும் நோக்கில் புலி ஆதரவாளர்கள் உள்ள பல நாடுகளில் வாக்கெடுப்பு நடத்தின. எனினும், அரசு எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

அந்த வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட நாடு கடந்த அரசின் முதல் கூட்டம் மே மாதம் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதன்மூலம் சர்வதேச புலிகள் ஈழக் கனவை இன்னும் கைவிடாது அந்தக் கனவை அடைவதற்கான பின்னணியை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றனர் என்று தெரிகிறது.

புலிகள் இரண்டாம் கட்டமாக நாட்டுக்குள் புகுந்து செயலில் ஈடுபடத் திட்டமிடுகின்றனர் என்பது இந்தச் செயற்பாட்டின் மூலம் தெளிவாகிறது.

இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்காக நாம் உடன் செயலில் இறங்கவேண்டும். இதற்கு இலகுவாக சர்வதேச நாடுகள் விதித்திருக்கும் புலிகளுக்கு எதிரான தடையை நாம் பலப்படுத்த வேண்டும்.

அதேவேளை, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் புலிகளின் நிதியுதவியில் தொடர்மாடி வீடுகள் அமைக்கப்படுவது குறித்து எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்த வீடுகளில் புலிகளுக்கு விசுவாசமானவர்களைக் குடியமர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். இதைத் தடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.- என்றார்.

# கழிவு நீர் தேக்கம்; மாணவர் சிரமம்

கொழும்புத்துறை, ஜூன் 9

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாகச் செல்லும் வாய்க்காலில் கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையின் உட்பகுதி வாய்க் கால் சுத்தம் செய்யப்படுகின்ற போதி லும் வெளியேயுள்ள நீண்ட வாய்க் காலில் தேங்கியுள்ள குப்பை கூளங் கள் நீரோட்டத்தைத் தடுக்கின்றன. இதன் காரணமாக கழிவுநீர் தேங்கி நிற் பதால் துர்நாற்றம் வீசுவதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களும், அவர்களைக் கூட்டிச் செல்ல வந்து காத்திருக் கும் பெற்றோரும் இதனால் பல சுகாதாரச் சிக்கல்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-135)

# குண்டுவைக்கச் சொன்னவர்கள் சபையில்; எடுபிடி வேலை செய்தவர்கள் சிறையில்!

## தமிழ்க் கைதிகளை உடனே விடுவிக்கக் கோருகிறார் ரங்கா எம்.பி.

கொழும்பு, ஜூன் 9

நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்யுமாறு ஐ.தே.கட்சி எம்.பி. ஜே.சிறிரங்கா நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்றைய அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்ச் சிறைக்கைதிகள், சரணடைந்தவர்கள் தொடர்பில் அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்காது அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படுகின்றது.

இந்த அவசரகாலச்சட்டத்தால் நாடு முழுவதும் உள்ள தமிழ்ப்பேசும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். குண்டு வைக்கச் சொன்னவர்கள், யுத்தத்தை நடத்தச் சொன்னவர்கள் இந்தச் சபையில் உள்ளனர். ஆனால் இதற்கு எடுபிடி வேலை செய்தவர்கள் சிறையில் வாடுகின்றனர்.

ஆயுதம் ஏந்திப் போராடிய ஜே.வி. பியினருக்கு வழங்கியதுபோல் இந்த சிறைக் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். இவர்களில் சில குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும், சில குடும்பங்களுக்கு 18 ஆயிரம் ரூபாவும், சில குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றன.

இந்த நிர்வாகச் சீர்கேட்டால், மக்கள் அவதிப்படுகின்றனர். இதற்கு எதிராகக் குரல் கொடுக்க அந்த மக்கள் பயப்பிடுகின்றனர். எதிர்த்துக் குரல் எழுப்பினால் தாமும் சிறையில் அடைக்கப்படுவோம் என்று அஞ்சுகின்றனர்.

அதேபோல் வடக்கு, கிழக்கில் ஆயுதக் குழுக்கள் கப்பம் பெறத் தொடங்கியுள்ளன. தெற்கிற்கு ஒரு சட்டமும், வடக்கு, கிழக்கிற்கு வேறொரு சட்டமும் நடைமுறையில் உள்ளன - என்றார்.

---

### 'சீபா' வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டு விடயங்களை உள்ளடக்கி 'சீபா' வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கைச்சாத்திடப் படவுள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் பொருள்களுக்கான வரிகள் நீக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் பரிமாற்றப்படுகின்றனர். இப்படிப்பட்ட ஒப்பந்தம் மூலம் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும். இறைமைக்கு இது அச்சுறுத்தலாக அமையும்.

இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியாவின் ஒரு மாநிலமாகவே இலங்கை கருதப்படுகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தை முற்றாகச் சீரழிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்தியா தற்போதுவரை இலங்கையில் 17வீத பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது.

சீபா மூலம் வரி நீக்கப்படுவதால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படும். வரி நீக்கப்படுவதால் மலிவு விலைகளில் பொருள்களோ அல்லது சேவைகளோ எமக்குக் கிடைக்காது.

சீபா மூலம் இந்திய வைத்தியர்கள் இங்கு தொழில்புரிய முடியும். அவர்களின் தகுதி தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது. இது எமது நாட்டு மக்களின் உயிர்களுடன் ஆடும் ஆட்டமாகும். - என் றார்.

இந்தக் கூற்றுக்கள் பதிலளித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சீபா ஒப்பந்தம் செய்வதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ள போதிலும் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. - என்றார். (ஒ-சி)

# சிறைக் கைதிகள் தப்பிய விவகாரம்; அதிகாரிகள் ஐவர் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 09

கொழும்பு மாளிகாகந்த 2ஆம் இலக்க நீதிமன்றத்தில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 11 சிறைக் கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் 5 சிறைச்சாலை அதிகாரிகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகளின் கவனயீனம் காரணமாகவே கைதிகள் தப்பியோடினார்கள் எனச் சிறைச்சாலை ஆணையாளர் கெனத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தப்பிச் சென்ற கைதிகளில் மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை ஒருவர் மருதானை தெழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் வைத்துக் கைது செய்யப்பட்டார். முச்சக்கர வண்டி ஒன்றில் தப்பிச் சென்ற போது தெமட்டகொட வீதிச் சமிக்ஞை அருகில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, நேற்றுப் பகல் (08.06. 2010)அத்திடிய படோவிட்ட பகுதியில் வீடு ஒன்றில் மறைந்திருந்த போது மற்றுமொரு கைதி கைது செய்யப்பட்டுள்ளார்.

தப்பி ஓடியவர்களுள் தண்டனை அனுபவித்து வரும் 9 கைதிகளும், விளக்கமறியலில் சந்தேக நபர்களாக இருக்கும் மூவரும் அடங்குகின்றனர் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

தப்பி ஓடியவர்கள் கொழும்பு, அம்பலாங்கொடை, மொரட்டுவ மற்றும் இரத்மலானைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

---

### அமெ. தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சௌந்தரநாயகம் உட்பட மற்றும் பலரைச் சந்தித்து, குடாநாட்டின் தற்போதைய நிலை மையைக் கேட்டறிவார்.

பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் புனரமைக்கப்பட்ட பள்ளிவாசலை அம்மையார் பார்வையிடவிருக்கின்றார்.

நாளையும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அம்மையாரின் விஜயம் குடாநாட்டு மக்களின் தற்போதைய நிலைமையை ஆராயும் நோக்கமாக அமையும் என தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-1-9)

---

### மீள்குடியமர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் இத்தகவலை இராணுவப் பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து அவர்கள் விசாரணை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 படையினர் நேற்றுக்காலை கிளிநொச்சி நீதிவான் பி. சிவகுமார் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப பெண்ணை வைத்திய பரிசோதனைக்காகக் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-1)

---

### மஹிந்த இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று இந்தியா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தும். மாகாண சபைகள் நிதிக்குழு மூலம் தமது நிதி நிலையைச் சீராக்க வசதியாக அந்த அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்படுவது அவசியம் என்றும் இந்தியா இலங்கையிடம் கோரும் என்று '' த இந்து'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேல் சபையை அமைக்கப் போவதாக இலங்கை முன்வைத்துள்ள யோசனையை இந்தியா பெரிதாக வரவேற்கவில்லை. இது அதிகாரப் பரவலாக்கலுக்கு எந்த விதத்தில் வகை செய்யமாட்டாது என்று இந்தியா கருதுவதாக '' த இந்து'' மேலும் குறிப்பிட்டுள்ளது.

போர் முடிந்து ஒரு வருடகாலம் கடந்துவிட்ட நிலையிலும் இனப்பிரச்சினைக்கு நேர்மையான அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காணப்படாது இனிமேலும் தாமதிப் பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டி இருப்பதாகவும் ''த இந்து'' பத்திரிகை தெரிவித்தது. (அ-1)

## நன்றி கூறுகின்றேன்

எனது தவறவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆவணங்களைக் கண்டெடுத்து அனைத்தையும் எனது வீட்டு முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்த அந்த நல்ல உள்ளத்துக்கு நன்றிகள்.

V.Presly.


YOGI'S BEAUTY

[The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science] புதிய பயிற்சி வகுப்புக்கள் 26.06.2010 ஆரம்பமாக உள்ளன.

எமது நிறுவனத்தில் அளிக்கப்படும் ADVANCED FACIAL சிகிச்சைகள்

* அழகுக்கலை [Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course]
* ADVANCED COSMETOLOGY [Diploma Course]
* நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் [Advanced Bridal Make Up-Hair Styles]
* 10 வகையான சாறி கட்டும் முறைகள்
* கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் [Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers]

பயிற்சி வகுப்புகளில் சேரவிரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Mrs Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Advanced Cosmetology [INDIA]
Diploma in Advanced Bridal Make-up & Character Make- up [INDIA]
Diploma in Home Economics [India & Srilanka]

* உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இவைகளுக்கு எமது நவீன DERMABRASION TREATMENT மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.
* Magic Facial [For Dark and Dry Skin]
* Skin whitning Facial
* Glycolic Treatment(Spa சிகிச்சைகள்)
* Cllogen Facial (For Dry & Aging Skin)
* Anti Polution Treatment(For oily Skin)
* Thalassic Therapy (For whit ning & Anti Bactierial)
* Gold Facial (For Brides)
* Oxigen Facial
* Skin Prepairing Facial For Brides
* Mole Implant - (மச்சம் வைத்தல்)
* Eye Bro Filling
* முடி உதிர்தல், பொடுகு போன்றவற்றிற்கு நவீன Spa சிகிச்சைகள்
* Warts Removal
* French Menicare & Nail Art

இப்படிப் பல சிகிச்சைகளுடன் மணப்பெண் அலங்காரங்களும் எமது சிறப்பம்சமாகும்

Phone No. 021 222 2796 · 021 321 0077 · 0777 164923 · 071 878 8814

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org